# தமிழரசு

விலை ரூ.10

செய்தி–மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

டிசம்பர் 2006







திருவள்ளுவர் ஆண்டு 2037
கார்த்திகை – மார்கழி
டிசம்பர் 2006
மலர் : 38 இதழ் : 6

# தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு


தென்னக நதிகளை தேசியமயமாக்க வேண்டும் (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்) 2

உயர்வு நோக்கிடும் பாதையிலே ஒவ்வொரு நாளும் சாதனைகள் 28

உபரி நீரை பகிர்ந்துகொள்வதே இயற்கை நியதி (மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்) 33

ரூ.45.67கோடி மதிப்பீட்டில் பெரம்பூர் மேம்பாலப்பணி 52

கன்னிமாரா நூலகம் 58

திருட்டு – சிறுகதை 66


## திருக்குறள்

**நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்**
**வித்தகர்க் கல்லால் அரிது.** குறள் : 235

துன்பங்களுக்கிடையே கூட அவற்றைத் தாங்கும் வலிமையால் தமது புகழை வளர்த்துக் கொள்வதும், தமது சாவிலும் கூடப் புகழை நிலை நாட்டுவதும் இயல்பான ஆற்றலுடையவருக்கே உரிய செயலாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை** : சென்னையில் நவீனரக சிறப்புப் பேருந்துகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இயக்கி வைத்தார். (3.12.06)

**இரண்டாம் பக்க அட்டை** : புதுடெல்லியில் நடைபெற்ற முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தை (29.11.06)

**நான்காம் பக்க அட்டை** : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புழல் மத்திய சிறை வளாகத்தைத் திறந்து வைத்தார். (26.11.06)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **சி.கோசலராமன்**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம் , ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926 / 25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in



# தென்னக நதிகளை தேசியமயமாக்க வேண்டும்

**9.12.2006 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களே! தேசிய வளர்ச்சிக் குழுவின் உறுப்பினர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியப் பொருளாதாரம் உன்னதமான அளவை எட்டியுள்ள இந்த நேரத்தில் இங்கு நாம் அனைவரும் இன்று ஒன்றாகக் கூடியுள்ளோம். இந்தப் பின்னணியில் பதினொராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அணுகுமுறை ஆவணத்தைப் பற்றி நாம் விவாதித்துக் கொண்டிருக்கின்றோம்.

11ஆவது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை ஆவணம் ஒரு பக்கம் துணிவான நோக்கத்தினைக் கொண்டுள்ளதெனினும், அது எய்திடக் கூடிய அளவிலேயே அமைந்துள்ளத்தைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். 9 சதவிகிதம் வளர்ச்சியை அடைந்திட உத்தேசித்துள்ள அதேவேளையில், அந்த வளர்ச்சியின் பயன்கள் ஏழை எளியோரைச் சென்றடையாவிட்டால், துரித வளர்ச்சி என்று சொல்வதற்குப் பொருளேதும் இல்லாமல் போய்விடும் என்பதை அணுகுமுறை ஆவணம் கவனத்தில் கொண்டுள்ளது.

நமது மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வேளாண்மையையே சார்ந்துள்ளனர். வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் ஊட்டுவதில் நாம் எடுக்கும் முயற்சியின் அடிப்படையிலேதான் பதினொராவது திட்டத்தின் வெற்றி அமையும்.

ஒரு பக்கம் வறட்சி மற்றும் நீர்ப் பற்றாக்குறையினால் வேளாண்மை பொய்த்து வருவதை நாம் பார்த்து வருகின்றோம். மறுபக்கம், நதிகளில் நிகழும் வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் கடுஞ்சேதத்தையும் மற்றும் 40,000 டி.எம்.சி. அளவுக்கும் அதிகமான நீர் யாருக்கும் பயன்படாமல் வீணே கடலிலே போய்க் கலக்கின்ற ஒரு நிலையையும் சந்தித்து வருகிறோம். ஆனால், நாம் குடி நீருக்காகவும், பாசனத்திற்காகவும். மிகக்குறைவான 1 டி.எம்.சி. அல்லது 2 டி.எம்.சி. தண்ணீருக்காக ஒருவருக்கொருவர் சண்டையிட்டு வருகிறோம். இதுதான் இந்திய முரண்பாடாகும்.

வேளாண்மைத் துறையை முன்னேற்றுவதும், அதற்குப் புத்துயிர் அளிப்பதும்தான் நமது நோக்கம் ஆகும். அதன்மூலம், நம் விவசாயிகள் தொடர்ந்து வருமானத்தை ஈட்டவும், அதன் பயனாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிய அளவிலே பங்களித்திடவும் முடியும். புதிய பாசன ஆதாரங்களை உருவாக்கிடாமல் இது சாத்தியமாகாது. 50 ஆண்டுகளாக நதிகளைத் தேசியமயமாக்குவது மற்றும் அவைகளை இணைப்பது பற்றி நாம் தொடர்ந்து பேசி வருகின்றோம். அதனை நிறைவேற்ற வேண்டிய காலம் இப்போது வந்து விட்டது. தீபகற்ப நதிகளை இணைப்பதில் உலகளாவிய சிக்கல்கள் எதுவும் இல்லை. தேசிய நீர் மேம்பாட்டு முகமை தீபகற்ப நதிகளை இணைப்பதற்கான சாத்தியக் கூறு அறிக்கைகளைத் தயாரித்து; அத்திட்டம் நடைமுறைக்குச் சாத்தியமானதுதான் எனக் கணித்துள்ளது.

*நதிகளை, குறிப்பாகத் தென்தீபகற்ப நதிகளைத் தேசியமயமாக்குவதற்கும் மற்றும் இணைப்பதற்கும் பரிந்துரைத்திடுமாறு தேசிய வளர்ச்சிக் குழுவை நான் வலியுறுத்துகிறேன். மேலும் பதினொராவது திட்டத்தில் அத்திட்டம் சேர்க்கப்பட்டு அதற்குத் தேவையான நிதி வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும்.*

இந்தியா போன்ற நாட்டில், தொழில்நுட்பம் முன்னேறியும் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் வரத் தொடங்கியும் உள்ள நிலையில், பெரிய நதிகளைக்கூட நமது தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்வதென்பது இயலக் கூடியதுதான்.

நதிகளை, குறிப்பாகத் தென்தீபகற்ப நதிகளைத் தேசியமயமாக்குவதற்கும் மற்றும் இணைப்பதற்கும் பரிந்துரைத்திடுமாறு தேசிய வளர்ச்சிக் குழுவை நான் வலியுறுத்துகிறேன். மேலும் பதினொராவது திட்டத்தில் அத்திட்டம் சேர்க்கப்பட்டு அதற்குத் தேவையான நிதி வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும். நதிகளை இணைப்பதால், வெள்ளத்தைத் தடுக்கும் முயற்சிகளுக்கு உதவுவதோடல்லாமல் ; வறட்சி மற்றும் நீர்ப் பற்றாக்குறை உள்ள இடங்களுக்குப் பாசன வசதியை ஏற்படுத்து வதற்கும் உதவும். அது உறுதியான வேளாண்மை வளர்ச்சிக்கும், ஊரக ஏழை மக்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் உதவுகிறது. இதனால் குறைந்த செலவில் அதிக அளவு புனல் மின்சாரம் கிடைக்கவும், நமது நாட்டில் நீர்வழிப் போக்குவரத்து வசதி ஏற்படவும் உதவியாக இருக்கும். இந்த வகையில் நாம் எடுக்கும் முயற்சிகள் மிகுந்த பயனளிக்கக் கூடியதாகவும், நமது வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான வேளாண்மைத்துறை வரும் ஆண்டுகளில் நீடித்து நிலைத்து நின்று நமது நாட்டின் வளர்ச்சிக்கு உற்ற



துணையாகவும் அமையும். நாம் இப்போதே விழித்தெழுந்து செயலாற்றத் தவறிவிட்டால், எதிர்காலச் சந்ததியினர் நம்மைக் கிஞ்சிற்றும் மன்னிக்கமாட்டார்கள்.

வரிச் சீரமைப்பு முறையைத் தொடர்வது என்ற நிலையில், வரிவிதிப்புக் கொள்கையை முடிவு செய்து கொள்ளக் கூடிய வாய்ப்பினை மாநிலங்களே பயன்படுத்திக் கொள்வதன் அவசியத்தை நாம் மறந்துவிடக்கூடாது. சில மாநிலங்களில் உற்பத்தி செய்யும் பொருள்களின் மீதான ஆயத்தீர்வைகளை முழுவதுமாக மத்திய அரசு விலக்கிக் கொண்டுள்ளது. இது செயற்கையான முறையில் மூலதனத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பெயர்த்துச் செல்லும் சூழ்நிலையை உருவாக்குகிறது. இந்த வேறுபாடுகளை உடனே களைந்திட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

அனைவருக்கும் பாதகமானதும், ஏழை எளியோருக்கு உதவுவதற்கான நிதியாதாரங்களைக் குறைப்பதுமான, விலக்கு அளித்திடும் ஆரோக்கியமற்ற வரிக்கொள்கைப் போட்டியைத் தவிர்க்கும் வகையில் ஓர் அமைப்பை நாம் அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்கிட வேண்டும் என்று மாநில முதல்வர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

சேவைவரி விதிக்கும் அதிகாரத்தை மத்திய அரசே வைத்துக்கொண்டுள்ளது. சேவைவரி மாநிலப்பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். அவ்வரி வசூல், மாநிலங்களால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டும். மத்திய அரசுடன் அந்த நிதி பகிர்ந்து கொள்ளப்படலாம்.

மத்திய விற்பனை வரியைப் படிப்படியாக நீக்குவதற்கான இழப்பீட்டுத் தொகை என்பது மற்றொரு கவலையளிக்கக்கூடிய அம்சமாகும். மத்திய விற்பனை வரியைப் படிப்படியாக நீக்குவதற்கு நாங்கள் உடன்பட்டாலும், அதிகாரமளிக்கப்பட்ட நிதியமைச்சர் களடங்கிய குழுவின் பரிந்துரைகளின்படி, நிதி இழப்பீடு இருக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

அணுகுமுறை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி, தமிழ்நாடு, மின்சாரத்தில் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக இழப்புகளைக் குறைத்ததில் நாட்டிலேயே சிறந்த சாதனையைச் செய்துள்ளது. தமிழ்நாட்டில் மின்வாரியம் இன்னும் பிரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அதனைப் பிரிப்பதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சூழ்நிலைகளின் அடிப்படையில் மின்சார நிறுவனத்தை அமைத்துக் கொள்வதற்கு ஏற்றவாறு மின்சார சட்டத்தில் தகுந்த திருத்தத்தை ஏற்படுத்திட வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து மாவட்ட தலைமை நகரங்களிலும் கழிவுநீர் திட்டங்களைச் செயல்படுத்துவது என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. கழிவுநீர்த் திட்டங்கள் நீண்ட பயனளிக்கும் கால அளவினைக் கொண்டுள்ளன. அவை 40 முதல் 50 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் நிதிப்பயனளிப்பதாக அமையும். 10 முதல் 15 ஆண்டுகளில் முதிர்வடையும் கடன்களைக் கொண்டு கழிவுநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த முயற்சி செய்யும் மாநிலங்களுக்கு இது பிரச்சினைகளை உருவாக்குகிறது. இதே போன்ற பிரச்சினை பொது போக்குவரத்துத் துறையிலும் இருக்கின்றது. 40 முதல் 100 ஆண்டு காலம் கொண்ட கடன் பத்திரங்களைக் கையாளும் ஒரு நீண்ட கால கடன் சந்தை நாட்டிற்குத் தற்போது மிகவும் அவசியமாகிறது. ஒரு நீண்ட கால கடன் சந்தையை இந்தியாவில் ஏற்படுத்துவதற்கு என ஒரு பணிமுனைப்புக் குழுவை உடனடியாக அமைத்திட வேண்டும் என மத்திய நிதியமைச்சகத்தையும் இந்திய ரிசர்வ் வங்கியையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு இடைநிலைக் கல்வியை அனைவருக்கும் அளிக்கக் கருதியுள்ளது. பதினொராவது திட்டத்தில் இடைநிலைக் கல்விக்கெனத் தனியே 'அனைவருக்கும் கல்வித் திட்டம்' ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும் எனத் திட்டக்குழுவைக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் ஏற்கெனவே பெரும்பாலான குடியிருப்புகள் சாலைகளால் இணைக்கப்பட்டு அவற்றிற்குக் குடிநீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டுவிட்டன. மேலும், மாநிலத்தின் பாசன ஆதாரமும் மற்ற மாநிலங்களைவிட அதிக அளவு பயன்படுத்தப்பட்டுவிட்டது. இதன் காரணமாக 'பாரத் நிர்மாண்' திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதி ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை. தமிழ்நாட்டைப் போன்று செம்மையாகச் செயல்படும் மாநிலம், அது அடைந்த வெற்றிக்காக மறைமுகமாகத் தண்டிக்கப்படுகிறது என்பதையே இது உணர்த்துகிறது. 'பாரத் நிர்மாண்' திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒரு சிறப்பு விலக்கு அளித்திடுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஊரக மின்வசதித் திட்டத்திற்குப் பதிலாக 'பாரத் நிர்மாண்' திட்டத்தின் கீழ் ஏழைகளுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குவதற்கு நிதி அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்ற திட்டங்கள், காலப்போக்கில் ஏழைப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வழி வகுக்கும்.

நிதிப் பற்றாக்குறைக்கான உரிய அளவு இன்னும் நிர்ணயிக்கப்படாமலேயே உள்ளது. இது தொடர்பாக, ஒரு வெளிப்படையான மற்றும் ஆக்கபூர்வமான விவாதத்தை நாம் மேற்கொள்ள வேண்டும். நிதிச் சீர்திருத்தம் மற்றும் வரவு செலவுத்திட்ட மேலாண்மை (FRBM) இலக்குகளைத் தளர்த்திடும்போது, அது மாநிலங்களுக்கும் பொருந்தும் வகையில் அமைந்திட வேண்டும் என்ற ஓர் அம்சத்தை நான் வலியுறுத்திட விரும்புகிறேன்.

தமிழக அரசு, புதியதாகப் பொறுப்பேற்றவுடன் முதல் வரவு–செலவுத் திட்டத்திலேயே மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தினை 1.1.2007 முதல் செயல்படுத்தும் ஒரு முடிவினை மேற்கொண்டது. ஒரே சீரான மதிப்புக் கூட்டு வரி திட்டத்திற்கு மாறுவதால் தொடக்க ஆண்டில் கணிசமான அளவு வருவாய் இழப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இழப்பு ஈடுகட்டப்படாத பட்சத்தில், பதினொராவது திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வது என்பது பெரும் பாதிப்புக்குள்ளாகக்கூடும். 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தைச் செயல் படுத்திய மாநிலங்களுக்கு வழங்கியதைப் போலவே, தமிழ்நாட்டிற்கும் முதல் வருடத்தில் 100 விழுக்காடு இழப்பீடும், இரண்டாவது வருடத்தில் 75 விழுக்காடும், மூன்றாவது வருடத்தில் 50 விழுக்காடு இழப்பீடும் வழங்கவேண்டியது மிகவும் அவசியம். அவ்வாறு இழப்பீடு வழங்கப்படாத நிலையில், திட்ட செலவுகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை எதிர்கொள்வது கடினமாகிவிடும் என்று நான் கவலைப்படுகிறேன். மதிப்புக் கூட்டுவரியை நடைமுறைப்படுத்தும் முடிவு முன்னரே எடுக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக இழப்பீடு வழங்க மறுப்பது நியாயமானதாக இருக்காது.

நாம் பதினொராவது திட்டத்தினை அடைந்துள்ள நிலையில், திட்டமிடும் முறைகளையே ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு இது ஒரு சரியான தருணம் ஆகும் எனக் கருதுகிறேன். முதலாவதாக, 'திட்டம்' மற்றும் 'திட்டம் – சாராதது' ஆகியவற்றிற்கு இடையே உள்ள செயற்கையான வேறுபாட்டினை நீக்கிட வேண்டும். இரண்டாவதாக, மாநில திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கும் நடைமுறைகள் யாவும் தேவையற்ற, எளிதில் பின்பற்ற இயலாத, பெரும்பாலும் பழமையானதாக உள்ளன. தமிழ்நாட்டின் 2006–2007 ஆம் ஆண்டுத் திட்டத்தில்,

76 விழுக்காடு மாநிலத்தின் சொந்த நிதி ஆதாரத்தின் மூலம் செலவு செய்யப்படுகிறது. தற்போதைய 'திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும் நடைமுறைகள்' திட்டச் செலவு முழுவதும் மத்திய திட்டக் குழுவினால் அளிக்கப்படுகிறது என்ற ஒரு தவறான தோற்றத்தை ஏற்படுத்துகின்றன. மூன்றாவதாக, வெவ்வேறு மாநிலங்களின் தேவைகளுக்கேற்ப, நிபந்தனைகளில் மாற்றம் செய்து, மத்திய அரசு செலவு பொறுப்பேற்கும் மற்றும் உதவி பெறும் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு சமூக நீதியின் பிறப்பிடம். சுமார் 85 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டில் நீதிக்கட்சி ஆட்சியிலிருந்தபோது, 16.9.1921 அன்று அரசுப் பணிகளில் வகுப்பு அடிப்படையிலான இடஒதுக்கீடு வழங்கி முதல் அரசாணை வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் வெகுகாலமாக அரசுப் பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு நடைமுறையில் இருந்து வருகின்றது. இன்று அது 69 சதவிகிதத்தை எட்டியுள்ளது.

இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தியாவின் மக்கள் தொகையில் 70 சதவிகிதத்தினர் பிற்படுத்தப்பட்டோராக இருந்த போதிலும், வெறும் 27 சதவிகித இடஒதுக்கீடு மட்டுமே பரிந்துரைக்கப்பட்டது. அதன்பின்னர், பல்லாண்டு காலம் கடந்து விட்டது. எனினும், இன்னமும் இடஒதுக்கீடு குறித்து விவாதித்து வருகின்றோம். மத்திய அரசின் அனைத்துப் பணிகளிலும், மத்திய அரசின் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு அளிப்பதை, எவ்விதத்திலும் நீர்த்துப் போய்விடாமல், முழுமையாக – ஒட்டு மொத்தமாக உடனேயே நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் மக்கள் தொகைக்கேற்ப அந்தந்த மாநிலங்களில் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று அனைத்து முதலமைச்சர்களுக்கும் பத்தாண்டுகளுக்கு முன்பு கடிதம் எழுதினேன். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இடஒதுக்கீட்டை அந்தந்த மாநிலங்களே நிர்ணயம் செய்யலாம் என்று கடந்த மாதம் அனைத்து முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

*இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களின் மக்கள் தொகைக்கேற்ப அந்தந்த மாநிலங்களில் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்று அனைத்து முதலமைச்சர்களுக்கும் பத்தாண்டுகளுக்கு முன்பு கடிதம் எழுதினேன். இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இடஒதுக்கீட்டை அந்தந்த மாநிலங்களே நிர்ணயம் செய்யலாம் என்று கடந்த மாதம் அனைத்து முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.*

பெண் உரிமை பற்றி நாம் பேசி வருகின்றோம். பெண்களுக்கு உரிமை வழங்கப்படவேண்டும் என்பதில் எங்கள் கட்சிக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாய் இயக்கமான சுயமரியாதை இயக்கத்தின் மாநாடு 1929இல் செங்கல்பட்டில் நடந்தது. சொத்தில் பெண்களுக்குச் சமஉரிமை வழங்குவது குறித்து ஒரு தீர்மானம் அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது என்பதை அறிந்தால் இந்த அவை ஆச்சரியப்படக்கூடும். 1989இல் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சியிலிருந்தபோது, பெண்களுக்குச் சமசொத்துரிமை அவசியம் என்பதை உணர்ந்து ஒரு சட்டம் இயற்றப்பட்டது. 1996இல் உள்ளாட்சி அமைப்புகளில் தமிழ்நாடுதான் முதன் முதலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கியது. பல்வேறு நலத்திட்டங்களையும் பெண்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக நாங்கள் நடைமுறைப் படுத்தி வருகிறோம். நாங்கள் அளித்த வரும் சலுகைகளில் சில :

- ★ இந்த ஆண்டில் ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக ரூ. 15,000 என்ற வீதத்தில், சாதி



மத வேறுபாடின்றி 40,000 ஏழைப் பெண்களுக்கு நிதியுதவி;

★ இந்த ஆண்டில் 1.66 இலட்சம் கருவுற்ற தாய்மார்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு அவர்தம் ஊட்டச்சத்து அளவினைச் சீராக வைத்துக் கொள்வதற்குத் தலா ரூ.6,000 நிதியுதவி;

★ கலப்புத் திருமணம் மற்றும் விதவை மறுமணத்திற்கு நிதியுதவி;

★ மகளிர் சிறுவணிகக் கடன்;

இவ்வகைத் திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதியுதவி கிடைக்குமானால், இத்திட்டங்களை நாங்கள் இன்னும் பெரிய அளவில் செயல்படுத்திட இயலும்.

நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடுக்கான சட்டமுன்வடிவு ஏற்கெனவே நிலுவையில் உள்ளது. திருமதி. சோனியாகாந்தி அவர்கள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக இருந்திடும் இந்தக் காலகட்டத்திலேயே மகளிருக்கான இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அது மிகப் பொருத்தமான நிகழ்வாக அமையும். இந்தியாவை உண்மையான ஜனநாயக வழியில் நடத்திச் செல்வதற்கு, இதில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு பொது முடிவினை விரைவில் எடுக்கும்படி அனைத்து அரசியல் கட்சிகளையும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

சமூக நீதி மற்றும் மகளிர் உரிமைகளை நிலைநாட்டுவது மட்டுமே திட்டத்தின் நோக்கங்களை எய்துவதற்கு வழிவகுக்கும். மேலும், திட்டச் செலவுகளும் அவற்றின் பயன்களும் ஏழை மற்றும் அடித்தட்டு மக்களைச் சென்று அடைவதற்கும் இது உதவும்.

பதினொராவது ஐந்தாண்டுத் திட்டத்தினைத் தயாரிக்க ஒரு நல்ல அடிப்படையை அமைத்துக் கொடுக்க வழிகோலும் அணுகுமுறை ஆவணத்தைக் கொண்டு வந்துள்ள மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கும், மத்திய திட்டக் குழுவிற்கும் எனது அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். திட்டத்தை வெற்றிகரமாக உருவாக்குவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் வேண்டிய அனைத்து ஆக்கபூர்வ முயற்சிகளையும் மேற்கொள்வதில் தமிழக அரசு முன்னணியில் நிற்கும் என்று தேசிய வளர்ச்சிக் குழுவிற்கு உறுதி அளிக்க விழைகின்றேன்.

நன்றி. வணக்கம். ★

# திருமதி சோனியா காந்தி அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு



முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து பேசுவதற்காக டெல்லி சென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களை, 29.11.2006 அன்று அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார். அப்போது, மாண்புமிகு மத்திய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்களும் உடன் இருந்தார். இலங்கையிலிருந்து அகதிகள் வருவது குறித்தும், இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்தும், சென்னையில் அண்மையில் சந்தித்த பிரதமரின் தூதுவர் திரு. எம்.கே. நாராயணன் மற்றும் வெளியுறவுத் துறை செயலாளர் திரு. சிவசங்கர மேனன் ஆகிய இருவரும் தெரிவித்த விவரங்களைப் பற்றியும் திருமதி சோனியா காந்தி அவர்களும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் கலந்துரையாடினார்கள்.

## சென்னையில் தமிழ் செம்மொழி ஆய்வு மையம்

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்து கேரள மாநில முதலமைச்சருடன் மத்திய அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒருநாள் பயணமாக டெல்லி சென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. அர்ஜூன்சிங் அவர்களை அவரது இல்லத்தில் 29.11.2006 அன்று சந்தித்து உரையாடினார். அப்போது, தமிழ் மொழியை செம்மொழியாக அறிவித்ததைத் தொடர்ந்து, தொல்காப்பியர், திருவள்ளுவர் பெயரால் இரண்டு விருதுகளை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டு மென்றும், சென்னையில் தமிழ் செம்மொழி ஆய்வு மையம் ஒன்றினை அமைப்பது பற்றியும் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அமைச்சர் அவர்களிடம் 27 சதவிகித இட ஒதுக்கீடு பிரச்சினையில் இனியும் தாமதம் செய்யாமல், விரைவில் அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திட நடவடிக்கைகள் எடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே அதற்கான முயற்சிகளில் உடனடியாக ஈடுபடுவதாக மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அர்ஜூன் சிங், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் உறுதியளித்தார்.

இச்சந்திப்பின்போது மாண்புமிகு மத்திய தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன் அவர்கள் உடன் இருந்தார்.



## நாடாளுமன்றத்தில்
## திராவிட இயக்கச் சிந்தனையாளர்
# முரசொலி மாறன் சிலை திறப்பு

**நா**டாளுமன்றத்தில் நீண்ட காலம் உறுப்பினராகப் பணியாற்றி, தமிழ்நாட்டின் உரிமைக்காக குரல் கொடுத்தவரும், "தோஹா" மாநாட்டில் இந்தியாவின் குரலைப் பிரதிபலித்தவரும், திராவிட இயக்கச் சிந்தனையாளருமான **முரசொலி மாறன்** அவர்கள் ஆற்றிய அளப்பரிய பணிகளை நினைவுகூறும் வகையில் முரசொலி மாறன் அவர்களது திருவுருவச் சிலை புதுடெல்லி, நாடாளுமன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

இச்சிறப்பான விழாவில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், முரசொலி மாறன் அவர்களது திருவுருவச் சிலையை **8.12.2006** அன்று திறந்து வைத்தார்.

இவ்விழாவில், மாநிலங்களவைத் தலைவரும் மேதகு குடியரசு துணைத் தலைவருமான திரு. பைரான் சிங் செகாவத் அவர்கள், மாண்புமிகு மக்களவைத் தலைவர் திரு.சோம் நாத் சட்டர்ஜி அவர்கள், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மற்றும் முன்னாள் துணைப் பிரதமர் திரு. எல்.கே.அத்வானி, காஷ்மீர் மாநில முன்னாள் முதல்வர் திரு. பரூக் அப்துல்லா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய செயலாளர் திரு. டி. ராஜா, மார்க்சிஸ்ட் கட்சி தலைவர் திரு. வாசுதேவாச்சாரி, சமாஜ்வாடி பொதுச் செயலாளர் திரு. அமர்சிங், தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம்.கிருஷ்ணசாமி, மராட்டிய மாநில முன்னாள் ஆளுநர் திரு. பி.சி. அலெக்சாண்டர், தெலுங்குதேசம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எர்ரான் நாயுடு உள்ளிட்டோரும், மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன், தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள் மற்றும் நாடாளுமன்ற, தமிழக சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ■



②





# நம் குடிகாக்கப் போரிட்டவருக்கு கொடி நாளில் நன்றி செலுத்துவோம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
சென்னை பொதிகை தொலைக்காட்சியிலும்
வானொலியிலும் 7.12.2006 அன்று
ஆற்றிய கொடிநாள் உரை.

அன்பிற்குரிய தாய்மார்களே,

பெரியோர்களே,

நண்பர்களே,

என் உயிரினும் மேலான
அன்பு உடன் பிறப்புகளே,

வணக்கம்.

*இன்று கொடி நாள்!*

*நமது நாட்டுத் தேசியக் கொடியை*
*நினைந்து வணங்கும் திருநாள், இந்தக்*
*கொடி நாள்!*

*நாட்டு வரலாற்றில் வீரத்தின் சின்னமாய்*
*நிலைபெற்று விட்ட, "அஞ்சா நெஞ்சன்*
*பகத்சிங் ஏற்றிட நினைத்த நமது கொடி—*

*அறப்போர் வீரன் திருப்பூர் குமரன்*
*திருக்கரம் ஏந்திய தேசியக் கொடி—*
*பற்று மிகக் கொண்டு நாட்டின் மீது—*
*பாஷ்யம் என்ற வீர இளைஞன் —*
*கோட்டை கொத்தளத்தில் ஏறி*
*கொடிக்கம்பத்தில்*
*பறக்கவிட்ட*
*பார்புகழும் மணிக்கொடி—*
*அல்லும் பகலும் அணுப்பொழுதும்*
*மறவாமல்*
*அன்னைத் திருநாட்டின் அடிமைத்தனம்*
*அகற்றிட*

*அண்ணல் காந்தியடிகள் உயர்த்திப் பிடித்த*
*உரிமைக் கொடி –*
*வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலில்*
*பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும்*
*வீரர்களின் மண்டையோடுகளை முத்தமிட்டபடி*
*பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும்*
*அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு*
*முகம் சுளிக்காமல் – முகாரி பாடாமல் –*
*முதுகு காட்டாமல் –*

"முன்னேறு நீ" "முன்னேறு நீ"
என்று முரசொலித்து

*எஞ்சிய வீரர்களை நெஞ்சுரம் கொள்ளச் செய்து*
*எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ*
*எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு பாயுமோ என்று*
*சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பதும்*
*வீரர்களுக்கு அழகில்லை என்ற*
*போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும் மறந்து விடாமல் –*
*மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச் செண்டு,*
*மங்கையின் இதழை விடச் சுவையானது என்ற*
*மனோபலத்தோடு இந்த மண் மீட்கப் போர்புரிந்து*
*மாண்டவர்களின் குருதிப் புனலிலே*
*தோய்த்தெடுத்த கொடி ! இந்தக் கொடி !*

இன்று கோட்டை முதல் குடிசை வரை
நாடு முழுதும் பட்டொளி வீசிப் பறக்கிறது!

இந்தக் கொடி பறக்க ஏறத்தாழ இருநூறு ஆண்டுகாலம் இங்கிலாந்து நாட்டுப் பேரரசை எதிர்த்துப் போராடி இன்னுயிர் ஈந்த, செக்கிழுத்துச் சிறைப்பட்ட, சொத்து சுகங்களை இழந்து சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆட்பட்ட வீரத் தியாகிகளை நினைவுகூர்ந்து நமது வீர வணக்கத்தைச் செலுத்திட நமக்கு உணர்வூட்டும் உன்னதப் பெரு நாள் இந்தக் கொடி நாள்!

இந்நாளில் வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதும் வாழ்த்துரைப்பதும் நமது தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடுகளிலே ஒன்றாகும்.

பிஞ்சு நெஞ்சு முதல் வீர உணர்வுகளைத் தாய்ப்பாலாக ஊட்டி, இளைஞர்களை வீரம் கொப்பளிக்க வளர்த்து ஆளாக்குவதை இயல்பாகக் கொண்டது தமிழினம் என்பதை நமது இலக்கியங்கள் சொல்கின்றன.

*"ஈன்றுபுறம் தருதல் என்தலைக் கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*
*வேல் வடித்துக் கொடுத்தல்*
*கொல்லற்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்*
*களிறெ றிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"*

– என்று ஒரு குழந்தையை வீரனாக்கி வளர்ப்பதில், சமுதாயத்திலே ஒவ்வொருவருக்கும் உள்ள கடமை எது என்பதனை உணர்த்தி, இளைஞர்களை வீரர்களை உருவாக்கி வளர்த்த சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!

*உன் மகன் எங்கே என்று*
*கேட்டவர்க்குத்*
*தன் வயிற்றையே சுட்டிக் காட்டி, இது வயிறல்ல;*
*இது புலிக்குகை; இக்குகையிலிருந்து*
*புறப்பட்ட புலிதான் என் மகன்! அவன்*
*எங்கே இருப்பான் ?*
*போர்க்களத்தில்தான் இருப்பான் என்று*
*பெருமிதம் தோன்ற மகனுடைய*
*வீரத்தை மற்றவர் முன் பாராட்டி*
*மகிழும் மறக்குல மகளிராகப்*
*பெண்களெல்லாம்*
*விளங்கிய சமுதாயம் தமிழ்ச்*
*சமுதாயம்!*

முதல் நாள் போரிலே தன் தமையன் யானையோடு போரிட்டு, அதனை வீழ்த்தித் தானும் மடிந்தான்; அடுத்தநாள் போரில் அவளுடைய ஆசைக் கணவனும் போர்க்களம் சென்று வீழ்ந்துபட்டான்;

அடுத்த நாளும் போர்ப்பறை முழங்கக் கேட்கிறாள் ஒரு வீரமங்கை! உள்ளம் பதறுகிறது அவளுக்கு! அவளுக்கு இருப்பதோ ஒரே மகன்! அவனும் சிறுவன்! ஒரு கணமும் வீணாக்காமல் அழைத்தால் அவனை! பரந்துகிடந்த அச்சிறுவனின் தலைமுடியில் எண்ணெய் தடவி, வாரி முடித்து, வெள்ளாடை உடுத்தி, வேல் கைகொடுத்து, செல்க மகனே! சீறிவரும் பகைவர்களைக் கொன்று வெற்றியோடு மீண்டுவா என் செல்வ மகனே! என்று கூறி அவனைப் போருக்கு அனுப்பினாள் அவள்!

அந்த வீரமங்கையின் தீரத்தை – மன எழுச்சியை – இந்த நாட்டின்மீது அவள் கொண்ட பற்றைக் கண்டோரெல்லாம் சிந்தை மறந்து செய்வதறியாது வியந்து நின்றார்கள் என்று புறநானூறு புகல்கிறது.

இப்படி வீரத்திலும் நாட்டுப் பற்றிலும் ஆணுக்குப் பெண் இளைப்பின்றி, ஆணும் பெண்ணும் சிறந்து விளங்கிய வீர சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!

வீரத்தைப் போற்றி வளர்த்த சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!

அந்த உணர்வோடு இன்றைய நிலையிலும் தமிழக அரசு வீரத்தை மதிக்கிறது. வீரர்களைப் போற்றுகிறது.

நமது முப்படை வீரர்களும் போர்க் காலங்களில் மட்டுமல்லாமல், எல்லைப் புறங்களைக் காத்திடும் பணிகளிலும், புயல், பெருமழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுவோரை மீட்டுக் காப்பதிலும் ஈடுபட்டு எல்லையில்லா இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அந்த மாவீரர்கள் கொட்டும் மழை, கொடுங்குளிர், கடும்பனி, என எதுவாயினும் கலங்காது நின்று கடமையாற்றுகிறார்கள்.

அத்தகைய தியாகத் திருச்சுடர்கள் அனைவர்க்கும் ஊக்கம் தர, "உங்களைக் காக்க – உங்கள் குடும்பத்தைக் காக்க, நாங்கள் இருக்கிறோம் ; கலங்காது நின்று கடமையாற்றுங்கள்" என அந்த மாவீர மாமணிகளுக்கு மனவலிமையூட்டிட நாடு கடைப்பிடித்திடும் நல்ல திருநாளாகக் கொடி நாளைக் கருதுகிறோம்.



*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7-12-2006 அன்று அவரது இல்லத்தில் கொடிநாள் நிதி அளித்தார்.*

நமது வாழ்வு, நமது மகிழ்ச்சி, நமது சுதந்திரம், நமது நாட்டுரிமை, நமது பாதுகாப்பு அனைத்துக்கும் அந்த வீரர்களே பொறுப்பேற்றுள்ளார்கள். நம் குடிகாக்கப் போரிட்டவருக்கு இந்தக் கொடி நாளில் நன்றி செலுத்துதலே முறையாகும்.

கொடிய போர்க்களத்தில் தாம் இருந்தாலும் தம்மை நம்பி இருக்கும் குடும்பத்தைக் காப்பாற்ற நாடு இருக்கிறது,

நாமெல்லாம் இருக்கிறோம் என்ற நம்பிக்கையில்தானே அந்த வீரர்கள் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்தம் நம்பிக்கையை நாசம் அடைய விடமாட்டோம். மாசுமருவற்ற அந்த மாணிக்கங்களின் குடும்பத்தில் வறுமை எனும் தூசுபடர விடமாட்டோம் என்னும் உணர்வோடு இந்தக் கொடிநாளில் நிதி வழங்கிடுவோம்.

நாடு காக்கும் திருப்பணிகளுக்கு நிதி வழங்குவதில் தமிழகம் என்றும் முன்னணியிலே நிற்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளது.

1962 இல் சீனப் போரின் போது ஆட்சியில் நாம் இல்லாதபோதும், பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணையை ஏற்று, சேலத்திலே மாநாடு நடத்தி, போர் நிதி திரட்டி அந்நிதியை அப்போதைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களிடம் சேர்ப்பித்தோம்.

1971 இல் பாகிஸ்தான் நம்நாட்டின் மீது போர் தொடுத்தது. 7.12.1971 அன்று வானொலியில் ஆற்றிய "கொடிநாள்" உரையில் நான் அறிவித்ததற்கு ஏற்ப, இந்திய – பாகிஸ்தான் போரிலே உயிர்நீத்த தமிழகத்தைச் சேர்ந்த வீரர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தமிழக அரசின், சார்பில் நிதி வழங்கியதோடு அவர்கள் குடும்பம் நன்றாக இருந்தால்தான், அவர்கள் வாழ்வு நன்றாக இருந்தால்தான், நமக்கு வாழ்வு என்பதால் அவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் நஞ்சையாக இருந்தால் ஒன்றரை ஏக்கர் நிலமும், புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கர் நிலமும் இலவசமாக அளித்தோம்.

1972ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாள்; இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களைச் சென்னைக்கு அழைத்து அவருடைய கையில் 6 கோடி ரூபாயைப் போர்நிதியாக வழங்கினோம்.

அதேபோல, 1999 இல் நிகழ்ந்த கார்கில் போராட்டத்தின் போதும், தமிழக மக்கள் வழங்கிய 59 கோடி ரூபாயில், 50 கோடி ரூபாயை அந்நாளைய பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களிடம் தேசியப் பாதுகாப்பு நிதிக்காக வழங்கினோம்.

கார்கில் போரில் உயிரிழந்த தமிழகத்தைச் சேர்ந்த 19 வீரர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியதோடு, உயர்வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்றும், அவ்வீரர்கள் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பும் அளித்தோம்.

எஞ்சிய தொகை, 'கார்கில் இராணுவ வீரர் நிவாரண நிதி' என இருப்பு வைக்கப்பட்டு, அந்நிதியிலேயிருந்து எல்லைப் புறங்களில் பாதிக்கப்படும் தீரர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இப்படி இயன்ற வழிகளில் எல்லாம் முன்னாள் படைவீரர் நலம் காப்பதில் நாம் முனைப்போடு செயல்பட்டு, இந்திய அளவில் தமிழகத்திற்குப் பெருமைகள் சேர்த்துள்ளோம். இந்தப் பெருமைகள் தொடர, இந்த ஆண்டின் கொடிநாள் நிதி வழங்குவதிலும் அதிக நிதி அளித்துச் சாதனைகள் படைத்திடுவோம்.

*நாடு காக்கும் வீரர்களின்*
*நலம் காப்போம் !*
*அவர்தம் குடும்பங்கள் உளம் மகிழ*
*வளம் சேர்ப்போம் !*
*"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!*
*நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!*
*விதியினை எதிர்த்து வீரம் விளைத்த*
*தீரர் குடும்பம் கதியில்லை யெனக்*
*கதறி அழவிடாது கை கொடுப்பீரே !"*

என்று என்னருமைத் தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.



# சென்னையில் நவீன ரக சிறப்புப் பேருந்துகள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இயக்கிவைத்தார்

தமிழக சட்டப்பேரவையில் 2006 – 2007 ஆம் ஆண்டுக்கான போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகங்களால் இயக்கப்பட்டுவரும் பேருந்துகளில், பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாக 2,230 புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்றும், சென்னை மாநகரில் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எங்கும் நிற்காமல் துரிதமாகப் பயணிகள் செல்லும் வகையில் “எல்லோ லைன்” (Yellow Line) எனப் பெயருடைய புதிய வகை சிறப்புப் பேருந்துகளும்,



குறிப்பிட்ட பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லக் கூடிய "புளூ லைன்" (Blue Line) என்ற பெயருடைய புதிய பேருந்துகளும் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்புகளை நிறைவேற்றும் வகையில் முதற்கட்டமாக 1,000 புதிய பேருந்துகளை வாங்கிட அரசு மானியமாக 100 கோடி ரூபாயை 23.8.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து தற்போது தயார் நிலையில் உள்ள 242 பேருந்துகளில் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு 100 பேருந்துகளையும், இதர போக்குவரத்துக்



கழகங்களுக்கு 142 பேருந்துகளையும் 3.12.2006 அன்று சென்னைத் தீவுத் திடலில், அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்களிடம் ஒப்படைத்து, சென்னை மாநகரில் "எல்லோ லைன்" "புளூ லைன்" பேருந்துகளின் வெள்ளோட்டத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.12.2006 அன்று கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியின் பொழுது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.ஆ.ராசா, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப, மற்றும் போக்குவரத்துத் துறைச் செயலர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 3.12.2006 அன்று, மாநகர் போக்குவரத்து கழகம் மற்றும் இதர தமிழக அரசு போக்குவரத்து கழகங்களின் 242 புதிய பேருந்துகளை துவக்கி வைத்தார்கள்.

சென்னை மாநகர் பகுதியில், மாநகரப் போக்குவரத்துக்கழகம் (சென்னை) தனிப்பெரும் போக்குவரத்து நிறுவனமாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இக்கழகத்தில் தற்போது நாளொன்றுக்கு 2,554 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தினந்தோறும் இக்கழக பேருந்துகளின் இயக்கத்தின் வாயிலாக சுமார் 40 இலட்சம் பயணிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும் இக்கழகத்தின் மூலம் நாளொன்றுக்கு 6.6 இலட்சம் கிலோ மீட்டர்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

போக்குவரத்துக் கழகங்களின் வாரியாக புதிய பேருந்துகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

| வ.எண் | போக்குவரத்துக் கழகத்தின் பெயர் | புதியப் பேருந்துகள் |
|---|---|---|
| 1. | மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னை | 100 |
| 2. | விரைவுப் போக்குவரத்துக் கழகம் (சென்னை) | 3 |
| 3. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) | 19 |
| 4. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) | 20 |
| 5. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) | 50 |
| 6. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) | 40 |
| 7. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) | 10 |
| | மொத்தம் | 242 |

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவின் பேரில், மாநகரப் போக்குவரத்துக் கழகம், நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள மேற்படி புதிய சொகுசு பேருந்துகளில் முதல் கட்டமாக 30 பேருந்துகளை கீழ்க்கண்ட முறையில் இயக்க உள்ளது.

**1. "எல்லோ லைன்" பேருந்துகள் :**

(ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சொகுசு பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லும்)

**2. "ப்ளூ லைன்" பேருந்துகள் :**
(குறிப்பிட்ட விரைவுப் பேருந்து நிறுத்தங்களில் மட்டும் நின்று செல்லும்)

மேற்படி பேருந்துகளில் பயணிகள் இருக்கைகள் பிளாஸ்டிக் வார்ப்படத்தால் செய்யப்பட்டு, போதிய விளக்கு வெளிச்சமும், ரயிலில் உள்ளது போன்ற ஏற்றி இறக்கக்கூடிய கண்ணாடியினால் ஆன ஜன்னல்களும், ரெயான் மற்றும் பைபர் பூச்சு செய்யப்பட்ட மேற்கூரை மற்றும் சுற்றுப்புற மாசு ஏற்படாத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

600 ரூபாய்க்கு வழங்கப்படும் " மாதாந்திர விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச்சீட்டு" (Monthly Travel as You Please Ticket Holders) வைத்துள்ள பயணிகள் மேற்படி எல்லோ லைன் மற்றும் ப்ளூ லைன் பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

**அதிநவீன சொகுசுப் பேருந்துகளின் சிறப்பு அம்சங்கள்**

- ✶ ஒவ்வொரு இருக்கையிலும் படிப்பதற்கு வசதியாக மின்விளக்கும், காற்றோட்டத்திற்காக மின்விசிறியும் பொருத்தப் பட்டுள்ளன.
- ✶ பயணிகள் சொகுசாக சாய்ந்து தூங்குவதற்கு இலகுவாக சாய்ப்பதற்கு நவீன தொழில்நுட்ப இருக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- ✶ 36 சாய்மான இருக்கைகள் கொண்ட சொகுசுப் பேருந்தாக வடிமைக்கப்பட்டுள்ளது. அவ்விருக்கைகள் கால் வைப்பதற்கு வசதியாக அதிக இடைவெளியுடன் அமைக்கப்பட்டுள்ளன.
- ✶ ஒவ்வொரு இருக்கையின் பக்கவாட்டு ஜன்னல்களில் உயர்தர லினன் துணிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- ✶ பயணிகள் தங்களது அதிக உடைமைகளை கொண்டு செல்லும்போது, தங்கள் உடைமைகளை வைப்பதற்கு விசாலமான வைப்பிருக்கை வசதி பேருந்தின் பின்புறம் அமைக்கப்பட்டுள்ளது.
- ✶ தட்பவெட்ப நிலையை சீராக வைப்பதற்கு இப்பேருந்தின் மேற்கூரை புதிய தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- ✶ உயர்தரமான பாலியுரோத்தின் வகையைச் சார்ந்த வர்ணங்கள் பேருந்துகளுக்கு பூசப்பட்டுள்ளன.
- ✶ பேருந்தின் முன்பக்க கண்ணாடி 96"X 64" என்ற அளவில் பொலிவுடன் பொருத்தப் பட்டுள்ளது.
- ✶ அதிர்வில்லாமல், பயணிகள் இதமாகச் செல்ல காற்றடைக்கப்பட்ட பலூன்களைப் பயன் படுத்தி மிதவைப் பேருந்துகளாக இயக்கப் படுகிறது.
- ✶ பேருந்துகளில் டிஜிட்டல் வீடியோ காட்சி ஒளிபரப்பும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
- ✶ இந்திய அளவில், தனியார்களின் அதிநவீன பேருந்துகளுக்கு இணையாக அதிநவீன தொழில் நுட்பத்துடன் இப்பேருந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ■



# உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாக தமிழ்

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில்
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
6–12–2006 அன்று தீர்மானத்தை முன்மொழிந்து
ஆற்றிய உரை

உணர்ச்சிமயமான, எழுச்சி நிறைந்த நம்முடைய இதயத்தை எல்லாம் நனையச் செய்கின்ற அளவுக்கு பெருமிதம் கொள்ளக் கூடிய ஒரு தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

இங்கே எல்லா தலைவர்களும் பேசிய பிறகு, எனக்கு முன் பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் அவராகவே அமைச்சர் பெருமக்களுக்கு வக்காலத்து வாங்கி என்னை வாழ்த்தியிருக்கிறார். நான், நானாக இல்லாமல் வேறொரு முதலமைச்சராக இருந்தால், அவர் என்னைப் பற்றிப் பாராட்டிய பெருமைகள் அனைத்தையும் நானே சொல்லிக் கொண்டிருப்பேன். அவர் சொல்லியதிலிருந்து நான் சொல்லித்தான் பாராட்டினாரோ என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. என்னோடு பல்லாண்டு காலம் பழகிய அந்தப் பாச உணர்வு, இந்த ஆட்சி நடத்துகின்ற இயக்கத்தில் இளமைப் பருவம் முதல் அவர் கொண்டுள்ள உறவு, அதன் காரணமாக தன்னுடைய உள்ளத்தில் பொங்கி எழுந்த கருத்துகளை யெல்லாம், உணர்வுகளையெல்லாம் இங்கே வெளிப்படுத்த வேண்டுமென்று வெளிப்படுத்தி யிருக்கிறார்.

ஒன்று சொன்னார், இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில் நான் இந்த அவையிலே இருந்தேன், இந்தப் பெருமையை எதிர்காலம் பேசும் என்றார். என்னுடைய தாத்தா, பாட்டன் இந்த அவையில் இருந்தபோதுதான், இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென்று எதிர்காலத்திலே பேரப் பிள்ளைகள் பேசுவார்கள் என்று சொன்னார். இந்தப் பெருமை எல்லாம் இந்த அவையிலே இருந்த சில பேருக்குத் தேவைப்படாத காரணத்தால் இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில் அவர்கள் இல்லையே என்ற வருத்தம்தான் எனக்கு!

இந்தத் தீர்மானம் இன்றைய வரிசைக் குறிப்பில் (அஜண்டா) கடைசியாகத்தான் இடம் பெற்றிருந்தது. நானும், நம்முடைய பேராசிரியர் அவர்களும், வீராசாமி அவர்களும் கலந்து பேசி, இந்தத் தீர்மானம் வருகிற நேரத்தில் பிரதான எதிர்க்கட்சிக்காரர்கள் டெல்லிக்கு தனி விமானத்திலே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். சிலை திறக்கின்ற விழாவிற்குச் செல்லவிருக்கிறார்கள், அவர்கள் தனி விமானத்திலே செல்லவிருக்கின்ற காரணத்தால், பிற்பகல் சட்டமன்ற நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள மாட்டார்கள், பிற்பகல் அவர்கள் விமானத்தில் செல்ல வேண்டும், அவர்கள் கலந்து கொள்வது முற்பகலிலேதான் இருக்கும்

என்பதால், அவர்கள் இருக்கும்போதே இந்தத் தீர்மனத்தை எடுத்து நிறைவேற்றினால், அவையிலே உள்ள அனைவரும் இந்த தீர்மானத்தை ஆதரித்தோம் என்ற பெருமை தீர்மானத்திற்கும் கிடைக்கும், இருந்தவர்களுக்கும் கிடைக்கும் என்று சொன்னதன் பேரில், அவையின் முன்னவர் எழுந்து இந்த வரிசையை மாற்றி, இந்தத் தீர்மானத்தை முன்னதாக எடுத்துக் கொள்கின்ற வழி வகைகளை தலைவர் அவர்களே உங்கள் அனுமதியுடன் கண்டார்கள்.

அப்படி வாய்ப்பை அளித்திருந்தும் கூட, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்று கருதியோ, கலந்து கொள்ளத் தேவையில்லை என்று கருதியோ பிரதான எதிர்க்கட்சி, அதிலே மாத்திரம் எனக்கு வருத்தமில்லை, எதிர்க்கட்சியின் தோழமைக் கட்சியான ம.தி.மு.க உட்பட அவர்கள் அவையிலே இல்லாதது எனக்குப் பெரும் குறை. இதை நான் சொல்வதற்குக் காரணம் ஒரு கட்சியைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல. இந்த மிக முக்கியமான, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தீர்மானம் என்றெல்லாம் குறிப்பிட்டார்களே, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் எல்லோரும் இதற்குக் கூட ஒன்றாக இருந்தோம் என்ற நிலையை தமிழகத்திலே ஏற்படுத்த முடியவில்லையே, நாமா முல்லைப் பெரியாறில் ஒன்றாக இருக்கப்போகிறோம் என்ற சந்தேகத்தை நமக்கு ஏற்படுத்துகின்றது. இதைச் சொல்வதற்குக் காரணம், இந்தத் தீர்மானத்திலே அவர்களுக்கு அக்கறை இல்லை என்பதற்கு உதாரணமே இருக்கின்றது. இதை இந்தக் கருத்தை, தி.மு.கழகம் மாத்திரமல்ல, நம்முடைய நண்பர் மணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர், மருத்துவர் அய்யா ராமதாஸ் அவர்கள் எத்தனையோ கூட்டங்களில் கூறியிருக்கிறார்.

புலவர் பெருமக்கள், வழக்கறிஞர் பெருமக்கள் பலர் எத்தனையோமுறை இந்தக் கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்குத் தான் இது அரசு சார்பிலே அவையிலே ஒரு தீர்மானமாக முன் மொழியப்பட்டு, உங்கள் ஆதரவோடு நிறைவேற இருக்கின்றது.

இதற்கு முன்பே 2001ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் அமைத்திருக்கின்ற தமிழ் மன்றத்தின் சார்பாக டபிள்யூ. பி. எண். 16939/2001 என்ற ஒரு ரிட் மனு சென்னை உயர் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டது. ரிட் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. அது என்ன ரிட் மனு என்றால், அரசு உயர் நீதிமன்றங்களில் தமிழை வழக்கு மொழியாக உருவாக்க வேண்டும் என்பது அந்த ரிட் மனுவின் பொழிப்புரை. அதை உயர் நீதி மன்றம் உத்தரவின் மூலமாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்த ரிட் மனுவை உயர் நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டு, தள்ளுபடி செய்யும்போது என்ன காரணம் சொன்னதென்றால், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 348 (2) இன் கீழ் ஆணை பிறப்பிக்கக் கூடிய அதிகாரம் ஆளுநருக்கு மட்டும்தான் உண்டு, எனவே அவர் ஆணை பிறப்பிக்க வேண்டுமே தவிர, இங்கே நீதி மன்றத்தில் வந்து வாதாடிப் பயன் இல்லை என்று தள்ளி விட்டார்கள்.

நீங்கள் இந்தத் தாத்பரியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும், அதற்கு என்ன அர்த்தம்? நீதிமன்றத்திலே வழக்காடினால் எங்களால் ஒன்றும் உத்தரவிட முடியாது. ஆளுநர்தான் அதற்கு உத்தரவிட வேண்டும். ஆளுநர் உத்தரவு என்றால், அரசாங்கத்தின் உத்தரவு. அரசாங்கத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டு போனால், ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளித்தால், பின்னர் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்து, பிறகு நீதி மன்றத்திலே தமிழ் வழக்கு மொழியாகலாம் என்று சொல்லி, உயர் நீதி மன்றம் 2001இல் வழக்கறிஞர்கள் கொடுத்த அந்த மனுவை தள்ளுபடி செய்தது.

அப்போது நாம் ஆட்சியிலே இருந்திருந்தால், அப்படியா உயர் நீதிமன்றமே வழி காட்டியிருக்கிறது, அவர்களால் முடியாதாம், ஆளுநர்தான் செய்ய வேண்டுமாம் என்று உடனே தீர்மானத்தை நிறைவேற்றி ஆளுநரிடத்திலே கொடுத்து நிறைவேற்றியிருப்போம். அப்போதே தமிழ் உயர்நீதி மன்ற வழக்கு மொழியாக ஆகியிருக்கும். ஆனால் முன்பிருந்த அரசு இதைச் செய்யவில்லை. இது தானா அவர்களுக்கு வேலை? இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்ற நேரத்திலே கூட அவர்களால் இருந்து நிறைவேற்றித் தர, ஒப்புதல் அளிக்க முடியவில்லை என்கிறபோது, நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன், தமிழர்கள் எல்லோரும் ஒரு சேர அமர்ந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால் இன்னும் பெருமைதான். அந்தப் பெருமையை அளிக்க அவர்கள் வேண்டுமென்றோ அல்லது விவகாரம் செய்ய வேண்டுமென்றோ, தீர்மானம் நிறைவேறுகின்ற நாளில் ஒரு பெரிய கலவரத்தைச் செய்ய வேண்டுமென்றோ திட்டமிட்டு வந்தவர்களை நாம் எப்படித் திருத்த முடியும்? எனவே எத்தனை புயல் வீசினாலும், எத்தனை சூறாவளி வீசினாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தமிழ் நின்று

நிலைக்கும், வாழும் என்பதற்கு அடையாளமாக இன்றைய தினம் இந்தத் தீர்மானத்தை நான் உங்கள் முன்னால் மீண்டும் ஒரு முறை படித்து நிறைவேற்ற விரும்புகிறேன்.

"சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 348 (1)–ஆவது பிரிவின்படி உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் இருந்திட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எனினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7–ன்படி, உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, மாநில ஆட்சி மொழியிலேயே நடத்த மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் தமிழிலேயே அனைத்து நிருவாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், அரசமைப்புச் சட்டப்பிரிவு 348 உட்பிரிவு –(2) உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7–ன்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் நமது மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இம்முடிவினைச் செயல்படுத்த விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்வதென இந்த சட்டமன்றப் பேரவையில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது."

இதிலே நம்முடைய நண்பர் கோவிந்தசாமி அவர்களும், நண்பர் குணசேகரன் அவர்களும் ஒரு அய்யப்பாட்டை எடுத்துச் சொன்னார்கள். சென்னை உயர் நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதம் வருவதற்கு முன்பு பத்திரிகைகளிலும் சொல்லியிருக் கிறார்கள். பத்திரிகைகளிலும் அவர்கள் பேசியது வெளி வந்திருக்கின்றது.

இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற அவருடைய விருப்பத்தைத் தெரிவித்துவிட்டு, அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்ற வழிமுறைகளையும் அவரே தெரிவித்திருக்கிறார். இதை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆதரிப்பது மாத்திரமல்ல, நமக்கு ஆக்கப் பூர்வமான உதவிகளையும் செய்வதற்கு ஒப்பாகும் என்ற முறையில் நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**அவர்கள் குறிப்பிட்டிருப்பது,**

1. நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் நடவடிக்கைகள் குறித்து தமிழில் மொழியாக்கம் செய்வதற்கு திறமைவாய்ந்த மொழி பெயர்ப்பாளர்கள் – அதாவது தமிழிலிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் மொழி பெயர்ப்பதற்கு புலமை வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.
2. தீர்ப்பு வழங்கும்போது அதனை உடனடியாகக் குறிப்பெடுக்க தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நன்றாகப் பயிற்சி பெற்ற சுருக்கெழுத்தாளர்கள் அவசியம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.
3. தற்போது உயர் நீதிமன்றத்தை நவீனப் படுத்துவதன்கீழ் கணினி பெருமளவில் பயன்படுத்தப்படுவதால், தமிழில் தீர்ப்புகளைச் செயற்படுத்த அதற்கான மென்பொருள் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.
4. தீர்ப்புத் திரட்டு என்ற தமிழ்ச் சட்ட இதழில் குறைவான அளவே சட்ட மொழிப் பெயர்ப்புகள் வெளியாவதால், முழுமையான அளவில் மொழியாக்கம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இந்த இதழினை அதிக அளவில் அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படும் வகையில் செயற்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.
5. தமிழ்ச் சட்டப் புத்தகங்கள் மற்றும் குறிப்புகள் வாங்கி வைத்திடும் வகையில், தனியாக நூலகம் ஒன்றை ஏற்படுத்தவும், அதற்கான இட வசதியையும் செய்து தர வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.
6. அந்த நூலகத்திற்கு பெருமளவில் சட்ட மொழிப் பெயர்ப்புகள் மற்றும் சொல்லகராதிகள் வாங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நான் தலைமை நீதிபதி அவர்களுக்கு எழுதிய பதிலில் தங்களுடைய யோசனைகள் அனைத்தும் இந்த அரசால் பின்பற்றப்படும், உடனடியாக நிறைவேற்றப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். எனவே இந்த வசதி, வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, நீதிமன்ற வழக்கு மொழியாக தமிழ் ஒளி விட ஒல்லும் வகையெலாம் இந்த அரசு உழைத்திடும், பாடுபடும், பணியாற்றும், உங்களுடை வாழ்த்துக்களோடு என்று குறிப்பிட்டு இந்த அளவோடு அமைகிறேன். ●



# உயர் நீதிமன்றத்தில் வழக்குமொழியாக தமிழ்

## மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு

நாடாளுமன்ற வளாகத்தில் சிந்தனையாளர் முரசொலி மாறன் அவர்களின் சிலை திறப்பு விழாவில் கலந்துகொள்ளவும், **9.12.2006** அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவும் டெல்லி வந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், **8.12.2006** அன்று, பகல் **1** மணி அளவில், மேதகு இந்தியக் குடியரசு தலைவர் திரு.ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்தார்.

அரை மணி நேரத்திற்கு மேல் இருவரும் உரையாடினார்கள், உடன் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆ. ராஜா அவர்கள் இருந்தார்.

சந்திப்புக்குப் பின் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, செய்தியாளர்கள் குடியரசு தலைவர் அவர்களைச் சந்தித்தது பற்றி கேட்டபோது, தமிழகத்தில் உயர் நீதி மன்றத்தில் தமிழ் மொழியை வழக்கு மொழியாக கொண்டு வருவதற்காக தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருப்பதாகவும், அரசியல் சாசனப்படி, விதி **348 (2)** இன்படி அந்தத் தீர்மானத்திற்கு குடியரசு தலைவர் அவர்கள் அனுமதி கொடுக்க வேண்டும். எனவே அந்தத் தீர்மானத்தின் நகலையும் இணைத்து குடியரசுத் தலைவர் அவர்களிடம் கடிதம் கொடுத்திருப்பதாகவும், குடியரசுத் தலைவர் நிச்சயம் அதனைக் கவனிப்பதாக உறுதி கொடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். ■

# முதல் துணை மதிப்பீடுகள்

# 2006-2007

## மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் **க.அன்பழகன்** அவர்கள் ஆற்றிய உரை



**மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 2006–2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவையில் வழங்கி, 2006–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6–ஆம் நாளன்று ஆற்றிய உரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

1. 2006 – 2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1,157.95 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூபாய் 495.15 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 662.80 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2006 –ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22–ஆம் நாளன்று 2006 – 2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்டம் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2006 – 2007 ஆம் ஆண்டு திருத்த வரவு –செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்படும் உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடு செய்யப்படும்.

3. மீன்பிடித் தொழில் அதிகம் இல்லாத மாதங்களில் 1,02,993 மீனவ மகளிருக்கு உதவித்தொகை வழங்குவதற்காக அரசு ரூபாய் 12.36 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 12.36 கோடி வழங்கப்பட்டுள்ளது. மானியக் 'கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை – மீன்வளம்' என்பதன் கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ் திரைப் படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதால் உள்ளாட்சியமைப்பு களுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட அரசு முடிவு செய்துள்ளது. மானியக் 'கோரிக்கை எண் 10– வணிகவரி மற்றும் பதிவுத்துறை – வணிக வரிகள்' என்பதன் கீழ் ரூபாய் 30 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. ஏழைக் குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் மற்றும் அடுப்புகள் வழங்குவதற்காக அரசு ரூபாய் 60 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 60 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

# தமிழில் பெயர் சூட்டப்பட்ட பழைய திரைப்படங்களுக்கும் வரிவிலக்கு

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு

2006-2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் தமிழிலே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து 22.7.2006 அன்று அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தமிழிலே பெயர் சூட்டப்பட்ட பழைய திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை திரைப்படத் துறையினரிடமிருந்து வந்து கொண்டேயிருந்தது.

அதனையேற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இனி தமிழ்த் திரைப்படங்கள், புதிய படம், பழைய படம் எதுவானாலும், படத்தின் தலைப்பு தமிழ்த் தலைப்பாக இருக்குமேயானால் அதற்கு கேளிக்கை வரி முழுமையாக விலக்களிக்கப்படும் என்றும், படத்தின் தலைப்பு தமிழ்த் தலைப்பா என்பதற்கான அனுமதியை படத்தின் தயாரிப்பாளர், அரசின் வணிகவரித் துறை ஆணையரிடம் பெற்றால்தான் வரிவிலக்கு அளிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

6. விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கடனாக ரூ. 200 கோடி வழங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 200 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.
7. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பங்கு மூலதன உதவி வழங்குவதற்காக ரூபாய் 150 கோடி 'மானியக் கோரிக்கை எண் 14 – எரிசக்தித்துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.
8. கரும்புக்கான உயர்த்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு ரூபாய் 89.02 கோடி நிதி உதவி வழங்குவதற்காக 'மானியக் கோரிக்கை எண் 27 – தொழில்துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.
9. அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு தன்விருப்ப மானியமாக அரசு ரூபாய் 56.51 கோடி அனுமதியளித் துள்ளது. மேலும் சட்டமன்றப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொகுதிக்கான ஒதுக்கீட்டை ரூபாய் 1 கோடியிலிருந்து ரூபாய் 1.20 கோடியாக அரசு உயர்த்தியுள்ளது. 'கோரிக்கை எண். 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளின் ரூபாய் 103.51 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.
10. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் திருமண நிதி உதவிக்கான கூடுதல் ஒதுக்கீடாக, மானியக் 'கோரிக்கை எண். 45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூபாய் 10 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.
11. மாணவர்களுக்கான பயண அனுமதிக்குரிய பேருந்துக் கட்டணத்தை மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு அளிப்பதற்காக, மானியக் 'கோரிக்கை எண் 48 – போக்குவரத்துத்துறை' என்பதன் கீழ் ரூபாய் 100 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.
12. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். ■

# 4,500 துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்க நடவடிக்கை

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், 25.11.2006 அன்று, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பல்வேறு பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார்கள்.



**ஆய்வின் முடிவில் பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன :**

1. அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் சமீபத்தில் பெய்த மழையில், சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீர்படுத்தி செப்பனிட வேண்டுமென்றும், இதற்காக இயற்கை இடர்ப்பாடுகள் நிதியிலிருந்து ரூ.25 கோடி வழங்கப்படும்.

2. தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப் படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்க தமிழக அரசு எடுத்த முடிவால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை தமிழக அரசு ஈடுகட்டும்.

3. நகராட்சி நிருவாகம் மற்றும் பேரூராட்சி துறைகளில் தற்போது காலியாக உள்ள 4,500 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

4. விளம்பரப் பலகைகளினால் வரும் விளம்பர வரி கடந்த ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பிலிருந்து அரசுக்கு மாற்றப்பட்டது. இதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் இழப்பும் ஏற்பட்டது. ஆகவே, முன்பு இருந்தபடியே விளம்பர வரி விதித்து வசூலிக்கும் உரிமையை உள்ளாட்சி அமைப்பு களுக்கே திரும்ப வழங்கப்படும். ■

## மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் ஆய்வு மையம் தொடங்கிட ரூ.1 கோடி அனுமதி



'கல்வி வளர்ச்சி நாள்' என இந்த அரசு அறிவித்து 15.7.2006 அன்று தமிழகம் முழுவதும் கொண்டாடிய பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாள் விழாவிலும், தமிழக சட்டப் பேரவையில் 22.7.2006 அன்று அளிக்கப்பட்ட இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்தவாறு, கல்வித்துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள உதவும் வகையில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 'கல்வியியல் ஆய்வு மையம்' (Centre for Educational Research) ஒன்று உடனடியாகத் தொடங்கப்படும் என்றும், அதற்காக ஒரு கோடி ரூபாய் அனுமதித்துள்ளதாகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். □

## வருவாய்த் துறையில், 3,674 கிராம உதவியாளர்கள் விரைவில் நியமனம்

முந்தைய அதிமுக அரசு வருவாய்த் துறையின் கீழ் கிராம உதவியாளர்களை நியமிப்பதற்குத் தடை விதித்து 6.7.1995 அன்று அரசாணை பிறப்பித்தது. அதன் காரணமாக, தற்போது 3,674 வருவாய் கிராமங்களில் ஒரு கிராம உதவியாளர் கூட இல்லாத நிலை ஏற்பட்டு, பணியிடங்கள் காலியாக இருப்பதால் அரசுத் திட்டங்கள் கிராம மக்களைச் சென்றடைவதில் முடக்கநிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலை, தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து அரசுத் திட்டங்களின் பயன்கள் கிராம மக்களுக்கு உடனுக்குடன் கிடைப்பதற்கு உதவிடும் வகையில், முந்தைய அரசு விதித்த கிராம உதவியாளர் நியமனத் தடையை ரத்து செய்து, காலிப் பணியிடங்கள் உள்ள வருவாய் கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு கிராம உதவியாளர் வீதம் மொத்தம் 3,674 கிராம உதவியாளர்களை வேலைவாய்ப்புப் பதிவு அலுவலகங்கள் மூலம் நியமனம் செய்திட அனுமதி அளித்து 1.12.2006 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். □

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

# தமிழ்நாட்டில் கரும்புக்கு விலை நிர்ணயம்



2006 – 2007 சர்க்கரை ஆண்டில் 9 சதவிகிதம் பிழி திறனுள்ள ஒரு டன் கரும்புக்கு ரூபாய் 802.50 என்று மத்திய அரசு குறைந்தபட்ச விலையாக நிர்ணயம் செய்துள்ளது. தமிழக கரும்பு விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச விலையை விடக் கூடுதலாக ரூபாய் 222.50 உயர்த்தி, 9 சதவிகிதம் பிழி திறன் உள்ள ஒரு டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூபாய் 1,025 என்று நிர்ணயம் செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த விலை உயர்வு, இந்த நடப்புக் கரும்பாண்டில் ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கும் பொருந்துமாறு முன் தேதியிட்டு வழங்கப்படும்.

மேலும் 9 சதவிகிதம் பிழிதிறனுக்குக் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித பிழிதிறனுக்கும் டன் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய் ஊக்கத் தொகை (incentive) யாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# டாஸ்மாக் ஊழியர்களுக்கு மேலும் 5 சதவிகிதம் கூடுதல் கருணைத்தொகை

கடந்த 2005–2006 ஆம் ஆண்டிற்காக டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 8.33 சதவிகிதம் போனசும், 1.67 சதவிகிதம் கருணைத்தொகையும் 17.10.2006 அன்று வழங்கப்பட்டன. இப்பணியாளர்கள் தங்களுக்குக் கூடுதல் போனஸ் வழங்க வேண்டுமென அரசிடம் கோரிக்கை வைத்ததையடுத்து, அவர்களது கோரிக்கையினை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து, டாஸ்மாக் ஊழியர்களுக்கு ஏற்கெனவே போனசாகவும் கருணைத் தொகையாகவும் வழங்கப்பட்ட 10 சதவிகித தொகை தவிர, மேலும் 5 சதவிகித கூடுதல் கருணைத்தொகை வழங்கிட அரசு அனுமதித்துள்ளது என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இதனால் டாஸ்மாக் நிறுவனத்தைச் சேர்ந்த ஒப்பந்த, தற்காலிகப் பணியாளர்கள் உட்பட சி மற்றும் டி பிரிவைச் சேர்ந்த 30,945 ஊழியர்கள் பயன் பெறுவார்கள்; அரசுக்கு 3 கோடியே 84 இலட்சத்து 14 ஆயிரத்து 700 ரூபாய் கூடுதல் செலவாகும்.

# ஆதிதிராவிட மாணவ மாணவிகளுக்கு விடுதிகளில் கூடுதலாக 1,000 இடங்கள்

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ், மாவட்டங்களில் இயங்கிவரும் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் சேர்ந்து படிப்பதற்கு மாணவ மாணவியர் அதிக அளவில் விரும்பி விண்ணப்பம் அளித்துள்ள விவரம் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகளில் 300 இடங்களும், பள்ளி விடுதிகளில் 700 இடங்களும் ஆக மொத்தம் 1,000 கூடுதல் இடங்களை அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மேலும், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியருக்கு சோப்பு, எண்ணெய் முதலியவைகள் வாங்கவும், மாணவர்களின் முடிவெட்டும் செலவுகளுக்காகவும், மாதந்தோறும் சில்லரைச் செலவினமாக உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு வழங்கப்படும் உதவித் தொகை பள்ளி மாணவர்களுக்கு மாதம் 15 ரூபாய் என்பது 25 ரூபாய் எனவும், கல்லூரி மாணவர்களுக்கு மாதம் 25 ரூபாய் என்பது 35 ரூபாய் எனவும் உயர்த்தி வழங்கப்படுகிறது என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## புதிய தமிழ்ச் சொற்கள்

30.10.2006 அன்று நடைபெற்ற 40ஆவது சொல்வங்கிக் கூட்டத்தில் உருவாக்கப்பட்ட சொற்கள் வருமாறு

| ஆங்கிலம் | தமிழ் |
|---|---|
| Point to Point | முனைக்கு முனை |
| Ward | குடும்பு |
| Unopposed candidate | போட்டியில்லா வேட்பாளர் |
| Breakdown squad | சீர்குலைவு நிலைப்படை / தடங்கல் நீக்கப்படை |
| Peak hour | நெரிசல் நேரம் / உச்ச நேரம் |
| Satellite City | துணை மாநகர் |
| Pay and use | கட்டணப் பயன்பாடு |
| Wilful violation | வேண்டி விதி மீறல் |
| Untoward | விரும்பத்தகாத |
| Bilateral | இருபுலம் |
| Book mark | நூலறிகுறி |
| Urban Poverty Alleviation | நகர்ப்புற வறுமைத் துயர்தணிப்பு |

– தமிழ் வளர்ச்சித்துறை

# 2006 - 2007ஆம் ஆண்டில்
# 3 இலட்சம் குடும்பங்களுக்கு
# இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு



இலவச எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கும் திட்டம் குறித்து 11.12.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில் அமைச்சர்களுடனும், அதிகாரிகளுடனும் விவாதிக்கப்பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

✦ எரிவாயு இணைப்பு இல்லாத அனைத்து குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் (2006 –07) மூன்று இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுவார்கள்.

✦ அடுத்த நிதியாண்டிலிருந்து நான்கு ஆண்டுகளில் எரிவாயு இணைப்பு இல்லாத அனைத்து குடும்பங்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

✦ எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் குடும்ப அட்டைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும்.

✦ இத்திட்டம் பொங்கல் திருநாளையொட்டி "போகி" தினத்தன்று சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும். தொடர்ந்து அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் அமைச்சர் பெருமக்களால் இத்திட்டம் தொடங்கி வைக்கப்படும். துவக்க விழாவன்று முப்பதாயிரம் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு வழங்கப்படும்.

✦ 2007 ஜனவரி மாத இறுதிக்குள் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களும், மார்ச் 2007க்குள் மீதமுள்ள ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் குடும்பங்களும் . இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவார்கள்.

✦ தற்போது இயங்கி வருகின்ற எரிவாயு விநியோகஸ்தர்கள் மூலமாக நகர்ப் பகுதிகளிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் சுற்றளவு பகுதியில் உள்ள கிராமங்கள் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்படும்.

✦ அடுத்த நிதியாண்டு (2007 –08) முதல் தற்போது எரிவாயு விநியோகஸ்தர்கள் இல்லாத பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே முகவராக செயல்பட்டு தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

✦ 200 குடும்ப அட்டை உள்ள நியாய விலைக் கடைகளில் உள்ள பயனாளிகள் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இத்தகைய நியாய விலைக் கடைகள் இல்லாத மாவட்டங்களில் 500 குடும்ப அட்டை வரை உள்ள நியாய விலைக் கடைகளில் உள்ள பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

✦ இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் ஊராட்சித் தலைவரின் தலைமையில், கிராம நிருவாக அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர், மக்கள் நலப் பணியாளர் மற்றும் சமூகநலத் தொண்டர் அடங்கிய குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும். நகர்ப்புறப் பகுதிகளில் வார்டு உறுப்பினர் தலைமையில் வரித் தண்டலர் (Bill Collector) வருவாய்த்துறை அலுவலர், பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஆசிரியர் மற்றும் சமூகநலத் தொண்டர் கொண்ட குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

✦ இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. ஆற்காடு நா. வீராசாமி, திரு. கோ. சி.மணி, திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. துரை முருகன், திரு. கே.என்.நேரு, திரு ஐ. பெரியசாமி, திரு எ.வ.வேலு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் மற்றும் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ✦

# உயர்வு நோக்கிடும் பாதையிலே ஒவ்வொரு நாளும் சாதனைகள்



**மண்ணுக்கு மருதாணியிட**



- ரூ. 7,000 கோடி கூட்டுறவுக் கடன்கள் அறவே தள்ளுபடி.
- நடப்பு ஆண்டு பயிர்க் கடன் வட்டி விகிதம் 7 விழுக்காடாகக் குறைப்பு
- விவசாயக் கடன்களுக்கு ஒதுக்கீடு ரூ. 1,000 கோடி; விடுவிப்பு ரூ. 400 கோடி.
- விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவிச் சட்டம்.
- நிலமற்ற விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம்.

**மகளிர் மனம் குளிர**



- தரமான அரிசி, கிலோ இரண்டு ரூபாய்.
- இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம்.
- பொங்கல் முதல் 3 இலட்சம் குடும்பங்களுக்கு நடப்பாண்டில், இலவச எல்.பி.ஜி. இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு.

**பெண்கள் நலம் பேண**



- மீண்டும் மூவலூர் மூதாட்டியார் திட்டம் – நிதி உதவி ரூ. 15,000 ஆக உயர்வு.
- கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறு கால உதவி மாதம் 1,000 ரூபாய் – ஆறு மாதங்களுக்கு.

**நெசவாளர் நெஞ்சம் நிறைய**

- இலவச மின்சாரம் – கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 யூனிட், விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட்.

**மீனவர் வாழ்வு மீண்டும் தழைக்க**



- சுனாமியால் வீடிழந்தவர்களுக்கு, வீடுகள் கட்ட தீவிர நடவடிக்கை.
- 23.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தின் கட்டுமானப் பணிகளுக்கு முதற்கட்டமாக 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் விடுவிப்பு.

**மாணவர் மகிழ**



- கல்லூரிக் கட்டணம் ரூ.7,550 ஆகக் குறைப்பு.
- பொறியியல் மற்றும் மருத்துவ படிப்புக்கான நுழைவுத்தேர்வு ரத்து.
- சத்துணவோடு வாரம் இரண்டு முறை முட்டை.

**ஆசிரியர் அகம் மகிழ**

- கலந்தாய்வு முறையில் ஆசிரியர் பணியிட மாறுதல் – மருத்துவத்துறைக்கும், கிராம நிருவாக அலுவலர்களுக்கும் நீட்டிப்பு.
- ஒப்பந்தமுறை நியமனம் ரத்து

**வணிகர் நலம் பேண**

- மதிப்புக் கூட்டு வரி அமல்.

**அரசு ஊழியர் ஆர்வத்துடன் பணியாற்ற**

- வேலை நிறுத்தப் போராட்ட நாட்களை ஊதியத்துடன் கூடிய பணிக்காலமாக அறிவிப்பு.
- உரிமைப் போராட்டத்தில், உயிர்நீத்த அரசு ஊழியர் – சாலைப் பணியாளர் குடும்பங்களுக்கு நிதியுதவி, வாரிசுகளுக்கு வேலை.
- காவலர் குறை தீர்க்க மூன்றாவது போலீஸ் கமிஷன்.
- 3 இலட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்ப விரைந்த நடவடிக்கை.



- மின்சார வாரியத்தின் 70,000 ஊழியர்களுக்கும், 62,000 ஓய்வூதியதாரர்களுக்கும் 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை ஊதியத்துடன் இணைப்பு.

**கல்வித்துறை ஒளிர**

- பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை, கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து சட்டம்.
- அரசு உதவிப் பள்ளிகளுக்கும் இலவச பாட புத்தகங்கள் வழங்க நடவடிக்கை.
- +2 பாடத்திட்டத்தில் பாடச்சுமை குறைப்பு.

**கலைத்துறை செழிக்க**

- படப்பிடிப்புக் கட்டணங்கள் பல படிகள் குறைப்பு.
- நடிகர் திலகம் சிவாஜிக்கு சிலை.
- பெரியார் திரைப்படத்திற்கு ரூபாய் 95 இலட்சம் நிதி.
- அம்பேத்கர் திரைப்படத்திற்கு ரூபாய் 10 இலட்சம் நிதி. காலவரையறையின்றி வரிவிலக்கு.

**இளைஞர் ஏற்றம் பெற**




- படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை.
- கடந்த ஆட்சியின் பணி நியமனத் தடை ஆணையால் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வயது உச்சவரம்பில் ஐந்து ஆண்டுகள் தளர்வு.

**ஆதரவற்றோர் ஒளி பெற**

- முதியோர், விதவை உதவித்தொகை மாதம் ரூ.400 ஆக உயர்வு.
- ஊனமுற்றோர் உதவித் தொகை மாதம் ரூ.500 ஆக உயர்வு.

**சமூக நீதி வலுப்பெற**

- சுயநிதிக் கல்லூரிகளில் 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்கு சட்டம்.
- அரசு மற்றும் சுயநிதி தொழில் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு 65 விழுக்காடு; சிறுபான்மையினர் கல்லூரிகளில் 50 விழுக்காடு.
- அனைத்து சமூகத்தினரும் ஆலயங்களில் ஆராதனை செய்ய தனிச் சட்டம் நிறைவேற்றம்.
- அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக பயிற்சி பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்னாள் நீதிபதி ஏ. கே. ராஜன் தலைமையில் உயர்நிலைக் குழு அமைப்பு.

**தமிழும், தமிழரும் வளம் பெற**

- அகற்றப்பட்ட கண்ணகி சிலை, அதே இடத்தில் நாட்டல்.
- தமிழ் கட்டாய பாடம் – 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை.
- தமிழில் தலைப்பிடப்படும் திரைப்படங்களுக்கு வரி விலக்கு. இவ்வரிவிலக்கு பழைய படங்களுக்கும் பொருந்தும்.
- பரிதிமாற்கலைஞர் நூல்கள் நாட்டுடைமை.
- உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்கு மொழி.

() () ()



## மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

## கலைஞர் மு. கருணாநிதி அவர்களின்

# உலக எய்ட்ஸ் நாள் செய்தி

ஆண்டுதோறும் டிசம்பர்த் திங்கள் முதல் நாள் 'உலக எய்ட்ஸ் நாள்' எனக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நாள், நம்முன் உள்ள எச்.ஐ.வி./ எய்ட்ஸ் என்ற மிகப் பெரிய சமூக, பொருளாதாரச் சவாலை நமக்கு நினைவூட்டுகிறது. தமிழகத்தில் எச்.ஐ.வி. தொற்று கண்டறிப்பட்ட 1986 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அரசு எச்.ஐ.வி. தொற்று பரவுவதைத் தீவிரமாகக் கட்டுப்படுத்தி வருகிறது. இந்நாளில், எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோருக்குப் பாதுகாப்பு, ஆதரவு மற்றும் மருத்துவச் சேவைகள் மிகவும் இன்றியமையாது தேவைப்படுகின்றன. எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோரை ஒதுக்கி வேறுபடுத்தாமல் அவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதை மக்கள் அனைவரும் குறிப்பாகக் களப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் தமது கடமைகளில் ஒன்றாகக் கருதிட வேண்டும். எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட நிலையில் சமுதாயத்தில் சம உரிமையுடனும், மதிப்புடனும் வாழ்வதற்காகப் போராடி வருவோரின் மன உறுதியினையும் தன்னம்பிக்கையினையும் உளமாரப் பாராட்டுகிறேன்.

தமிழக அரசு அனைத்துத் துறைகளின் ஒத்துழைப்போடு எச்.ஐ.வி./எய்ட்ஸ் பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும் தகுந்த பாதுகாப்பு மற்றும் ஆதரவுச் சேவைகளை எவ்வித வேறுபாடுமின்றி உடனுக்குடன் அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிகிச்சை பெற்று வரும் எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோர் அனைவருக்கும் இந்த நிதியாண்டில் ஊட்டச்சத்து வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது. தமிழக அரசால் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் 15 எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிகிச்சை மையங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்திடவும் அரசு ஆவன செய்து வருகிறது. எனவே, எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பேணும் வகையில் அவர்களும் மற்றவர்களுடன் இணக்கமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழும் வகையில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அனைத்திற்கும் தகுந்த ஒத்துழைப்பினை நல்குமாறு தமிழக மக்கள் அனைவரையும் இந்நாளில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

***எய்ட்ஸைத் தடுப்போம்!***
***மக்கள் நலம் காப்போம்!***



# உபரி நீரை பகிர்ந்து கொள்வதே இயற்கை நியதி

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
கலைஞர்
**மு.கருணாநிதி**
அவர்கள்
புதுடெல்லியில்
**29.11.2006** அன்று
நடைபெற்ற
முல்லைப் பெரியாறு அணை
குறித்த
பேச்சுவார்த்தையில்
பங்கேற்று
ஆற்றிய உரை

**மா**ண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பேராசிரியர் சைப்புதீன் அவர்களே,

மத்திய அரசின் நீர்ப்பாசனத்துறை இணை அமைச்சர் மாண்புமிகு திரு. ஜெய் பிரகாஷ் நாராயண் யாதவ் அவர்களே,

கேரள மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. அச்சுதானந்தன் அவர்களே,

கேரள, தமிழ்நாடு மாநில அமைச்சர்களே,

மத்திய, மாநில அரசு அதிகாரிகளே, நண்பர்களே,

இன்றைய கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து உதவிய மத்திய அரசின் நீர் வளத்துறை அமைச்சர் சைப்புதீன் சோஸ் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு இரு மாநில மக்களுக்கும் ஏற்ற முடிவுகளை எடுப்பதற்கு உதவிடும் வண்ணம் வருகை தந்துள்ள கேரள முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்களுக்கும், கேரள மாநில நீர்வளத்துறை அமைச்சர் பிரேம சந்திரன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கும், கேரளாவிற்கும் இன்று நேற்றல்ல, சரித்திரக் காலந்தொட்டு உறுதியான, வலிமையான, உண்மையான உறவுகள் உண்டு.

மூவேந்தர்கள் எனப்படும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களில் சேர வம்ச மன்னர்கள் ஆண்ட பூமி கேரள பூமி.

சரித்திரக் காலத்திற்குப் பிறகும் கூட, சமுதாய எழுச்சிக்காக வித்திட்ட சீரிய சிந்தனையாளர் பலர் கேரளத்தில் தோன்றியவர்கள். தமிழகத்திலும், தமிழகத்தில் தோன்றியவர்கள் கேரளாவிலும் மக்களின் போற்றுதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

சாதி மத பேதமற்ற சமுதாயம் காண்பதிலும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதிலும் அழுத்தமான கருத்துடைய நாராயண குருவை தமிழ்நாட்டில் சீர்திருத்த இயக்கம் இன்றைக்கும் பாராட்டிக் கொண்டிருக்கின்றது.

சாதியை ஒழிப்பதற்கு உச்சக் கட்டமாக நடைபெற்ற வைக்கம் போராட்டம் கேரளாவிற்கே உரிய ஒன்று என்பதும், அந்தப் போராட்டத்தின் தலைவராக தமிழகத்தின் தலைவர் தந்தை பெரியார்தான் விளங்கினார் என்பதும், அதனால் அவர் "வைக்கம் வீரர்" என்று பாராட்டப்பட்டார் என்பதும் வரலாறு.

வகுப்புவாரி இடஒதுக்கீடு உரிமைக்கு வித்திட்ட திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும் – இன்றைக்கும் லண்டன் மாநகரில் நினைவுக் கல்லறையில் இருப்பவருமான டி.எம். நாயர் என்ற மாபெரும் தலைவரின் உருவம் தமிழ் மக்களின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்த ஒன்றாகும்.

இலக்கிய வழியில் நோக்கினாலும், தஞ்சை சோழ மண்டலத்தில் பிறந்த கண்ணகி, மதுரை பாண்டியனிடம் நீதி கேட்டு, கணவன் கோவலனை கள்வன் என்ற குற்றச்சாட்டிலிருந்து மீட்டு; அவளுக்குச் சிலை வடிக்க இமயத்தில் கல் எடுத்து வந்த சேரன் செங்குட்டுவன் நம் இருவருக்கும் சொந்தமானவன். அந்தக் கண்ணகி கோயில் இருக்குமிடம்தான் "மங்கல தேவி கோவில்" என்கிற போது நமக்குப் புல்லரிக்கின்றது.

இப்படி பல நூற்றாண்டு காலமாக சரித்திர தொடர்பும் – கலை, கலச்சார தொடர்பும் – ஆன்மீகத் தொடர்பும் – பகுத்தறிவுத் தலைவர்கள் – அரசியல் தலைவர்கள் தொடர்பும் கொண்ட இரு மாநிலங்கள்தான் கேரளமும், தமிழகமும் ஆகும். இதை எண்ணும்போது; நமக்குள்ளே அரும்பி மலர வேண்டிய உறவுக்குப் பதிலாக – கசப்பும் காழ்ப்பும் அதன் காரணமாக வேற்றுமை உணர்வுகளும்



வளரலாமா என்ற கேள்வி எழாமல் இல்லை. அந்த உணர்வுக்கும் நட்புக்கும் இந்திய ஒருமைப் பாட்டுக்கும் இம்மியளவு சேதாரம் வரக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன்தான் சில செய்திகளை இன்றைய பிரச்சினைக்குரிய முல்லைப் பெரியாறு தொடர்பாக கூற விரும்புகிறேன்.

உச்ச நீதிமன்றம் விசாரித்து 27.2.2006இல் ஆணை வழங்கிய முல்லைப் பெரியாறுபிரச்சினையில் உச்ச நீதிமன்றத்தின் கருத்தை ஏற்று ஒரு தீர்வு காண்பதற்காக நாம் திறந்த மனதுடன் இங்கு கூடியுள்ளோம்.

உச்ச நீதிமன்றம் தமிழ்நாடு அரசு 142 அடி வரை நீர் மட்டத்தை முதல் கட்டமாக உயர்த்தவும், மற்றும், எஞ்சிய பலப்படுத்தும் பணிகள் முடிவடைந்தவுடன் அதன் உச்ச நீர் மட்ட அளவான 152 அடி வரை நீரை உயர்த்தவும் உத்தரவு வழங்கிய பின்னர், கேரள அரசு மார்ச் – 2006இல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது.




கேரள அரசின் இசைவோடு எல்லா முக்கிய பலப்படுத்தும் பணிகளை தமிழ்நாடு அரசு செய்து முடித்துள்ளது. வல்லுநர்களின் கருத்துப்படி அணை பாதுகாப்பாக உள்ளது. அதுகுறித்து எந்தவிதமான அய்யப்பாடும் கொள்ளத் தேவையில்லை. சில எதிர்பாராத நிகழ்வுகளினால், சிற்றணையை பலப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள முடியவில்லை.

தமிழகத்திலே உள்ள வறட்சி மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகியவற்றில் உள்ள சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளிக்க முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை முதற்கட்டமாக 142 அடி வரையில் உயர்த்துவது மிகவும் அவசியமாகிறது.

இந்த மாவட்டங்களில் பெரியாறு திட்டத்தினால் இதுவரை பயனடைந்து வந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பாசன மற்றும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக கடந்த 27 ஆண்டுகாலமாக சிரமப்படுகிறார்கள். மேலும் விவசாய வருமான இழப்பையும் அனுபவித்து வருகிறார்கள். இந்த மாவட்டங்களில் அடிக்கடி ஏற்பட்டு வந்த பஞ்சத்தைத் தவிர்க்கவே முல்லைப் பெரியாறு அணைத் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

கடந்த பல்லாண்டு காலமாக பெரியாறு பாசனத் திட்டத்தினால் விவசாயிகள் அனுபவித்து வந்த பயன்களை இன்று எந்தவித விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப விவரங்களின் அடிப்படை இல்லாமல் மறுக்கக் கூடாது.

உச்ச நீதிமன்றம் தெளிவான ஒரு தீர்ப்பினை அளித்த பிறகும், கேரள அரசு எடுத்த நிலையினால் தமிழ்நாடு விவசாயிகள் நம்பிக்கை இழந்துள்ள நிலையில் இருக்கிறார்கள். ஆகையால், பெரியாறு அணையின் நீரையே ஜீவாதாரமாக நம்பியுள்ள விவசாயப் பெருமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, இந்தப் பிரச்சினையை மிகுந்த மனிதாபிமானத்துடன் அணுக வேண்டுமென இந்த அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவர விழைகின்றேன். கேரள மாநிலம் மிகுந்த நீர் வளம் நிறைந்த மாநிலம். இதற்கு மாறாக, தமிழ்நாடு மிகுந்த நீர்ப் பற்றாக்குறை மாநிலமாகும். இந்தியா போன்ற சம உரிமை பெற்ற, சமத்துவ ஜனநாயக நாட்டில், உபரி நீரை தேவைப்பட்டோருடன் பகிர்ந்து கொள்வதென்பது இயற்கை நியதியாகும். இந்தக் கருத்தின் அடிப்படையில், மக்களின் நலனுக்காகப் பல காலங்களுக்கு முன்பே அணைகள் கட்டப்பட்டன. இத்தகைய இயற்கை நியதியை நிறைவேற்றத் தவறினால், அந்த இயற்கையே நம்மை நிச்சயமாக மன்னிக்காது.



மத்திய நீர் வள குழுமமும், வல்லுநர் குழுவும் கள சோதனைகளை மேற்கொண்டும், ஆராய்ந்தும் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடி வரை முதற்கட்டமாக உயர்த்துவதற்கு தகுதியானது என்று உறுதிப்படுத்தியுள்ளதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே ஏற்பட்ட பூகம்பங்கள், அணையின் கட்டுமானத்திற்கு எந்தவிதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. மேலும், வருங்காலத்தில் பூகம்பமே ஏற்பட்டாலும் இந்த அணை அதனைத் தாங்கக் கூடிய சக்தி உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இருக்க, அணையின் நீர் மட்டத்தை 142 அடிக்கு உயர்த்தினால் அணை உடைந்து விடும் என்ற கருத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, பீதியை உண்டாக்குவது எந்தவிதத்திலும் நியாயமாகாது. புவியீர்ப்பு அடிப்படையில் கட்டப்பட்ட எந்தவொரு அணையும் இதுவரையில் உடைந்ததாக செய்தி எதுவும் கிடையாது. மேலும் புது அணையைப்போல உறுதியாக உள்ள பெரியாறு அணையின் மீது இவ்வாறு சந்தேகப்படுவதற்கு எந்தச் சாத்தியக் கூறும் இல்லை. வல்லுநர்களின் கருத்துப்படி பெரியாறு அணை இப்போது புதிய அணைக்கு ஒப்பானதாகும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து விவரங்களையும் கருத்திலே கொள்ளும் போது, அணையின் பாதுகாப்பு குறித்து பீதியோ அல்லது குழப்பமோ அடைய எத்தகைய முகாந்திரமும் இல்லை. பெரியாறு அணையின் கீழ் பகுதியில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பைக் காக்க தமிழ்நாடு அரசு எப்போதும் தவறாது. அணையின் கீழ் வசிக்கும் மக்களைப் பற்றி எங்களுக்கும் பொறுப்பு உள்ளது.

கேரள அரசு நீர்ப்பாசனம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2003, சட்டத்திற்கு 18.3.2006இல் நிறைவேற்றிய திருத்தங்களை வல்லுநர்கள் குழு அளித்த அறிக்கையையும், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பையும் கருத்தில் கொண்டு, மறுபரிசீலனை செய்து, அந்தத் திருத்தச் சட்டத்தை ரத்து செய்யுமென்று நம்புகிறோம்.

இரு மாநிலங்களின் சமூக மற்றும் பொருளாதார நலனுக்காக ஒருவரையொருவர் நாம் சார்ந்துள்ளோம். இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள இணக்கம் மற்றும் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலை ஆகியவற்றை கருத்தில் கொள்ளும்போது, இரு மாநிலங்கள் மற்றும் அதன் மக்கள் பயன் அடையும் வகையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமூகத் தீர்வு காணப்பட வேண்டும்.

அண்டைய மாநில நட்புணர்வின் அடிப்படையில் கேரள அரசு இந்தப் பிரச்சினையை அணுகி உச்ச நீதிமன்ற ஆணையைச் செயற்படுத்த முழு மனதுடன் ஒத்துழைக்கும் என நான் நம்புகிறேன்.

நன்றி! □






# பண்புகளைக் கற்பிக்கின்ற இடமாக சிறைச்சாலைகள் அமைய வேண்டும்

**புழல் மத்திய சிறைச்சாலையைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை (26.11.2006)**

**சி**றைச்சாலையில் நீண்ட நேரம் இருக்கக் கூடாது. நீண்ட நாட்களும் இருக்கக்கூடாது. நேரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் குற்றம் இழைக்க வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். இழைக்கப்படுகின்ற குற்றத்திற்கேற்றவாறு, தண்டனை பெறுகின்ற இடம், தண்டனைக்குத் தக்கவாறு, தக்க பாடம் பெறுகின்ற இடம் இந்த இடம். அதைத்தான் எனக்கு முன்னால் இங்கே பேசிய அரசு அதிகாரிகளும், நண்பர்களும், விழாத் தலைவர் தம்பி பெரியசாமி அவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

பொதுவாக சிறைச்சாலைகள் எப்படி இருக்க வேண்டும் என்ற இந்தக் கேள்விக்கு விடை காணுகின்ற கட்டத்தில் நாமெல்லாம் இருக்கிறோம். சிறைச்சாலை என்பது குற்றவாளிகளைத் தண்டிக்கின்ற இடம், கொடுமைப் படுத்துகின்ற இடம், சித்ரவதை செய்கின்ற இடம் என்கிற ஒரு நிலை ஒரு காலத்திலே இருந்தது. அது மெல்ல மெல்ல மாறி, பயிற்சி அளிக்கின்ற இடமாக, பண்படுத்துகின்ற இடமாக, பண்புகளைக் கற்பிக்கின்ற இடமாக, வாழ்க்கையை எப்படி வாழவேண்டுமென்று சொல்லித் தருகின்ற கூடமாக சிறைச்சாலைகள் அமைய வேண்டும். அப்போதுதான் சிறைச்சாலை அமைத்ததின் நோக்கம் நிறைவேற முடியுமென்பது ஆன்றோர் வாக்கு, சான்றோர் வாக்கு.




அதனை நிரூபிக்கின்ற வகையிலேதான் ஒரு அரசு சிறைச்சாலைகளை நடத்த வேண்டும். சிறைச் சாலைகளிலே போட்டு வதைத்து, அடித்துத் துவைத்து அவர்களை உயிர் இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்குறியாக ஆக்கி கொடுமைப்படுத்துவதால் இனியும் அந்தக் குற்றத்தைச் செய்ய மாட்டான் என்று எண்ணுவது கொடுமையினும் கொடுமை. அந்தக் கொடுமை தவிர்க்கப்பட வேண்டுமென்பதுதான் நல்லோர், நடுநிலையாளர்கள் அனைவரின் வேண்டுகோள். அந்த வேண்டுகோளைச் செயற்படுத்துகின்ற வகையில் சிறைச்சாலைகள் அமைதல் வேண்டும் என்ற கருத்தை இந்தத் திறப்பு விழா நிகழ்ச்சியிலே நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏறத்தாழ இருபதாண்டு காலமாக இந்தச் சிறைச்சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே "ஆவுடையார்கோவில்" திருப்பணி என்று சொல்வார்கள். அது ஆரம்பித்து இன்னும் முடியவில்லை. ஒரு காலத்தில் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் எல்லாம் வாழ்ந்த அந்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது ஆவுடையார்கோவில் திருப்பணி. இன்னும் அந்தக் கோவில் திருப்பணிகள் முடிவடையவில்லை. அங்கே மிச்சமிருக்கிறது, இங்கே பாக்கியிருக்கிறது என்று சொல்கின்ற அளவிற்குத்தான் அந்தத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதைப்போல, இந்தப் பக்கம் நான் செல்லும்போதெல்லாம், புழல் சிறைச்சாலை முடிவடைந்து விட்டதா, திறப்பு விழா எப்போது என்று கேட்பது தான் எனக்கு வேலை. முடிவடையும் தருவாயில் இருக்கிறது என்று சொல்வது அதிகாரிகளுடைய வேலை என்று இருந்த நிலை மாறி, அப்பாடா, முடிவடைந்து விட்டது, இனி திறக்கப் படவேண்டியதுதான் பாக்கி என்று என்னிடம் சொல்லி, இன்று திறந்தும் வைக்கப்பட்டிருக்கின்றது.

3,000 பேர் இந்தச் சிறைச்சாலையிலே இனிமேல் தங்குவதற்கேற்ற வகையில் அவர்களை இங்கே தண்டிக்கின்ற வகையில் அடைக்கப்பட்டாலுங்கூட, நல்ல சுவாசக் காற்றைப் பெறுகின்ற நிலையிலும், நல்ல சுகாதாரத்தை அடைகின்ற நிலையிலும் இந்த வளாகம் அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். சிறைச்சாலை என்று சொல்லி, அவனை மூச்சு விட முடியாமல் அடைத்து வைப்பது, அடைத்தவர்களுக்கும் கொடுமை, அடைபட்டவர்களுக்கும் கொடுமை. அந்தக் கொடுமை இனி சிறைகளிலே இருக்கக் கூடாது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, ஒரு உதாரணமாக இங்கே அமைச்சர் சாமி குறிப்பிட்டதைப்போல, ஆசியா கண்டத்திலேயே இந்தச் சிறைச்சாலை, மற்ற சிறைச்சாலைகளுக்கெல்லாம் வழி காட்டக் கூடியது என்ற அளவில் இன்றைக்கு நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைச்சாலையிலே ஓராண்டு, ஈராண்டல்ல, இருபதாண்டுகள், முப்பதாண்டுகள் என்று தண்டனை அனுபவித்தவர்கள் எல்லாம் உண்டு. ஆனால் அப்படி தண்டனை அனுபவித்தவர்கள் இந்த உலகத்தால் எப்படி வரவேற்கப்பட்டார்கள், எப்படி போற்றப்பட்டார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், திருச்சியில் தி.மு.கழகத்தின் மாநில மாநாடு சில




ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற போது, மாநாட்டை நான் தொடங்குகின்ற நேரத்தில் வந்த செய்தி தான், ஏறத்தாழ 25 ஆண்டு காலமாக சிறைச்சாலையிலே இருந்த நெல்சன் மண்டேலா அன்றைக்கு விடுதலையாகிறார் என்ற செய்தி கிடைத்தது. அந்தச் செய்தியை மாநாட்டிலே கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு நான் எடுத்துச் சொன்னவுடன், அத்தனை பேரும் எழுந்து நின்று கையொலி செய்தார்கள். நான் தொடர்ந்து கை தட்டிக் கொண்டேயிருந்தேன், ஏனென்றால் மாவீரரின் புகழை நினைவு கூர்கிறோம் என்று சொன்னபோது, தொடர்ந்து அந்த மாநாட்டுப் பந்தலில் கை தட்டிக் கொண்டேயிருந்தார்கள் இலட்சக்கணக்கான மக்கள் என்று சொன்னால், தென்னாப்பிரிக்கா எங்கே இருக்கிறது ? நெல்சன் மண்டேலாவுக்கும் நமக்கும் என்ன தொடர்பு ? எதுவும் இல்லை. அவனுடைய கொள்கை உறுதி என்ற அந்த ஒரு தொடர்பைத் தவிர, மக்களுக்காகப் பாடுபட்டான், சாதனை செய்தான் என்ற ஒரு தொடர்பைத் தவிர, இருபதாண்டு காலம் தன்னுடைய பொன்னான வாழ்க்கையை சிறைச் சாலையிலே கழித்தான் என்கிற அந்தத் தியாக வரலாற்றுத் தொடர்பைத் தவிர வேறு எந்தத் தொடர்பும் இல்லை. இருந்தாலும் அவன் போற்றப்பட்டான், இன்றைக்கும் போற்றப் படுகிறான் என்பதற்குக் காரணம், சிறைச் சாலையை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக அவன் கருதியதுதான்.

சிறைச்சாலையிலே நாம் பலரும் இருந்திருக்கிறோம். நாங்கள் இப்போது இங்கே இல்லை என்றால், சிறைச்சாலையிலேதான் ஒருவேளை இருந்திருப்போம். சிறைச்சாலை எத்தனை கொடுமைகளை இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்ற எங்கள் இயக்கத்திற்கு இழைத்திருக்கிறது, இழைக்கப் பட்டிருக்கிறது என்பதெல்லாம் நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

இன்றைக்குக் கூட நான் இந்த நிகழ்ச்சிக்குப் புறப்படுகிறபோது, என்ன உடையெல்லாம் அழுக்காக இருக்கிறதே, வேறு வேட்டி சட்டை மாற்றிக் கொண்டு போகக் கூடாதா என்று வீட்டிலே கேட்டார்கள். "சிறைக்குத் தானே போகிறேன், இந்த உடையே போதும்" என்று சொல்லி விட்டு வந்தேன். ஏனென்றால் சிறைச்சாலைக்குச்

செல்வதென்பது பொது வாழ்க்கையில், மக்களுக்காக உழைக்கின்ற வாழ்க்கையில், தியாகம் செய்கின்ற வாழ்க்கையில் இதுவும் ஒரு பொழுது போக்காகவே பொது நல வாதிகளுக்கு ஆகிவிட்ட ஒன்றாகும். இந்தச் சிறைச்சாலையிலே 3,000 பேர் தங்கலாம், வசதியாகத் தங்கலாம், காற்றோட்டமான இடத்திலே வாழலாம், உலாவலாம் என்ற அளவிற்கு சகல வசதிகளோடு இந்தச் சிறைச்சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. சிறையிலே அடைக்கப்படுகின்றவர்களுக்கு ஒரே குறை, நினைத்த நேரத்திலும் தங்களுடைய பெற்றோரைப் பார்க்க முடியாது, உற்றார் உறவினரைப் பார்க்க முடியாது, நண்பர்களோடு அளவளாவிட முடியாது, தனிமையிலே வாடிட வேண்டும் என்ற ஒன்றைத் தவிர, சிறைச்சாலையிலே வேறு வசதிகள் குறையக்கூடாது, உலகத் தொடர்பு அவர்களுக்கு இருக்கக் கூடாது என்ற அந்த ஒன்றைத் தவிர வேறு எந்த கஷ்டமும் சிறையிலே இருப்பவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதுதான் இந்த அரசின் எண்ணம். நம்முடைய பழைய சிறைச்சாலையில் சென்னை மாநகரத்திலே இருக்கின்ற சிறைச்சாலையில் ஆயிரத்து ஐநூறு பேர் இருக்கிறார்கள், இடம் போதவில்லை, ஆகவே, இங்கே ஒரு புதிய சிறைச்சாலை நமக்குத் தேவைப்பட்டது. பழைய சிறைச்சாலையே எதிர்காலத்திலே வேறு ஒரு காரியத்திற்குப் பயன்படக் கூடிய அளவிற்கு ஆக்கத் திட்டமிட்டிருக்கிறோம். பழைய சிறைச்சாலை இருந்த இடத்திலே என்ன செய்யலாம், அங்கே இருக்கின்ற பொது மருத்துவமனையை விஸ்தரித்து, அங்கே சில பகுதிகளை பழைய சிறைச்சாலை இருந்த இடத்திலே அமைக்கலாமா என்ற யோசனையும் இன்றைய சர்க்காருக்கு இருக்கின்றது. அதையும் அங்கே செய்யலாம், அப்படி செய்யும் போது இந்தச் சிறைச்சாலையில் இருக்கின்ற வசதி, வாய்ப்பு மேலும் பெருக நல்ல முறையிலே, இங்கேயிருப்பவர்கள் ஆரோக்கியத்தோடு தங்களுடைய தண்டனைக் காலத்தைக் கழிக்க என்னென்ன ஏற்பாடுகள் செய்ய முடியுமோ, அவைகளையெல்லாம் இந்த அரசு செய்யும் என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இப்பொழுது பொது வாழ்க்கையிலே இருக்கின்ற அரசியல் கட்சிக்காரர்களுக்கே ஒரு சங்கடம். மறியல் என்கிறார்கள், போராட்டம் என்கிறார்கள், ஆர்ப்பாட்டம் என்கிறார்கள். எங்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். மறியல் என்கிறோம், போராட்டம் என்கிறோம். காலையிலே கைது செய்யப்படுகின்றோம், மாலையிலே விட்டு விடுகின்றார்கள். எங்களுக்கே அதில் சங்கடம். என்ன கைது செய்து விட்டார்கள், சிறைக்குப் போவதாக நண்பர்கள் எல்லாம் கருதிக் கொண்டிருந்தார்கள், வீட்டிலே கூட போகும்போது போய் வாருங்கள், ஏதோ யுத்தத்திற்கு கட்டபொம்மன் காலத்திலே சென்றது மாதிரி, போய் வா, போய் வா என்று வழியனுப்பி வைத்தார்கள். மாலையிலே வீட்டிற்குப் போக நமக்கே வெட்கமாக இருக்கிறதே என்று போராட்டத்திற்கு வருகிறவர்கள் கருதுவதும் உண்டு. அப்படி வருகின்றவர்களை போலீசார் உடனடியாக அனுப்பி விடுவதற்குக் காரணம், சிறையிலே போதுமான அளவிற்கு இடம் இல்லாததுதான். இனிமேல் அந்தக்குறை இருக்காது என்று நான் கருதுகிறேன்.

வீட்டிற்குச் செல்லும்போது, கொஞ்சம் வீரத்தோடு, நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு செல்லலாம். இந்தத் தேதியில் போய் இன்றைக்குத்தான் வருகிறேன் என்று சொல்லலாம். இல்லாவிட்டால் காலையிலே போனீங்க, இப்போ வந்திட்டீங்க என்று வீட்டிலே இருப்பவர்களுக்கே ஒரு அலுப்பாகி விடுகிறது. அவர்களுக்கே நம்மைப் பற்றி ஒரு நல்ல கௌரவமான எண்ணம் இல்லாமல், போகும்போதே, ஆம், போகப் போகிறார். மத்தியானம் வந்து விடப்போகிறார், இதற்கென்ன வந்து விட்டது என்று சொல்கிறவர்களும் இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் போக்கி, நம்மை வீரர்களாக, வீட்டிற்குச் செல்கிற நேரத்திலே ஏ அப்பா, நான்கு நாட்கள் கழித்து வருகிறார், பாவம், என்ன சாப்பிட்டாரோ என்று தெரியவில்லை என்று வீட்டிலேயிருக்கின்ற மனைவி மக்கள் எல்லாம் நம்மை பரிந்து உபசாரம் செய்கின்ற அளவிற்கு நிலைமை அப்போது இருக்கும். ஆகவே இந்தச் சிறைச்சாலை 3,000 பேர் கொள்ளத்தக்க அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை நானும் வரவேற்கிறேன். அனைவருக்கும் இது பயன்படக்கூடிய வகையிலே இது இருக்கும் என்ற அந்த மகிழ்ச்சியை நான் வெளிப்படுத்தி, இந்தச் சிறைச் சாலையை மிக அற்புதமாக எல்லா வசதிகளோடும் இங்கே உருவாக்கியிருக்கின்ற இந்த அரசு அதிகாரிகளுக்கும், இந்தத் துறையினருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இதை நல்ல வகையிலே பயன்படுத்திக் கொண்டு, சிறைச்சாலை ஒரு பள்ளிக்கூடம் என்ற வகையிலே, புத்தகசாலை என்ற முறையிலே இதைப் பயன்படுத்திக் கொண்டு, உள்ளே குற்றவாளியாக தண்டிக்கப்பட்டவராக வந்தாலும்கூட, வெளியிலே வரும்போது பல குற்றங்களை இழைக்கின்ற வர்களையெல்லாம் திருத்தக் கூடிய ஆசிரியர்களாக வரக் கூடிய அளவிற்கு இங்கே வரக் கூடிய கைதிகள் இருக்க வேண்டுமென்ற வாழ்த்துக்களையும் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ●



# தமிழரசு

## நாட்காட்டி - 2007

## திருவள்ளுவர் ஆண்டு 2037-38

### ஜனவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 7 | 14 | 21 | 28 |
| திங்கள் | 1 | 8 | 15 | 22 | 29 |
| செவ் | 2 | 9 | 16 | 23 | 30 |
| புதன் | 3 | 10 | 17 | 24 | 31 |
| வியா | 4 | 11 | 18 | 25 | |
| வெள்ளி | 5 | 12 | 19 | 26 | |
| சனி | 6 | 13 | 20 | 27 | |

### பிப்ரவரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 4 | 11 | 18 | 25 |
| திங்கள் | | 5 | 12 | 19 | 26 |
| செவ் | | 6 | 13 | 20 | 27 |
| புதன் | | 7 | 14 | 21 | 28 |
| வியா | 1 | 8 | 15 | 22 | |
| வெள்ளி | 2 | 9 | 16 | 23 | |
| சனி | 3 | 10 | 17 | 24 | |

### மார்ச்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 4 | 11 | 18 | 25 |
| திங்கள் | | 5 | 12 | 19 | 26 |
| செவ் | | 6 | 13 | 20 | 27 |
| புதன் | | 7 | 14 | 21 | 28 |
| வியா | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெள்ளி | 2 | 9 | 16 | 23 | 30 |
| சனி | 3 | 10 | 17 | 24 | 31 |

### ஏப்ரல்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | 8 | 15 | 22 | 29 |
| திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| செவ் | 3 | 10 | 17 | 24 | |
| புதன் | 4 | 11 | 18 | 25 | |
| வியா | 5 | 12 | 19 | 26 | |
| வெள்ளி | 6 | 13 | 20 | 27 | |
| சனி | 7 | 14 | 21 | 28 | |

### மே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 6 | 13 | 20 | 27 |
| திங்கள் | | 7 | 14 | 21 | 28 |
| செவ் | 1 | 8 | 15 | 22 | 29 |
| புதன் | 2 | 9 | 16 | 23 | 30 |
| வியா | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெள்ளி | 4 | 11 | 18 | 25 | |
| சனி | 5 | 12 | 19 | 26 | |

### ஜுன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 3 | 10 | 17 | 24 |
| திங்கள் | | 4 | 11 | 18 | 25 |
| செவ் | | 5 | 12 | 19 | 26 |
| புதன் | | 6 | 13 | 20 | 27 |
| வியா | | 7 | 14 | 21 | 28 |
| வெள்ளி | 1 | 8 | 15 | 22 | 29 |
| சனி | 2 | 9 | 16 | 23 | 30 |

### 2007ஆம் ஆண்டின் அரசு பொது விடுமுறை நாட்கள்

| வ.எண். | | நாள் | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஆங்கிலப் புத்தாண்டு | 1. 1. 2007 | திங்கள் |
| 2. | பொங்கல் திருநாள் | 15. 1. 2007 | திங்கள் |
| 3. | திருவள்ளுவர் தினம் | 16. 1. 2007 | செவ்வாய் |
| 4. | உழவர் திருநாள் | 17. 1. 2007 | புதன் |
| 5. | குடியரசு தினம் | 26. 1. 2007 | வெள்ளி |
| 6. | முகரம் | 30. 1. 2007 | செவ்வாய் |
| 7. | தெலுங்குப் புத்தாண்டு | 19. 3. 2007 | திங்கள் |
| 8. | மகாவீர் ஜெயந்தி | 31. 3. 2007 | சனி |
| 9. | மீலாதுன் நபி | 01. 4. 2007 | ஞாயிறு |
| 10. | புனித வெள்ளி | 06. 4. 2007 | வெள்ளி |
| 11. | தமிழ்ப் புத்தாண்டு | 14. 4. 2007 | சனி |
| 12. | மே தினம் | 1. 5. 2007 | செவ்வாய் |
| 13. | சுதந்திர தினம் | 15. 8. 2007 | புதன் |
| 14. | கிருஷ்ண ஜெயந்தி | 4. 9. 2007 | செவ்வாய் |
| 15. | விநாயகர் சதுர்த்தி | 15. 9 2007 | சனி |
| 16. | மகாத்மாகாந்திபிறந்தநாள் | 2. 10. 2007 | செவ்வாய் |
| 17. | ரம்ஜான் | 14. 10. 2007 | ஞாயிறு |
| 18. | ஆயுதபூஜை | 20. 10. 2007 | சனி |
| 19. | விஜயதசமி | 21. 10. 2007 | ஞாயிறு |
| 20. | தீபாவளி | 8. 11. 2007 | வியாழன் |
| 21. | பக்ரித் | 21. 12. 2007 | வெள்ளி |
| 22. | கிறிஸ்துமஸ் | 25. 12. 2007 | செவ்வாய் |

### ஜுலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 1 | 8 | 15 | 22 | 29 |
| திங்கள் | 2 | 9 | 16 | 23 | 30 |
| செவ் | 3 | 10 | 17 | 24 | 31 |
| புதன் | 4 | 11 | 18 | 25 | |
| வியா | 5 | 12 | 19 | 26 | |
| வெள்ளி | 6 | 13 | 20 | 27 | |
| சனி | 7 | 14 | 21 | 28 | |

### ஆகஸ்ட்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 5 | 12 | 19 | 26 |
| திங்கள் | | 6 | 13 | 20 | 27 |
| செவ் | | 7 | 14 | 21 | 28 |
| புதன் | 1 | 8 | 15 | 22 | 29 |
| வியா | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெள்ளி | 3 | 10 | 17 | 24 | 31 |
| சனி | 4 | 11 | 18 | 25 | |

### செப்டம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 30 | 2 | 9 | 16 | 23 |
| திங்கள் | | 3 | 10 | 17 | 24 |
| செவ் | | 4 | 11 | 18 | 25 |
| புதன் | | 5 | 12 | 19 | 26 |
| வியா | | 6 | 13 | 20 | 27 |
| வெள்ளி | | 7 | 14 | 21 | 28 |
| சனி | 1 | 8 | 15 | 22 | 29 |

### அக்டோபர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 7 | 14 | 21 | 28 |
| திங்கள் | 1 | 8 | 15 | 22 | 29 |
| செவ் | 2 | 9 | 16 | 23 | 30 |
| புதன் | 3 | 10 | 17 | 24 | 31 |
| வியா | 4 | 11 | 18 | 25 | |
| வெள்ளி | 5 | 12 | 19 | 26 | |
| சனி | 6 | 13 | 20 | 27 | |

### நவம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | | 4 | 11 | 18 | 25 |
| திங்கள் | | 5 | 12 | 19 | 26 |
| செவ் | | 6 | 13 | 20 | 27 |
| புதன் | | 7 | 14 | 21 | 28 |
| வியா | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெள்ளி | 2 | 9 | 16 | 23 | 30 |
| சனி | 3 | 10 | 17 | 24 | |

### டிசம்பர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஞாயிறு | 30 | 2 | 9 | 16 | 23 |
| திங்கள் | 31 | 3 | 10 | 17 | 24 |
| செவ் | | 4 | 11 | 18 | 25 |
| புதன் | | 5 | 12 | 19 | 26 |
| வியா | | 6 | 13 | 20 | 27 |
| வெள்ளி | | 7 | 14 | 21 | 28 |
| சனி | 1 | 8 | 15 | 22 | 29 |

ஆவின்®

புதியது, தூயது & சுகாதாரமானது

ISO 9001-2000 & HACCP CERTIFIED

# Green மேஜிக்

## 4.5% பால்

எக்ஸ்ட்ரா பவர்

எக்ஸ்ட்ரா சக்தி




**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

1800 425 3300 **(Toll Free)** போன் : 24358033 / 24332383

**www.aavin.net e-mail : aavinnodal@hotmai.com**

# தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை, உண்மை,
வெறும் புகழ்ச்சி யில்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ; ஒரு சொற் கேளீர் !
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் ;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் ;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை ;
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும் ;
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார் ;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.



மகாகவி சுப்ரமணிய பாரதியார்

# மூதறிஞர் இராஜாஜி



மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, அரிஜனங்கள் ஆலயப்பிரவேசம் ஆகியவற்றிற்காக அரும்பாடுபட்டு, விடுதலைப் போராட்டங்களில் சிறப்பான பங்கேற்று இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்த முதல் இந்தியர் மூதறிஞர் இராஜாஜி. சேலம் மாவட்டம் (இன்றைய தருமபுரி மாவட்டம்) தொரப்பள்ளி கிராமத்தில் சக்ரவர்த்தி அய்யங்கார் – சிங்காரம்மாள் தம்பதியினரின் மகனாக 10.12.1878 அன்று இராஜாஜி பிறந்தார்.

1918ஆம் ஆண்டு மதுரை – இராமநாதபுரம் அரசியல் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி அனைவருக்கும் ஆலயப் பிரவேச உரிமைகோரும் தீர்மானத்தை நிறைவேற்றினார். சமபந்தி விருந்தும் நடத்தினார். 1917 ஆம் ஆண்டு சென்னை வந்த மகாத்மா காந்தியை சந்தித்த இராஜாஜி தமது வழக்கறிஞர் தொழிலைத் தூக்கி எறிந்துவிட்டு தீவிர ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு சிறை சென்றார். தான் வகித்து வந்த சேலம் நகர் மன்றத் தலைவர் பதவியையும் ராஜினாமா செய்தார். பின்னர் காங்கிரஸ் இயக்கத்திலிருந்து விலகி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கதர் இயக்கம் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்தினார். திருச்செங்கோடு அருகில் புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமத்தை நிறுவி கிராம மக்களுக்கு கல்வி, மருத்துவ சேவை ஆகியவற்றில் ஈடுபட்டார். காந்தியடிகளின் தண்டி உப்பு சத்யாகிரகப் போராட்டத்தின்போது, இராஜாஜி திருச்சியிலிருந்து வேதாரண்யத்திற்கு நடை பயணமாக சென்று உப்புக் காய்ச்சினார். (இந்த நடைப் பயணத்தின் வழிநடைப் பாடலாகத் தான், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுதே" என்னும் பாடலைப் பாடினார்). இராஜாஜிக்கு 9 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு, தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அரிஜனங்கள் ஆலயப் பிரவேசம், மதுவிலக்கு, கடன் நிவாரணச் சட்டங்கள், கைத்தொழில் பாதுகாப்பு போன்ற முக்கிய சட்டங்களைக் கொண்டு வந்தார். மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருச்செந்தூர் முருகன் கோயில் உள்ளிட்ட பல கோயில்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிட ஆணையிட்டார். சேலம் முனிசிபல் கல்லூரியில் அரிஜன மாணவர்களை சேர்த்தார். நாடு விடுதலையான பின் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். இவருடைய இலக்கியம் மற்றும் சமுதாயப் பணிகளைப் பாராட்டி இவருக்கு "பாரத ரத்னா" விருது வழங்கப்பட்டது. இந்திய மக்கள் அனைவருக்கும் முன் மாதிரியாக திகழ்ந்த மூதறிஞர் இராஜாஜி, 1972ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் இயற்கை எய்தினார்.




**1957** ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், நெடுஞ்சாலைத் துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான ஒரு பிரிவாக செயல்படுகின்றது. 1948 ஆம் ஆண்டு ஒரு சிறிய மண் ஆய்வகமாக செயல்பட ஆரம்பித்து இன்று ஒரு தன்னிறைவு பெற்ற ஆராய்ச்சி நிலையமாக வளர்ந்துள்ளது. மண் ஆய்வகமாக ஆரம்பித்தபோது அப்போதைய தேவைக்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் சாலைகளின் வளர்ச்சிக்காக கற்கலவை, நிலக்கீல் மற்றும் கட்டுமானப் பகுதியிலும் ஆய்வு மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டபோது இந்த ஆராய்ச்சி நிலையம் உருவாக அடித்தளம் இடப்பட்டது. இந்த ஆராய்ச்சி நிலையம் நிறுவ மத்திய சாலை நிதி ஒதுக்கீட்டில் அனுமதி பெறப்பட்டு நிறுவப்பட்டது.

இந்த ஆராய்ச்சி நிலையத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு இதற்கு ஒத்த நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதியின் அருகிலேயே சுமார் 35 ஏக்கர் நிலப்பரப்பில் வருங்கால விரிவாக்கத்தையும் கருத்தில் கொண்டு நிறுவப்பட்டது.

1956 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3ஆம் நாள் அன்றைய மேதகு ஆளுநர் ஸ்ரீ பிரகாசா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டுமானப் பணிகள் ஓராண்டில் நிறைவு பெற்று இவ்வாராய்ச்சி நிலையம் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் அவர்களால் 1957 நவம்பர் 14ஆம் நாள் துவக்கி வைக்கப்பட்டது.

கற்கலவை ஆய்வகத்தின் ஓர் அங்கமாக பாலக் கட்டுமானத்தின் தாங்கு திறனைப் பரிசோதிக்கும் கனரக சோதனைத் தளம், நிலக்கீல், சரளைக் கற்கள், மண் ஆகியவற்றை சாலை தளத்திற்கு உபயோகப்படுத்த அதன் தன்மைகளை ஆய்வு செய்ய ஆசியாவிலேயே முதலாவதாக நிறுவப்பட்ட வட்ட சோதனைத் தளம் அமையப் பெற்றது இந்த ஆராய்ச்சி நிலையத்தின் சிறப்புத் தன்மையாகும்.

ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கலந்தாய்வு ஆகியன நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய மூன்று குறிக்கோள்கள் ஆகும்.

## நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் செயல்பாடுகள்

1. சாலை மற்றும் பாலங்களுக்கான தரம் மற்றும் தனி குறியீட்டுகளை நிர்ணயிக்க ஆய்வுகள் மேற்கொள்வது.

2. சாலைப் போக்குவரத்துத் தொடர்பாக போக்குவரத்து நிலை, விபத்துகள், வேகம், கால தாமதம், நெரிசல், விபத்து ஏற்படும் பகுதிகளைக் கண்டறிதல் மற்றும் அதற்கான தீர்வுகளை கண்டறிதல் போன்ற ஆய்வுகள் மேற்கொள்வது.

3. சாலைகள் மற்றும் பாலப் பணிகளுக்குத் தேவையான நிலக்கீல் கலவை, மேல்தளக் கலவை, கற்கலவை விகிதங்களை வடிவமைப்புச் செய்தல்.

4. சாலை மற்றும் பாலங்களுக்கான கட்டுமானப் பொருட்களான மண், கருங்கல், கற்கலவை, நிலக்கீல் போன்றவைகளை சோதனை செய்தல்.

5. பாலங்கள் மற்றும் கட்டடங்களின் அடித்தளத்தை சோதனை செய்து அவற்றின் வலிமையை ஆய்வு செய்தல்.

6. பொறியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

7. கலந்தாய்வு நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் உதவி செய்தல்.

மேற்கண்ட குறிக்கோள்களை அடைய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பின்வரும் பிரிவுகளில் தன்னிறைவு பெற்ற ஆய்வகங்களைக் கொண்டுள்ளது.

1. மண் மற்றும் அடித்தள பொறியியல்.
2. கற்கலவை மற்றும் கட்டுமானம்.
3. நிலக்கீல் மற்றும் கற்கள்
4. போக்குவரவு மற்றும் போக்குவரத்து

**நூலகம்**

மேற்கண்டவை தவிர நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஒரு சிறப்பு ஆராய்ச்சி நூலகத்தையும் தன்னத்தே கொண்டுள்ளது. இங்கு சுமார் 25,000 புத்தகங்கள் மற்றும் நடவடிக்கைக் குறிப்புகள் உள்ளன. மேலும் ஆண்டு முழுவதும் சுமார் 60 நடவடிக்கைக் குறிப்பேடுகள் சேர்க்கப்படுகின்றன. இந்நூலகம் இந்திய தேசிய அறிவியல் மாநகர் மற்றும் கொல்கத்தாவைச் சேர்ந்த இந்திய சிறப்பு நூலகக் கழகம் மற்றும் தகவல் நிலையத்தின் உறுப்பினராகவும் செயல்படுகின்றது. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையப் பொறியாளர்கள் தயாரித்த 100க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஆய்வறிக்கை I.R.C. யால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் 1989 ஆம் ஆண்டு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் PC-AT (386) PC-XT (8088) கணினிகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கணினிகள் தமிழ்நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகளை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து பராமரிக்கப் பயன்படுத்தப்பட்டது. தற்போது 1,800 சதுர அடி பரப்பில் தனி கணினிப் பிரிவு ஒன்று நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அனைத்து ஆய்வகங்கள் மற்றும் நிருவாகப் பிரிவு கணினிகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது.

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் :**

**மண் ஆய்வகம்**

சுதந்திரம் அடைந்த பின்னர் ஏராளமான நகரங்களும் கிராமங்களும் இணைக்கப்பட்டன. எனவே, புதிய சாலைகள் அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டது. அப்பொழுது கிராமப்புறங்களுக்கு பொருந்தக் கூடிய மலிவான பொருட்களையும், செலவைக் குறைப்பதற்கான தொழில்நுட்பங்களையும் கண்டறிவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நாட்டிற்கு ஏற்ற சாலைகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவைகளை நிறைவேற்றுவதற்கு பல்வகை ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நாடு தொழில் மயமாக்கப்பட்டு வந்ததால், பொருட்கள் மற்றும் மக்கள் போக்குவரத்து அதிகரிக்கலாயிற்று. ஏற்கெனவே அபிவிருத்தி யடைந்திருந்த சாலைகள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

புதிய சாலைகள் அமைப்பதில் ஏற்படும் சில சிரமங்களும், ஏராளமான செலவுகளும் நெடுஞ்சாலைப் பொறியாளர்களுக்கு நவீன கட்டுமானப் பொருட்களையும், கட்டுமான வழிமுறைகளையும் கண்டறிய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் தற்கால உலகமயமாக்கல் கொள்கைகளுக்கேற்ப ஆய்வுப் பணிகளை இத்துறையிலும் செய்வது அவசியமாகியுள்ளது.

## ஆய்வுப் பணிகள்

மலைப் பகுதிகளில் நிலச் சரிவுகளைத் தடுக்கவும் மண் அரிப்புகளைக் கட்டுப்படுத்தவும், வடிகால்களை அமைத்தல் மற்றும் கயிறு வலைகளைப் பயன்படுத்தல் ஆகியவற்றை செய்து நீலகிரி மலைகளில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

களிமண் பகுதிச் சாலைகளில் சாலையின் தாங்கும் தன்மையை அபிவிருத்தி செய்ய சுண்ணாம்பு மற்றும் மணலைப் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் சோதனை செய்து பார்க்கப்படுகிறது.

இந்த ஆய்வுகள் சாலைகளில் தோன்றும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு உதவிகரமாக உள்ளன.

## கற்கலவை ஆய்வகம்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கற்கலவை மற்றும் கட்டுமான ஆய்வகத்தில் சிமெண்ட், மணல், கற்கள், கம்பி, செங்கல், பாவும் கற்கள் ஆகியவற்றுக்கான பல்வேறு ஆய்வுகளும், கற்கலவை தாங்கும் திறன் வளைவு திறன் ஆய்வுகளும் அன்றாடப் பணிகளாக செயல்படுத்தப் படுகின்றன.

மேலும் அனைத்து பெரிய மற்றும் சிறிய பாலங்களுக்கும் கற்கலவை விகித வடிவமைப்பு மிக நேர்த்தியான முறையில் செய்யப்படுகிறது.

பால வேலைகள் நடக்கும் போது அடிக்கடி ஆய்வு மேற்கொண்டதன் பலனாக செயலாக்கும் பொறியாளர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் அறிவுரை வழங்கியதன் மூலம் உயர்தர கட்டுமானங்களைப் பெற முடிந்துள்ளது.

முறுக்குக் கம்பிகளை முதல் முதலாக உபயோகித்து கெடிலம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்த பெருமை இந்த ஆய்வகத்திற்கு உண்டு.

அனல்மின் நிலைய கழிவான நிலக்கரி சாம்பலை தக்க விகிதாசாரத்தில் கற்கலவையில் கலந்து, அதே திறனை பெறும் ஆய்வு செய்ததன் மூலம் பண சேமிப்பும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு வகையிலும் இந்த ஆய்வகம் பங்கேற்றுள்ளது.

தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் பழைய பாலங்கள் மற்றும் கோவில் கோபுர அடித்தளங்களின் தாங்கும் திறன் அறியும் மிக மேலான பணியினை கட்டுமான ஆய்வகம் செய்துள்ளது. அவைகளில் அருள்மிகு இரங்கநாதஸ்வாமி திருக்கோவில் (திருவரங்கம்) கோபுர நிலையைப் பற்றிய ஆய்வு குறிப்பிடத்தக்கது.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பாலங்களின் விவரங்களை கணினி மூலம் அறியத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதிக திறன் ஆய்வு தளம் ஒன்று பாலத்தின் உத்திரங்களை ஆய்வு செய்யும் வகையில் கட்டப்பட்டு செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

**நிலக்கீல் ஆய்வகம்**

சாலைப் பராமரிப்பு மற்றும் கட்டுமானப் பணிகள் தரமாகவும் மற்றும் சிக்கன முறையிலும் நடைபெறுவதற்கான ஆராய்ச்சிப் பணிகள் நிலக்கீல் ஆய்வகத்தில் நடைபெற்று வருகின்றன. நிலக்கீல் கட்டுமானத்திற்கான பொருட்கள் ஆய்வு செய்யப்பட்டு வேலைக்கு உகந்தன என்று பரிந்துரைக்கப்படுகின்றன. நெடுஞ்சாலை மற்றும் விமான ஓடுதளத்திற்கு உகந்த நிலக்கீல் கற்கலவை, தர நிர்ணயத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்படுகிறது. தரக்கட்டுப்பாடு முறைகளும் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு மாநிலத்தில் கிடைக்கப்பெறும் கற்கள் பரிசோதனை செய்யப்பட்டு சோதனை முடிவுகள் பதிவு செய்யப்படுகின்றன. இவற்றை தேவை ஏற்படும் சமயம் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

பற்பல ஆராய்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு பயன்பெறும் வகையில் அமைந்துள்ளன. ஆற்று மணலுக்கு பதிலாக கடல் மணலும், சிமெண்டுக்கு பதிலாக சுண்ணாம்புத் தூளும் நிலக்கீல் கலவைகளில் பயன்படுத்தலாம். அனல்மின் நிலையங்களில் இருந்து கிடைக்கப்பெறும் கழிவுப் பொருளான சாம்பலை நிலக்கீல் கலவையில் பயன்படுத்துவதன் மூலம் பண சேமிப்பு ஏற்படுகிறது. அடி பூச்சிற்கு தேவையான நீர்த்த நிலக்கீல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை சாலைப் பராமரிப்புப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம். சாலைகளின் வழுக்குத் திறனை உகந்த உபகரணத்தின் மூலம் கண்டறிந்து தேவையான நிவர்த்திக்கான ஆலோசனை வழங்கப் படுகிறது. ரப்பர் கலந்த நிலக்கீல் தயாரிக்கப்பட்டு சோதனைகள் செய்யப்பட்டன. சாலைகளின் செயல் திறனை அதிகரிக்க ரப்பர் நிலக்கீல் கலவை பெரிதும் பயன்படுகிறது.

**போக்குவரத்து ஆய்வகம்**

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள போக்குவரத்து ஆய்வகம், போக்குவரத்து மற்றும் போக்குவரத்து பொறியியல் தொடர்பான ஆராய்ச்சித் திட்டங்களைத் தீட்டுவதில் ஈடுபட்டுள்ளது. இந்த ஆய்வகம் போக்குவரத்துத் திட்டமிடல், மேற்பார்வையிடல், மாநிலத்திலுள்ள பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப துரித நெரிசலற்ற போக்குவரத்து ஏற்பட போக்குவரத்துடன் தொடர்புடைய பல்வேறு துறைகளுடன் இணைத்து செயல்பட்டு வருகிறது.

இந்த ஆய்வகம், தானியங்கி வாகனங்களைப் பிரித்து கணக்கெடுக்கும் கருவி, வாகன வேகத்தைக் கணக்கெடுக்கும் கருவி, சாலை திருப்பங்களில் பாதுகாப்பான திருப்பு வேகத்தைக் கண்டுபிடிக்கும் கருவி, கையில் எடுத்துச் செல்லும் வாகன எடை போடும் கருவி, வாகனங்களின் வேகத்தை கணக்கெடுக்கும் கருவி, சாலையில் உள்ள போக்குவரத்து குறிகளின் இரவு நேர ஒளி பிரதிபலிப்பை அளக்கும் கருவி, சாலை மேல்தளத்தின் தரத்தை ஆராயும் கருவி, சாலைகளின் மேடு பள்ளங்களை அளவெடுக்கும் கருவி, சாலைகளில் ஒலி அளவைக் கணக்கிடும் கருவி, ஓடும் வாகனத்தின் எடையை வாகனத்தை நிறுத்தாமல் எடைபோடும் கருவி, சாலை விளக்குகளின் ஒளி அளவைக் கணக்கிடும் கருவி மற்றும் பல நவீன சாதனங்களைக் கொண்டுள்ளது.

சாலை விபத்துகளைக் கணக்கெடுத்து, அடிக்கடி விபத்து ஏற்படும் பகுதிகளைக் கண்டறிந்து அந்த இடத்தில் விபத்துகளைத் தவிர்க்க எடுக்க

வேண்டிய வழிமுறைகளைக் கண்டறிந்து அதனை செயல்படுத்துகிறது. பெரிய விபத்துகள் ஏற்படும் இடங்களைக் கண்டறிந்து அந்த விபத்துகளைத் தவிர்க்க தேவையான விரிவான பொறியியல் தொடர்புடைய வழிமுறைகளைக் கண்டறிதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் ஏற்படும், போக்குவரத்து நெரிசல், தாமதம் மற்றும் விபத்துகளைக் குறைக்க, தடையற்ற வசதியான போக்குவரத்துக்கு, போக்குவரத்துக் கட்டுப்பாடு அதிகாரிகளுடன் கலந்து தேவையான போக்குவரத்து வழிமுறைகளைக் கண்டறிந்து திட்டமிடப்படுகிறது.

மேலும் இந்த ஆய்வகம், எதிர்கால போக்குவரத்து வளர்ச்சிகளை அனுமானித்து தேவையான சாலை வசதிகள் ஏற்படுத்துவதற்கு பல்வேறு போக்குவரத்து கணக்கெடுப்புகள் நடத்தி வருகின்றது.

**பயிற்சி**

பணியில் ஈடுபடும் பொறியாளர்களின் மனதில் தோன்றும் ஐயங்களையும், பணியில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் தொழில்நுட்பப் பயிற்சி அவசியமாகிறது. புத்தகங்களில் சொல்லப்படாத நடைமுறைகளையும் இப்பயிற்சியின் மூலம் அறிய உதவுகிறது. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப்படும் தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம், களப்பொறியாளர்களின், (கட்டுமானம், திட்டமிடுதல் மற்றும் வடிவமைத்தல் ஆகியவற்றில்) அறிவுத் திறனை மேம்படுத்துகிறது.

நெடுஞ்சாலைத் துறையில் உள்ள அனைத்துப் பொறியாளர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் மண், நிலக்கீல் கற்கலவை மற்றும் போக்குவரத்து ஆகிய பிரிவுகளில் தரக்கட்டுப்பாடு சோதனைகளும் பயிற்சியாளர்களுக்கு செய்து காட்டப்படுகின்றது.

**தரக்கட்டுப்பாடு**

நெடுஞ்சாலைத்துறையில் உள்ள அனைத்துப் பணிகளையும் தரத்துடன் செயல்படுத்தும் பொறுப்பு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**கலந்தாய்வுப் பணிகள்**

கட்டட மற்றும் சாலைப் பொறியியல் பிரிவில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஒரு சிறப்பு நிறுவனமாக செயல்படுவதால், இவ்வாராய்ச்சி நிலையத்தில் பல கலந்தாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. மண் மற்றும் அடித்தள பொறியியல் பிரிவில், மண், சரள் அல்லது சுண்ணாம்பு மற்றும் சிமெண்ட் சேர்ந்த மண் கலவை விகிதம் ஆய்வக சோதனைகளுக்குப் பின்னர் இறுதியாக்கம் அல்லது வடிவமைப்பு செய்யப்படுகின்றது. இதே போன்று, பெரிய மற்றும் சிறிய பாலப் பணிகளுக்குத் தேவைப்படும், கற்கலவை கலவை விகிதம் சிக்கனமாகவும், நீடித்து உழைக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றது. பழுதடைந்த பாலங்களின் சீரமைப்புப் பணிக்காக நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளது. நிலக்கீல் ஆய்வகத்தில், தார்ச்சாலை கட்டுமானத்திற்கான மூலப் பொருட்களும், பல்வேறு பணிக்கான மூலப் பொருட்களின் பொருந்தும் தன்மைக்காகவும் ஆய்வு செய்யப்படுகின்றது. நெடுஞ்சாலை மற்றும் விமான ஓடு தளத்திற்கு தேவைப்படும் நிலக்கீல் கலவை, நிலக்கீல் ஆய்வகத்தில் வடிவமைப்பு செய்யப்படுகிறது. கல்சுரங்களிலிருந்து பெறப்படும் கற்களின் தன்மையும் ஆய்வு செய்யப்படுகிறது. ■

# தமிழகத்தில் எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு மற்றும் தடுப்புப் பணிகள்

## உயிர்காக்கும் தடுப்புப் பணிகள்

- நாட்டிலேயே எச்.ஐ.வி./எய்ட்ஸ் திட்டத்திற்காக முதன்முதலாக அமைக்கப்பட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்.
- நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான – 730 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்களைக் கொண்ட மாநிலம் தமிழகம்.
- ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் மூலம் ஒவ்வொரு வருடமும் 5 இலட்சம் நபர்கள் ஆற்றுப் படுத்துதல் மற்றும் பரிசோதனை சேவைகளைப் பெறுகின்றனர்.
- தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் பரவுவதைத் தடுக்கும் திட்டத்தின்கீழ் 3 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் ஒவ்வொரு வருடமும் பரிசோதனை செய்யப்பட்டு பிறக்கும் குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று பரவுவது தடுக்கப்படுகிறது.
- பால்வினை நோய் சிகிச்சையை அளிப்பதற்கென 100 இலவச மருத்துவச் சிகிச்சை மையங்கள் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன.
- தமிழகத்தில் உள்ள 9,400 அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 18 இலட்சம் மாணவர்களுக்கு "பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித்திட்டம்" மூலம் "வாழ்வியல் திறன் கல்வி" அளிக்கப்படுகின்றது.
- "பள்ளி சாரா இளைஞர்களுக்கான விழிப்புணர்வு கல்வித் திட்டம்" மூலம் 4.2 இலட்சம் பள்ளி சாரா இளைஞர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வு அளிக்கப் படுகின்றது.
- அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக கல்லூரிகளில் பயிலும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் தமிழகத்தில் உள்ள 700 கல்லூரிகளில் செஞ்சுருள் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு 35,000 இளைஞர்களுக்கு எச்.ஐ.வி./எய்ட்ஸ் விழிப்புணர்வு அளிக்கப்படுகின்றது.
- எச்.ஐ.வி. தொற்று ஏற்படுவதைத் தடுக்கும் வண்ணம், பாதுகாப்பான இரத்தம் அனைவருக்கும் கிடைக்கும்படியாக 84 இரத்த வங்கிகளும், 28 இரத்த சேமிப்பு மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- தன்னார்வ இரத்த தானம் மூலம் 73 சதவிகிதம் இரத்தம் பெறப்பட்டு, நாட்டிலேயே தன்னார்வ இரத்த தானத்தில் தமிழகம் முன்னோடி மாநிலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

## எச்.ஐ.வி./எய்ட்ஸ் உள்ளோருக்கான பாதுகாப்பு மற்றும் ஆதரவுப் பணிகள்

- தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள 15 எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிகிச்சை மையங்கள் மூலம் சுமார் 12,000 எச்.ஐ,வி./ எய்ட்ஸ் உள்ளோர் எச்.ஐ.வி. கூட்டு மருந்து சிகிச்சையை இலவசமாகப் பெறுகின்றனர்.
- எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்வோருக்கு தங்கும் வசதியுடன் கூடிய பாதுகாப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள் 100 அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றது.
- எச்.ஐ.வி./எய்ட்ஸ் உடன் வாழ்வோருக்கு உள்நோயாளி மருத்துவச் சிகிச்சையையும் உளரீதியான மற்றும் சமூக ரீதியான ஆதரவையும் வழங்க 30 சமூக நல மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

# 1,000 கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறு நிதியுதவி




மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

சென்னை மாநகராட்சி சார்பில் கலைவாணர் அரங்கில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 1,000 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கும் விழா 27.11.2006 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார். மக்கள் நல்வாழ்வுத்துறை செயலர் திரு. வி. கே. சுப்புராஜ், இ.ஆ.ப., முன்னிலை உரையாற்றினார். சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், மன்ற எதிர்க்கட்சித் தலைவர் சைதை திரு. பி. ரவி, நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) திரு. அ.மணிவேலன், 6ஆவது வார்டு குழுத் தலைவர் திரு. மு. தனசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியம் தமது தலைமையுரையில், "சென்னை மாநகராட்சியில் உள்ள 155 வார்டு அலுவலகங்களிலும் அரசின் திட்டங்கள் குறித்த விவரங்கள் வைக்கப்படும். சென்னை மாநகராட்சிக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 1.54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்மூலம் 1,024 மகளிர் பயனடயவுள்ளார்கள். அடுத்த மாதம் வடசென்னையில் 750 பயனாளிகளுக்கு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது" என்றார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்

அவர்கள் சிறப்புரையாற்றும்போது, "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்கு ரூ. 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 2 இலட்சத்து 11 ஆயிரம் பேர் பயனடையவார்கள். தற்போது 1 இலட்சத்து 40 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் 1,000 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் விழாப் பேருரை ஆற்றினார். அப்போது அவர் பேசியதாவது "ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச் சத்தான உணவு உண்ணவும், எடை குறைவு இல்லாத குழந்தை ஈன்றெடுக்கவும், இரத்த சோகை நோய் ஏற்படுவதை தடுக்க ஏதுவாகவும், பிரசவ காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்யும் வகையிலும், மகப்பேறு காலத்திற்கு முன்னர் 3 மாதத்திற்கும், பின்னர் 3 மாதத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு ரூ.6,000 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் என்று தலைவர் கலைஞர் அறிவிப்பால் இன்று நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 19 வயதிற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். பயனாளி வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்க வேண்டும். அவரது குடும்ப வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தேர்தலுக்கு முன்னரே வாக்குறுதி அளித்தபடி, இத்திட்டத்தின் மூலம் நிதியுதவியினை அண்ணா பிறந்த நாளான 15.9.2006 அன்று வழங்கி துவக்கி வைத்தார்கள். இந்தத் திட்டம் 1989ஆம் ஆண்டில் ரூ.200 எனவும், பின்னர் 1996ஆம் ஆண்டில் ரூ.300 எனவும், அதன்பின்னர் தற்போழுது 2006ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 என உயர்த்தி ஆறு மாதத்திற்கு ரூ.6,000 என வழங்க தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டார்கள். பெண்கள் முன்னேற்றம் காண பல சிறப்பான திட்டங்களை தலைவர் கலைஞர் முதல்வராக இருந்தபோது, வகுத்து தந்துள்ளார்கள். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை சட்டம் வேண்டும் என்று தந்தை பெரியார் 1929ஆம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றினார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டில் அதனை நிறைவேற்றினார்கள். அதேபோன்று எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பெண்களுக்கு திருமண நிதியுதவித் திட்டம் அமல்படுத்தி நிறைவேற்றியவர்தான் தலைவர் கலைஞர் ஆவார்கள். 1989ஆம் ஆண்டில் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், பயனாளி ஒருவருக்கு ரூ.5,000 எனவும் 1996ஆம் ஆண்டில் ரூ.10,000 எனவும் தற்பொழுது 2006ஆம் ஆண்டில் ரூ.15,000 என உயர்த்தி வழங்கியுள்ளார்கள். ஆனால் சென்ற ஆட்சியாளர்கள் இந்தத் திட்டங்களை அறவே நிறுத்திவிட்டார்கள். சென்ற ஆட்சியாளருக்கு திருமணம் என்றால் பிடிக்காது என்ற காரணத்தினால் இந்த திருமண உதவி திட்டத்தினை நிறுத்தி இருப்பார்கள். முதல்வர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீட்டையும், சென்னை மாநகராட்சி துணை மேயராக பெண் ஒருவரையும், சேலம், மதுரை மாநகராட்சிக்கு பெண் மேயர்களையும் அமர்த்தியுள்ளார்கள். அதேபோன்று அடுப்பு ஊதும் பெண்கள் நிலை மாற கேஸ் அடுப்பு வரும் பொங்கல் திருநாள் முதல் வழங்கப்படுகிறது. சுயஉதவிக் குழுக்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் துவக்கப்பட்டதாகும். சென்ற ஆட்சியாளர்கள் ஏதோ தாங்கள்தான் சுயஉதவி குழுக்களை உருவாக்கியதாக தம்பட்டம் அடித்து கொண்டு, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறுத்தி விடுவதாகவும் பொய் பிரசாரம் செய்தார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் 2006ஆம் ஆண்டு முதல்வர் ஆன பின்பு சமூக நலத்துறையில் இருந்த சுய உதவிக் குழுக்களை உள்ளாட்சித்துறையின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள். தற்பொழுது சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு கொண்டு இருக்கிறது. இந்த சிறப்பான விழா உங்களை அழைத்து பயனடைவதற்காக நடத்தப்பட்டது மட்டுமன்றி, மற்றவர்களும் இந்த பயனை அறிந்து பயன்பெற வேண்டும் என்பதற்காக நடத்தப்பட்டதாகும்".

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.எஸ்.பாபு, நிலைக்குழு தலைவர் (பணிகள்) திரு. சுரேஷ்குமார், மண்டல குழுத் தலைவர்கள் டன்லப் திரு. பிரவி, திரு.வி.சண்முகம்,திரு.மா.நெடுமாறன், திரு.ஜெ. சீனிவாசன், திரு. எல்.சுரேஷ்பாபு, திரு.மா.பா.அன்புதுரை, திரு.கே.ஏழுமலை, திரு.க.தனசேகரன், திரு.எம். ஜெயராமன், மன்ற உறுப்பினர்கள் மற்றும் திரு.எல். பலராமன் ஆகியோர் கலந்துகொண்டனர். மாவட்டக் குடும்ப நலத்துறை மருத்துவ அலுவலர் திருமதி. சாந்தகுமாரி நன்றியுரை ஆற்றினார்.

– ச. செல்வராஜ்
செய்தி மக்கள்தொடர்பு அலுவலர்
சென்னை மாநகராட்சி

* * *



# ரூ.45.67 கோடி மதிப்பீட்டில் பெரம்பூர் மேம்பாலப் பணி

மாண்புமிகு ஊரக வளர்ச்சி
மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின்
அவர்கள் துவக்கி வைத்தார்.

சென்னை பெரம்பூர் மேம்பாலப் பணியினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் முன்னிலையில் 25.11.2006 அன்று குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்து செய்தியாளர்களிடம் பேசுகையில், "கடந்த 1999ஆம் ஆண்டு நான் சென்னை மாநகராட்சி மேயராக இருந்தபோது ஒன்பது மேம்பாலங்கள் கட்டி முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது. பெரம்பூர் மேம்பாலப் பணி மண் பரிசோதனைக்காக சிறிது காலம் தேவைப்பட்டது. அதன் பின்னர் வந்த ஆட்சியாளர்களால் தொடர்ந்து இந்த பெரம்பூர் மேம்பாலப் பணியினை மேற்கொண்டு இருந்தால் ஏறக்குறைய எட்டு மாதத்திற்குள் இந்தப் பணியினை முடித்திருக்கலாம். கடந்த ஆட்சியாளர்கள் இந்த பாலம் கட்டுவதில் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு, முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றஞ்சாட்டி, இந்தப் பாலம் கட்டும் பணியினை அறவே நிறுத்திவிட்டார்கள். அப்போது இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிக்கு ரூ.34.84 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டது. அப்போது ஆட்சியாளர்களால் ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகம் தலைமையிலே விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. ஏறத்தாழ 2 ஆண்டு காலம் விசாரணை நடைபெற்றது. ஆனால் எந்தவித குற்றச்சாட்டும் அந்த விசாரணைக் கமிஷனால் குறிப்பிடப்படவில்லை. இப்போது மீண்டும் கலைஞர் தலைமையில் ஆட்சி ஏற்பட்ட பிறகு மீண்டும் இந்த பெரம்பூர் மேம்பால கட்டுமானப் பணி நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டு, இன்று முதல் துவக்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியாளர்கள் இந்தப் பணியினை அரசியல் நோக்கத்தோடு நிறுத்தப்பட்டதன் காரணமாக அரசுக்கு ஏறத்தாழ ரூ.8 கோடி

இழப்பு ஏற்பட்டுள்ளது. இப்பாலத்தின் மூலம் பெரம்பூர், கொளத்தூர், பெரியார்நகர், அயனாவரம் மற்றும் மாதவரம் ஆகிய பகுதியினை சேர்ந்த மக்களும், குறிப்பாக வடசென்னையை சேர்ந்த மக்கள் பயனடைவார்கள். இந்த பெரம்பூர் மேம்பால நீளம் 991 மீட்டர் ஆகும். அகலம் 16,13 மற்றும் 5.5 ஆகும். தற்பொழுது இப்பாலப்பணி மேற்கொள்ள திருத்திய மதிப்பீடு ரூ. 45.67 கோடியாகும். பெரம்பூர் மேம்பாலப் பணியை 8 மாதத்திற்குள் முடிப்பதாக ஒப்பந்ததாரரான திருவாளர்கள் நேஷனல் பில்டிங் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் தெரிவித்துள்ளார்கள். அதற்குள்ளாக முடிக்க வேண்டும் என்று அரசும், சென்னை மாநகராட்சியும் கேட்டுக் கொண்டுள்ளது. அடுத்த மாதம் 15ஆம் தேதிக்குள் பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை (சேமியர்ஸ் சாலை) – டர்ன்புல்ஸ் சாலை சந்திப்பு, வடக்கு உஸ்மான் சாலை – டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை சந்திப்பு, கோபதி நாராயணா சாலை – திருமலை சாலை சந்திப்பு, உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பு ஆகிய நான்கு மேம்பாலங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்கள்.

இந்த நான்கு மேம்பாலங்களுக்கும் மண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூ.58.52 கோடிக்கு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இப்பணிகளை திருவாளர்கள் கேமன் இந்தியா லிமிடெட் அவர்களின் ஒப்பந்தத் தொகையான ரூ.40.80 கோடிக்கு அரசின் ஆணை வேண்டி அனுப்பப்பட்டுள்ளது" என்றார்.

அதன் பின்னர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஜே.சி.பி வாகனத்தை இயக்கி பணியைத் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், துணை மேயர் திருமதி ஆர். சத்தியபாமா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு. கே. தீனபந்து, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., துணை ஆணையர் (பணிகள்) திரு. அ. நெடுஞ்செழியன், பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. மகேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.செங்கை சிவம், மண்டல குழு தலைவர்கள் திரு. மா. நெடுமாறன், திரு. எஸ். சுரேஷ்பாபு, டன்லப் திரு. பி.ரவி, திரு. ஜே. சீனிவாசன் மற்றும் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். *



# முதன்முறையாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பங்கேற்ற மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகள் சீராய்வுக் கூட்டம்

முதல் முறையாக சேலம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பங்கேற்ற, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகள் சீராய்வுக் கூட்டம், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





சேலம் மண்டல அளவில் சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகள் சீராய்வுக் கூட்டம் 28.11.2006 அன்று சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் செய்தி மற்றும் சுற்றுலாத் துறை செயலாளர் திரு. வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள், மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளை ஆய்வு செய்து பேசியதாவது:-

அரசின் திட்டங்களை பொதுமக்கள் எளிதாக அறிந்து பயன்பெறும் வகையில், அனைத்துத் துறையின் திட்டங்களையும், தொகுத்து "மக்கள் சாசனம்" புத்தகத்தைத் தயாரித்து பிப்ரவரி மாதத்திற்குள் வெளியிட்டு வினியோகம் செய்திட வேண்டும். செய்தித் துறையில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்களை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

இதை நல்லமுறையில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பயன்படுத்தி அரசின் திட்டங்கள் ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குச் சென்றடையும் பணியினை சிறப்பாக ஆற்றிட வேண்டும். புதிய சிந்தனையுடன் பணியாற்றி செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்ற துறைகளை விட தலைசிறந்து விளங்க செயல்பட வேண்டும். செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலகங்களில் காலியாகவுள்ள அனைத்துப் பணியிடங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று நிரப்ப உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். செய்தி மக்கள் தொடர்பு

அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆகியோருக்கு கணினிப் பயிற்சி வழங்கப்படும். பின்னர், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நிறைவுரை ஆற்றி பேசியபோது, "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நல்லாட்சியில் செய்தித்துறை சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. இதற்கு மக்கள் தொடர்பு அலுவலர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும்தான் காரணம். மண்டல அளவில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணி ஆய்வுக் கூட்டம் நடத்த வேண்டும், அவர்களின் செயல்பாடுகளை நேரில் அறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த ஆய்வுக் கூட்டம் முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் துவக்கப்பட்டுள்ளது. எல்லாத் துறைகளையும் ஒருங்கிணைத்து அனைத்துத் துறைகளின் சாதனைகளையும், சிறப்பு அம்சங்களையும் மக்களுக்கு எடுத்துச் சென்று நமது பணிகளை அனைவரும் போற்றும் வகையில் செயல்பட வேண்டும் என்பதே எனது விருப்பம். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மாதாந்திர அறிக்கையினை குறித்த காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சிறப்பாக செயல்படுகின்ற மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூன்று பேருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் விருது பெறும் திட்டத்தை அறிவித்துள்ளோம். அந்தப் பரிசினை பெறுவதற்கு போட்டிபோட்டு நீங்கள் பணி ஆற்றுவீர்கள். உங்கள் பணிகளில் போட்டி இருந்தால்தான் அரசுக்கு நல்ல பெயர் ஈட்டித் தர முடியும். மற்ற துறைகளைக் காட்டிலும், செய்தித்துறை சிறப்பாக செயல்படுகிறது என்ற பெருமையை மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஏற்படுத்தித்தர வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் அரசின் சாதனைகளை தெருக்கூத்துக் கலைஞர்கள் மூலம் பூலாவரி கிராமத்தில் முதல் முறையாக நடத்தப்பட்டுள்ளது வரவேற்கத் தக்கதாகும். அழிந்து வரும் கிராமியக் கலைகளை இதன்மூலம் பாதுகாக்கப் படுவதை தனிப்பட்ட முறையில் பாராட்டுகிறேன்.

ஊதியத்திற்கு ஊழியம் செய்கிறோம் என்பதைவிட உள்ளத்திற்கு மன நிறைவோடு பணியாற்றுகிறோம் என்ற உணர்வோடு செயல்பட வேண்டும். மீண்டும் அடிக்கடி இதுபோன்ற கூட்டங்கள் நடத்தப்பட்டு, கருத்துக்கள் பரிமாற்றம் செய்யப்பட்டு மேலும் முன்னேற்றம் பெறுவதற்கு சிறந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் " என்று குறிப்பிட்டார்.

செய்தி – மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி. கோசலராமன், இ.ஆ.ப.,

"தமிழ்நாடு அரசு ஆண்டுக்கு **40** ஆயிரம் கோடி ரூபாய் வரவு செலவு திட்டத்தில் செலவினத்திற்காக ஒதுக்குகிறது. இந்த தொகையின் முழுப்பலனும் மக்களைச் சென்றடைய மக்கள் தொடர்பு அலுவலர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தி விளம்பரப் பணியாற்ற வேண்டும். அப்போதுதான் இதன் முழுப் பலன் கிடைக்கும்" என்று கூறினார்.

இச்சீராய்வுக் கூட்டத்தில், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ந. மதிவாணன், இ.ஆ.ப., நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி. சுந்தரமூர்த்தி இ.ஆ.ப., தருமபுரி மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) திரு. ஆர். நாகராஜன் ஆகியோர் பேசினார்கள். செய்தி மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு. ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர் திரு. டி. தாமரைச்செல்வன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு. தா.மனோகரன் (சேலம்), திரு. கி. கண்ணதாசன் (நாமக்கல்), திரு. மு. பழனிச்சாமி, (தருமபுரி), திரு. எஸ். ஆர். சாரதி (கிருஷ்ணகிரி), திரு. கு. தாணப்பா (சேலம் மாநகராட்சி) மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * *

# மறைமலையடிகளார் பெயர்த்திக்கு நிதியுதவி





மறைமலையடிகளாரின் பெயர்த்தியும் தமிழறிஞர் புலியூர்க் கேசிகனின் மனைவியும் ஆகிய திருமதி. சுந்தரத்தம்மை அவர்கள் வயது முதிர்ந்த நிலையில் சிரமப்பட்டு வருவதாகவும், திரு. புலியூர்க்கேசிகன் சேமித்து வைத்திருக்கும் அரிய தமிழ் நூல்களைப் பராமரிக்க இயலாததால் அவற்றைப் பயனுள்ள விதத்தில் வழங்க இசைவளிப்பதாகவும் அந்நூல்களைப் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு ஈடாகத் திருமதி. சுந்தரத்தம்மை அவர்களின் மருத்துவச் செலவிற்கு நிதியுதவி செய்திட வேண்டுமென்றும் திருமதி. சுந்தரத்தம்மையின் மகள் செல்வி கலைச்செல்வி அவர்கள் அரசிற்கு வேண்டுகோள் விடுத்தார். இவ்வேண்டுகோளினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பரிவுடன் ஆய்வு செய்து திருமதி. சுந்தரத்தம்மை அவர்கள் பாதுகாத்து வைத்துள்ள அரிய பழைய தமிழ் நூல்களையும், ஆங்கில நூல்களையும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் பெற்றுக் கொண்டு அவற்றிற்கு ஈடாகத் திருமதி. சுந்தரத்தம்மை அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், அவரது மருத்துவச் செலவிற்காக 50 ஆயிரம் ரூபாயும் என மொத்தம் ஒன்றரை இலட்சம் ரூபாய் வழங்கிடவும், மறைமலையடிகளாரின் கொள்ளுப் பெயர்த்தி செல்வி கலைச்செல்விக்கு தமிழ் வளர்ச்சித் துறையில் முதுநிலை ஒப்பச்சர் பணி நியமனம் வழங்கிடவும் அனுமதி அளித்தார்.

அதன்படி, மறைமலையடிகளின் பெயர்த்தி திருமதி. சுந்தரத்தம்மை அவர்களுக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் நிதியுதவியையும், மறைமலையடிகளாரின் கொள்ளுப் பெயர்த்தி செல்வி கலைச்செல்வி அவர்களுக்கு பணி நியமன ஆணையையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2.12.2006 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார். ★

# பரிதிமாற் கலைஞர் நூல்கள் நாட்டுடைமை





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பரிதிமாற் கலைஞரின் நூல்களை நாட்டுடை மையாக்கி அவர்தம் மரபுரிமையர்களுக்கு பதினைந்து இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையை சென்னை – தலைமைச் செயலகத்தில் 2.12.06 அன்று வழங்கினார்.

தமிழை உயர்தனிச் செம்மொழியென்று முதல் குரல் கொடுத்தவர் பரிதிமாற் கலைஞர். இவர் சூரியநாராயண சாஸ்திரி என்ற தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று அழைத்துக் கொண்டவர்.

மிகுந்த தமிழ்ப் பற்றுடனும் ஈடுபாட்டுடனும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். கலாவதி, மதிவாணன், நாடகவியல், தமிழ் மொழியின் வரலாறு, தமிழ்ப் புலவர் சரித்திரம், சித்திரக் கவி விளக்கம் முதலிய 13 நூல்களை எழுதித் தமிழுக்குப் பெரும் வளம் சேர்த்துள்ளவர்.

இப்பெருமகனாரது பணியினைப் போற்றும் வகையில் பரிதிமாற் கலைஞர் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அவரது வழித்தோன்றல்களுக்கு உரிய பரிவுத் தொகை வழங்கப்படும் எனக் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. பரிதிமாற் கலைஞர் அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அவர் தம் மரபுரிமையர் 19 பேருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிவுத்தொகை பதினைந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை 2.12.2006 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள். பரிதிமாற் கலைஞரின் வழித்தோன்றல்களாகிய 19 பேர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் இப்பரிவுத் தொகையைப் பெற்றுக் கொண்டனர்.

★ ★ ★

# பொலிவுடன் புதுப்பிக்கப்பட்ட கன்னிமாரா பொதுநூலகம்

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் உள்ளது போல் சென்னையிலும் பல கட்டடங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் கன்னிமாரா பொது நூலகக் கட்டடம். சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையை நீங்கள் கடந்து செல்லும்போது பிரம்மாண்டமான பரப்பளவில் ஓர் அழகான அசர வைக்கும் கட்டடம் உங்கள் பார்வையை சுண்டி இழுக்கும். நீங்களாகவே விரும்பினால் கூட உங்கள் கண்கள் அந்தக் கட்டடத்தை விட்டு அகலாது. புகழ்வாய்ந்த புத்தக ஆர்வலர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பல அரிய புத்தகங்களை வழங்கி மக்களின் அறிவுப் பசியை தீர்க்கும். கன்னிமாரா பொது நூலகத்தின் பழைய ஆரம்ப காலக் கட்டடம் இப்போது பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

உலகத் தரம் வாய்ந்த கன்னிமாரா பொது நூலகக் கட்டடம் ஆங்கிலோ–சொரசனிக் கட்டடக் கலை பாணியைப் பின்பற்றிக் கட்டப்பட்டதாகும். இக்கட்டடத்தை





வடிவமைத்தவர் அப்போதைய சென்னை மாகாண அரசு கட்டடக்கலை வல்லுநரான பொறியாளர் ஹென்றி இர்வின் என்பவராவார். அரை வட்ட வடிவில் வடிவமைத்துக் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தில் அமைந்துள்ள அரிய வகை அமைப்பைக் கொண்ட நீளமான அறை, சொரசனிக் பாணியை பின்பற்றிக் கட்டப் பெற்றதாகும். இவ்வகை அரிய கட்டடக் கலையை இந்நாளில் காண்பது அரிது.

அரை வட்ட வடிவில் அமைந்த நீண்ட பெரிய வாயில் மண்டபம், அழகும் நளினமும் வாய்ந்த படிப்பறை, அழகிய தேக்கு மரத்தாலான நூல் அடுக்குகள், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய மேற்கூரை, அகாந்தஸ் இலைகளும், பூக்களும் கொண்ட அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள், சன்னல்கள் மற்றும் புத்தக அலமாரிகள், பக்கிங்காம் கால்வாய் வழி படகுகளில் ஆந்திரப் பிரதேச கிருஷ்ணா மாவட்டத்தில் இருந்து ஏற்றி வரப்பட்ட சலவைக் கற்கள் பதிக்கப் பெற்ற தரைத்தளம் என எங்கு நோக்கினும் நம்மைப் பரவசப்படுத்தும் அழகுத் தோற்றம் கொண்டது இக்கட்டடம். இத்தகு எழில் வாய்ந்த இக்கட்டடத்தின் அன்றைய கட்டுமானச் செலவு ரூ.5,75,000 என்பது நமக்கு வியப்பூட்டும் மற்றொரு செய்தியாகும்.

பழைமை வாய்ந்த நம் நாட்டின் பெருமை படக்கூடிய புராதனமான கட்டடங்களுள் ஒன்று – சென்னை பாந்தியன் சாலையில் அமைந்திருக்கும் கன்னிமாரா பொது நூலகக் கட்டடம். நூறு ஆண்டுகள் கழித்தும் இன்னும் புகழோடும் பொலிவோடும் திகழும் இக்கட்டடம், இந்தோ – சொரசனிக் முறையிலான கட்டட அமைப்பிற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

சென்னைக்குப் புகழ் சேர்க்கும் இக் கன்னிமாரா பொது நூலகம் 1890ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் தேதி அப்போதைய சென்னை மாநில ஆளுநராக இருந்த கன்னிமாரா பிரபுவினால் அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டடம் முடிந்து 1896–ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த ஆர்த்தர் எலிபேங்க் ஹேவ் லாக் (Sir Arthur Eli Bunk Haw Lock) என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. சென்னை நகரில் முதல் பொது நூலகம் அமைய காரணமாக இருந்த கன்னிமாரா பிரபுவின் நினைவாக இந்நூலகத்திற்கு கன்னிமாரா பொது நூலகம் எனப் பெயரிடப்பட்டது. இந்த கட்டடத்தைப் பார்ப்போரை பிரமிக்க வைக்கும்



**"வேலைப்பாடுகள் நிறைந்த மேற்கூரையின் இருபுறங்களிலும் உள்ள கண்ணாடிகள் புதுப்பிக்கப்பட்டு அவ்வறையின் ஜன்னல்கள் சீரமைக்கப்பட்டதோடு அங்குள்ள தூண்களிலும் ஸ்தகோ முறையில் ஒட்டப்பட்ட ஓவியங்களையும் சீர்செய்துள்ளனர்."**

பிரம்மாண்டமான அறையின் இருபுறங்களிலும் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அந்த அறையின் பிரம்மாண்டமும், அதன் மேல் கூரையில் செய்யப்பட்டுள்ள வண்ணமயமான அலங்காரமும் பார்ப்போரை அப்படியே அசர வைக்கின்றன.

நூற்றாண்டுகளை கடந்துவிட்ட இந்தச் சரித்திரப் புகழ்வாய்ந்த கட்டடத்தின், நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்த மங்களூர் ஓடுகள் மற்றும் அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய கண்ணாடிகளும் சீர்குலைந்ததால் மழைக் காலங்களில் நீர்க் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து கூரையின் மேல் பகுதியில் உள்ள அழகான வேலைப்பாடுகளும் பிரிந்து வரத் தொடங்கின. அதே நேரம் புத்தகங்களை வைக்கும் அலமாரிகள் சுவற்றில் ஒட்டி வைக்கப் பட்டிருந்த அழகான ஓவியங்கள், தூண்களில் உள்ள சிறப்பான நுணுக்கமான வேலைப்பாடுகள் காலப் போக்கில் சிதையத் தொடங்கின. அதோடு அந்த பிரம்மாண்டமான அறையின் இருபுறங்களிலும் உள்ள வேலைப் பாடுகளுடன் கூடிய கண்ணாடிகளும் அங்குள்ள தூண்களில் உள்ள அரிய வேலைப்பாடுகளும் உரிந்து வரத் தொடங்கின.

இந்திய தொல்லியல்துறை சென்னை வட்ட தொல்லியல் கண்காணிப்பாளர் திருமதி சத்தியபாமா பத்ரிநாத் மற்றும் அதே துறையைச் சார்ந்த கட்டட பாதுகாப்பு அலுவலர் திரு. பகவான் சாரதி ஆகிய இருவரும் நீர்க் கசியும் கூரையை சீர்செய்வதே மிகக் கடினமான வேலையாக இருந்ததாகக் குறிப்பிட்டனர்.

தொல்லியல் துறையினர் புதிதாக மங்களூர் கண்ணாடிகளைப் பதித்துள்ளனர். எளிதில் உடைக்க முடியாத பாலி கார்பனேட் ஷீட்களும் பயன்படுத்தப் பட்டிருந்தது. அதிலிருந்த விரிசல்களையும் அகற்றிப் புதுப்பித்துள்ளனர். கூரையில் உள்ள பலகைகளில் இருந்த பூ வேலைப்பாடுகள் மீண்டும் செய்யப்பட்டுள்ளது. கூடவே அவைகளை சரியான அளவிற்கு ஏற்றாற்போல் வெட்டியும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூரையின் மற்ற ஓவியங்கள் அனைத்தையும் மீண்டும் சீர்செய்து அதன் இழந்த பொலிவை மீட்டுக் கொடுத் துள்ளனர். வேலைப்பாடுகள் நிறைந்த மேற்கூரையின் இருபுறங்களிலும் உள்ள கண்ணாடிகள் புதுப்பிக்கப் பட்டு அவ்வறையின் சன்னல்கள் சீரமைக்கப் பட்டதோடு அங்குள்ள தூண்களிலும் ஸ்தகோ முறையில் ஒட்டப்பட்ட ஓவியங்களையும் சீர் செய்துள்ளனர். உயர்ந்த ரக பர்மா தேக்கினால் செய்யப்பட்ட தூண்களும் மிக அழகாகவும் நேர்த்தியாகவும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.



"அங்குள்ள வளைந்து செல்லும் மரப்படிகள் அந்தப் படிகளின் கைப்பிடிகளில் உள்ள அழகான நுணுக்கமான வேலைப்பாடுகள் ஆகியவற்றை பார்க்கும்போது நாமே நூறு ஆண்டுகள் கடந்து பின்னோக்கி சென்று விட்டது போன்ற ஓர் எண்ணத்தை நம்முன் உருவாக்குகிறது."

இந்தக் கட்டடத்தின் புராதனச் சிறப்பை மனதில் கொண்டு இந்திய தொல்லியல் துறை மத்திய–மாநில அரசு நிதி உதவியுடன் ரூ.1.21 கோடியில் அதன் பழைய பொலிவை அப்படியே மீட்டுக் கொண்டு வந்துள்ளது. அந்தப் பழைய கட்டடத்தின் பிரம்மாண்டமான வாசகர்கள் படிக்கும் அறையை பார்த்தாலே மனதில் ஒரு பிரமிப்பும் வியப்பும் உண்டாகிறது. மிக அதிக உயரத்தில் உள்ள மேற்கூரையில் அழகான வண்ண மயமான பூ வேலைப்பாடுகள் நம் நெஞ்சை கொள்ளை கொள்கின்றன. அதேபோல் அந்தக் கூரையின் இருபுறங்களிலும் கண்ணாடிகள் மீண்டும் ஒட்டப்பட்டு அப்படியே நம்மை பிரமிப்பில் ஆழ்த்துகிறது. அந்த அறையின் இருபுறங்களிலும் காலத்தால் வீணாகிவிட்ட கண்ணாடிகள் நீக்கப்பட்டு அதே இடத்தில் புதிய கண்ணாடிகள் ஒட்டப்பட்டுள்ளன. சில கண்ணாடிகள் இதற்கென்று தனியாக ஜெர்மனியிலிருந்தும், சில கண்ணாடிகள் கேரளாவிலிருந்தும் வரவழைக்கப்பட்டுள்ளன. அந்தக் கண்ணாடிகளில் அன்று கட்டப்பட்டபோது எந்த ஓவியம் இருந்ததோ அவற்றை அப்படியே மீண்டும் ஓவியர்கள் வரைந்துள்ளனர். பகல் நேரங்களில் சூரிய ஒளி அந்தக் கண்ணாடியில் படும்போது அவை பல வண்ணங்களில் ஒளிர்கின்றன.

அங்குள்ள வளைந்து செல்லும் மரப்படிகள் அந்தப் படிகளின் கைப்பிடிகளில் உள்ள அழகான நுணுக்கமான வேலைப்பாடுகள் ஆகியவற்றை பார்க்கும்போது நாமே நூறு ஆண்டுகள் கடந்து பின்னோக்கி சென்று விட்டது போன்ற ஓர் எண்ணத்தை நம்முன் உருவாக்குகிறது.



அந்த பிரம்மாண்டமான அறையின் இரு புறங்களிலும் விலை உயர்ந்த அழகான மர அடுக்குகள் உள்ளன. அந்த அடுக்குகளில் பத்திரிகைகளின் பழைய படிகளையும் பார்க்கக் கிடைக்காத பல அரிய புத்தகங்களையும் வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கன்னிமாரா பொது நூலக அலுவலர்கள் கூறினார்கள். அந்த அறையின் இருபுறங்களிலும் சின்னச்சின்ன தடுப்புகளோடு அழகான அறைகள் உள்ளன. இதைப் பற்றி இன்னும் ஒரு சுவையான செய்தியையும் கூறினார்கள். 1928–ஆம் ஆண்டு வரை இந்த கட்டடத்தின் ஒரு பகுதி சென்னை பல்கலைக் கழகத்தின் நூலகமாகவும் மற்றொரு பகுதி கன்னிமாரா பொது நூலகமாகவும் இயங்கி வந்துள்ளது.

புதுப்பிக்கப்பட்ட இந்தக் கட்டடம் 2006ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22ஆம் தேதி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

❖ ❖ ❖



# விரைந்து நடந்த சுனாமி நிவாரணப் பணிகள் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் பாராட்டு

கடலூர் மாவட்டத்தில் கடந்த 2004 டிசம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு 648 நபர்களும், 214 குழந்தைகளும் உயிரிழக்க நேரிட்டது. இந்த ஆழிப்பேரலையால் 2,323 வீடுகளும், 619 எக்டேர் நிலமும், 949 கால்நடைகளும் மற்றும் 5,000 மீன்பிடி படகுகள் பாதிக்கப்பட்டு முற்றிலும் சேதமடைந்தன. கடலூர் மாவட்டம் 57.5 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது. 51 கிராமங்கள் மற்றும் குக்கிராமங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளான தாழங்குடா, தேவனாம்பட்டினம், சிங்காரப்பேட்டை, தொத்திக்குப்பம், ராசாப்பேட்டை, திருச்சோபுரம், புதுக்குப்பம், புதுப்பேட்டை, பரங்கிப்பேட்டை, கிள்ளை, எம்.ஜி.ஆர். திட்டு போன்ற பகுதிகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி மற்றும் மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் வீடுகள், படகுகள், சாலை வசதி, மின் வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. அப்பகுதி மக்களின் குடிநீர் ஆதாரம், சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதிகள், மறுவாழ்வு, பொருளாதார மேம்பாடு, சுயஉதவிக் குழுக்களான சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்தியதுடன் இனிமேல் சுனாமியால் பாதிக்கப்படக்கூடும் என கணக்கிடப்படும் கடற்கரையிலிருந்து ஒரு கி. மீ தூரம் வரையுள்ள இடங்களில் உள்ள குடிசைகள் மற்றும் மண் வீடுகளையும் அகற்றி புதியதாக வீடுகள் கட்டித்தரவும் தமிழக அரசு உலக வங்கி உதவியுடன் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் சுனாமி மற்றும் மறுவாழ்வு பணிகளுக்கு சிறப்புத் தலைவராக (Special Envoy) நியமிக்கப் பட்டுள்ள அமெரிக்க முன்னாள் அதிபர் திரு.பில் கிளிண்டன் 1.12.06 அன்று கடலூர் மாவட்டம், தாழங்குடா பகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள சுனாமி நிவாரணப் பணிகளை பார்வையிட வருகை தந்தார். திரு.பில் கிளிண்டன் அவர்களை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களும் அண்ணா விளையாட்டு அரங்கில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிகாப்டர் இறங்கும் தளத்தில் வரவேற்றனர். பின்னர் பில் கிளிண்டன் நேராக சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் மூலம் செய்துள்ள நிவாரணப் பணிகள் மற்றும் வீடுகளைப் பார்வையிட்டார். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களுடன் அப்பகுதியில் உள்ள குழந்தைகள் விளையாட்டுப் பூங்கா, குடிநீர் வசதிக்காக கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கத் தொட்டி, நிகழ்ச்சி அரங்கு ஆகியவற்றை பார்வையிட்டதுடன், அங்கு புதியதாகக் கட்டப்பட்டு முருகுமலை என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டிற்குச் சென்றும் பார்வை யிட்டார். அவரை வீட்டின் உரிமையாளர் தமிழக கலாச்சாரப்படி ஆரத்தி எடுத்து வரவேற்றார். தாழங்குடா பஞ்சாயத்து தலைவர் திரு. குப்புசாமி என்பவரிடம் வீடுகள் எவ்வாறு கட்டப்பட்டுள்ளது என்பது பற்றியும் கேட்டறிந்தார். பின்னர் தாழங்குடாவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள







ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியைப் பார்வையிட்டு பள்ளிக் குழந்தைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆழி நாடகக் குழுவினரின் நிகழ்ச்சியைக் கண்டுகளித்தார். இந்தப் பள்ளி தற்போது 8 ஆசிரியர்கள் 327 குழந்தைகளுடன் இயங்கி வருகின்றது. இப்பள்ளியில் பயிலும் குழந்தைகளின் கல்வித் தரம் வெகுவாக மேம்படுத்தப் பட்டுள்ளது. சுனாமியால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளையும், அவர்கள் வரைந்த ஓவியத்தினையும் திரு. பில் கிளிண்டன் பார்வையிட்டார். அப்பள்ளி குழந்தைகளால் வரையப்பட்ட ஓவியம் அவருக்கு பரிசாக வழங்கப்பட்டது.

பின்னர் புயல் பாதுகாப்பு மையத்தில் பேரிடர் எச்சரிக்கை கருவியினைப் பார்வையிட்டு அக்கருவியை இயக்கி வைத்தார். அக்கருவி ஒலிக்கும் எச்சரிக்கையால் கிராமத்தில் புயல் மற்றும் வெள்ள அபாயம் குறித்த முன்னெச்சரிக்கை மற்றும் பொதுமக்கள் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது குறித்த ஒத்திகையினையும் பார்வையிட்டுப் பாராட்டினார். அப்போது திரு.பில் கிளிண்டன் செய்தியாளர்களிடம் பேசும்போது, "சுனாமி பாதித்த 2 ஆண்டுகளில் கடலூர் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு அளவில் நிவாரணப் பணிகள் மேற்கொண்டு புனர்வாழ்வு செய்து வீடுகள் வழங்கிடவும், அவர்களின் மேம்பாட்டிற்கு விரைவாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உலகிற்கே கடலூர் மாவட்டம் முன்னுதாரணமாக (Roll Modal) தெரிகிறது. 70 சதவிகிதம் பணிகள் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தோனேஷியா, தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளில் 30 சதவிகிதம் பணிகளே இதுவரை முடிவுற்றுள்ளது. இங்கு நடத்தி முடிக்கப்பட்ட பணிகள் மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. இதுவரை 4 ஆயிரம் வீடுகள் புதியதாக கட்டி அப்பகுதி மக்களை குடியமர்த்தியுள்ளது. இந்தியாவில் மாநில அரசு ஒத்துழைப்புடன் சுனாமி பாதித்த பகுதிகளையும், அங்குள்ள மக்களையும் புனர்வாழ்வு மேற்கொண்டு உயரிய நிலைக்கு கொண்டு வந்தது, உலகிற்கே ஒரு எடுத்தக்காட்டாக இந்தியா, குறிப்பாகத் தமிழகம் திகழ்கிறது. தகவல் தொடர்பில் இந்தியா நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளது. மேலும் கணினி உற்பத்தியில் 50 சதவிகிதம் தயாராகிறது. 30 சதவிகிதம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் மூலமாக நல்ல விற்பனை சூழல் ஏற்படுத்தலாம். சுனாமியின் போது இங்குள்ள குழந்தைகள் மூலம் வரைந்த ஓவியங்கள் அமெரிக்கா போன்ற நாடுகளில் விற்பனையானது. மாவட்ட நிருவாகம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் நிவாரணப் பணிகள் மேற்கொண்டமைக்கு மாவட்ட நிருவாகத்திற்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்" எனக் கூறினார்.

தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரு.பில் கிளிண்டன் ஹெலிகாப்டர் மூலம் புறப்பட்டார். 2 மணி நேரமே கடலூர் தாழங்குடா பகுதிக்கு வந்திருந்தாலும் தமிழக மக்களின் சார்பாக பொதுமக்கள் சிறப்பான வரவேற்பை அளித்ததும், நாதஸ்வரம், ஆழி நாடகங்கள், பேரிடர் முன்னெச்சரிக்கை ஒத்திகைகள், ஆரத்தி எடுத்தல், பேரிடர் கருவி எச்சரிக்கை செயல்பாடு, அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்ட நவீன கட்டடங்கள் ஆகியவை திரு.பில் கிளிண்டன் அவர்களை, மகிழ்ச்சியுரச் செய்தது என்றே சொல்ல வேண்டும்.

**எம். ஆர். லிங்கம்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**கடலூர் மாவட்டம்.**

★ ★ ★

# மருத்துவர்கள் இடமாற்றத்திலும் கலந்தாய்வு

ஆசிரியர்கள் இடமாற்றம், கிராம நிருவாக அலுவலர்கள் இடமாற்றம் தற்போது தமிழக அரசினால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கலந்தாய்வு முறை (கவுன்சலிங்) இனி மருத்துவத்துறை சார்ந்த மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர் உட்பட அனைவருக்கும் கடைப்பிடிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 26.11.2006 அன்று அறிவித்துள்ளார்.

# 2ஆவது கட்டமாக 25 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்



இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஆறாவது கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் 24.11.2006 அன்று காலை 11.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடியது. இதில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு. டி.சுதர்சனம் (காங்கிரஸ்), திரு. கோ.க. மணி (பா.ம.க), திரு.சி. கோவிந்தசாமி (இ.கம்யூ. (மா), திரு. வை.சிவ புண்ணியம் (இ. கம்யூ.), திரு. எச். அப்துல் பாசித் (இ. யூ. மு. லீக்), திரு.கு. செல்வம் (விடுதலைச் சிறுத்தைகள்) மற்றும் திரு.மு. ஜெகன் மூர்த்தி (புரட்சி பாரதம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

22.11.2006 அன்று, நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் முடிவு செய்தவாறு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள டிக்சன் நிறுவனத்தினரிடம் தொழில்நுட்ப வல்லுநர் குழு பேச்சுவார்த்தை நடத்தியது. டிக்சன் நிறுவனம் ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு, ஏற்கெனவே விலைப் புள்ளியில் கொடுத்திருந்த விலையினைக் குறைத்து, ரூ. 2,740 என ஒப்புக்கொண்டு, ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளது. இதன் அடிப்படையில் மற்ற ஒப்பந்தக்காரர்களை அழைத்து இதே விலைக்கு அவர்களும் தர முடியுமா என்று கேட்டபோது நான்கு நிறுவனத்தினர் மறுத்துவிட்ட காரணத்தால், எஞ்சிய நான்கு நிறுவனங்களான ஏர்விஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட், எல்.பி. எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட், வீடியோகான் கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட், கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் ஆகியோரை மட்டும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அந்த நான்கு நிறுவனங்களும், ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு ரூ.2,740 என விலை நிர்ணயம் செய்ய ஒப்புக் கொண்டு ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளன.

கொள்முதல் குழு பேச்சுவார்த்தை நடத்தி இறுதி செய்துள்ள ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியின் விலை ரூபாய் 2,740 என்பதை ஏற்றுக் கொள்வதென அன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

குறைந்தபட்ச விலையான ரூ.2,740 என்று தெரிவித்த டிக்சன் டெக்னாலஜீஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து ஒன்பது இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும், ஏர்விஷன் இந்தியா பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து இரண்டு இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும், அந்த நிறுவனம் மூன்று மாத காலத்திற்குள் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதலாக மூன்று இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும்; எல்.பி. எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து இரண்டு இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்; வீடியோகான் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்திடமிருந்தும் ஆறு இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதென்றும்; கிச்சன் அப்ளையன்சஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து மூன்று இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும் முடிவெடுக்கப்பட்டது. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை அந்தந்த நிறுவனங்களின் உற்பத்தித் திறன் மற்றும் அவர்கள் வழங்க ஒப்புக்கொண்ட எண்ணிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அன்றைய கூட்டத்தில் ஒருமனதாகப் பேசி முடிவெடுக்கப்பட்டது. ■

சிறுகதை

# திருட்டு



"யாரு புடிச்சிருந்தாலும் விட்ருங்க ஆமா. நான் பொல்லாதவ. என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது. ஆனா ஒண்ணு. எனக்குத் தெரியாமப் போயிடும்னு மட்டும் நெனக்காதீய... சொல்லிப்புட்டேன்."

வீட்டு வாசலில் நின்று உச்ச குரலில் சிலம்பாயி ஊருக்கே அறை கூவல் விட்டாள்.

சிலம்பாயி இன்றைக்கு வயலிலிருந்து வர நேரமாகிவிட்டது. விளக்கை எடுத்துக்கொண்டு மறுபடியும் தேடினாள். திண்ணையில் கிடந்த நெல்மூட்டைச் சந்துகளில் தாய்க்கோழி இறக்கைக்குள்ளிருந்து குஞ்சுகள் தலைகாட்டின.

கூடைக்குள் அவற்றை மூடினாள். அந்தக் கருப்புப் பெட்டைக் கோழியைக் காணவில்லை. வீட்டைச் சுற்றித் தேடினாள். மீண்டும் மீண்டும் தேடினாள்.

இந்நேரம் அது வந்து அடைஞ்சிருக்கணும், யாரோ பிடிச்சிட்டாங்க. இல்லேன்னா 'குக்குக்' கொஞ்சலோடு அது நெல் மூட்டையில் ஏறிக் குதிக்கும். எளிதில் பிடி கொடுக்காது. கூடையில் மூடும் வரை பயங்கரமாய்க் கூச்சலிடும். சிலம்பாயிக்குத் தாங்க முடியவில்லை. எங்கிருந்தாவது வாசம் வருகிறதா என்று வரும் காற்றில் எல்லாம் தேடினாள். வாசலில் நின்றாள். தெருவில் அலைந்தாள்.

"ஏக்கா சின்னமக்கா என் கருப்புக் கோளியைக் காணும்க்கா"

சந்தேகப்படுவதைக் காட்டிக்கொள்ளாமல் தேடினாள், வீடு வீடாகச் சமையல் வாசம் பிடித்தாள். துப்பு கிடைக்கவில்லை. சிலம்பாயிக்கு இருப்பு கொடுக்கவில்லை.

ம. இராஜேந்திரன்

'திருட்டுக் கோளி சமையல் நடுராத்திரியில்தான் நடக்கும். இன்னும் கோளி செத்திருக்காது.

நினைத்துக்கொண்டே நடந்தவள் அடுத்த வீட்டில் நின்றாள்.

"ஏண்டி கண்ணம்மா! ஒங்கக் கோளியோட கோளியா வந்து அடைஞ்சிருக்கான்னு பாருடி."

கண்ணம்மா வீட்டில்தான் சிலம்பாயிக்குச் சந்தேகம்.

"நீயே வந்து பாருக்கா. அப்புறம் நான் பார்த்தாலும் ஒனக்கு நம்பிக்கை இருக்காது."

சொல்லிக்கொண்டே விளக்கெடுத்து வந்து மூடிக்கிடக்கும் கோழிக்கூடைகளைத் திறந்து காட்டினாள்.

'புடிச்சிருந்தா இப்படி வெளியிலயா கவுத்திருப்பா'

சிலம்பாயிக்குச் சந்தேகம் போகலில்லை. ஆனாலும் காட்டிக் கொள்ளவில்லை.

"இல்லடி கண்ணம்மா ஆனையக் காணுமின்னு பானையிலத்தேடுனாங்குற கதை தாண்டி... பறி கொடுத்தவ மனசு பதறுது. ஒங்களுக்குக் கேலியா இருக்கு."

சிலம்பாயி பொய்யாக் கோபித்து அங்கிருந்து நடந்தாள்.

"இது என்னா ? அந்தக்கா என்ன சொன்னாலும் கோவிச்சுக்குது."

பேசிக் கொண்டே கண்ணம்மா வீட்டிற்குள் சென்றாள். சிலம்பாயி தனக்குத்தானே பேசிக்கொண்டு வீடு வந்தாள். அப்போதுதான் குருநாதன் வயலிலிருந்து வந்து மண்வெட்டியை மாட்டுத் தொழுவத்தில் மாட்டிவிட்டு வியர்வையைத் துடைத்தவாறு வாசலில் நின்றான்.

"கருப்புப் பொட்டைக் கோளியைக் காணும். நானும் தேடாத எடமில்லை. எவளோ புடிச்சிட்டாளுவ".

சிலம்பாயிக்கு மெதுவாகப் பேசவராது. சத்தத்தில் இரவு அதிர்ந்தது.

"சரி சரி விடு. காலையில் பார்த்துக்கலாம்."



குருநாதன் எப்போதாவதுதான் பொண்டாட்டியை அடக்கிப் பேச முடியும். இது போன்ற சந்தர்ப்பங்கள் ரொம்பக் குறைவு.

“ஆமா நீ ஒரு மனுசன். ஒன்னைக் கட்டிக்கிட்டதுக்கு எனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்.”

சிலம்பாயின் ஏமாற்றம் குருநாதன் மீது வெடித்தது. இதற்குக் குருநாதன் பேசாமல் இருக்க முடியாது.

“ஏண்டி, கோளி திருட்டு போனதுக்கும் என்னைக் கட்டிக்கிட்டதுக்கும் என்னாடி சம்மந்தம்...”

குருநாதனின் குரலில் சமரசம் வழிந்தது “ஆமா, ஒம்மேல ஒரு அத்து இருந்தா கோளியப் புடிப்பாளுவளா ?”

“சரி சரி காலையிலே பார்ப்போம். விடு. ஊரே அசமடங்கிப் போச்சு.”

சொல்லிக்கொண்டே குருநாதன் குனிந்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தான்.

“காலையிலே என்னாத்தப் பார்ப்பே. கோளி மசுரைப் கூட குப்பையிலே பொதச்சிடுவாளுவ. அப்புறம் என்னாத்தப் பாக்குறது. இப்பவே எதுனாச்சும் பண்ணனும்.”

சிலம்பாயிக்குத் தொண்டை அடைத்தது. முந்தானையால் கண்ணையும் மூக்கையும் துடைத்துக் கொண்டாள்.

முறை வைத்துக் கொண்டதுபோல் எப்போதும் குறைந்தது இரண்டு கோழிகளாவது வீட்டில் முட்டையிட்டுக் கொண்டிருக்கும். சிலம்பாயிக்கு வீட்டுக் கைச் செலவு கவலையில்லாமல் போகும். கோழி என்றால் சிலம்பாயிக்கு உயிர். சீக்கு வந்தால் தவிர அவள் கோழி சாப்பிட்டதில்லை. வாசல் கூட்டிச் சாணி தெளித்ததும் பொழுது விடியும். கோழிக் கூடைகளைச் சிலம்பாயி ஒவ்வொன்றாய்த் திறப்பாள். திறந்ததும் வெப்பம் கலந்த கோழிவீச்சம் முகத்தில் அடிக்கும். சிலம்பாயி முகம் சுளிக்க மாட்டாள். முட்டையிடும் கோழியை விரல் விட்டுப் பார்த்து உறுதி செய்து கொள்வாள். பதினோரு மணி வாக்கில் முட்டையிட இடம் தேடி கோழிகள் வீடு வரும். கூடைகளை ஒருக்கணித்து வைத்து, உள்ளே சென்று கோழி உட்கார்ந்ததும் ஓசைப்படாமல் கூடையைக் கவிழ்ப்பாள்.

அதற்காகவே காத்துக் கொண்டிருந்தாலும் சில நேரங்களில் ‘டபக்’ கென்று வெளியில் ஓடி கோழி விளையாட்டு காட்டும். ஒரு வழியாய்க் கூடையை மூடி, சாணிக் குவியலில் தண்ணீர் தெளித்து வைக்கோல் கூளங்களையும் உமியையும் போட்டுக் கால்களால் மிதித்து, சாம்பல் தூவிய தரையில் ராட்டி தட்ட உருண்டைகளைத் தயார் செய்வாள். அவள் ராட்டி தட்டி முடிக்கவும், “ கோளி முட்டை இருக்கா கோளி முட்டை” என்று சைக்கிள் தாத்தா வரவும் சரியாக இருக்கும்.

சிலம்பாயி கூடையைத் திறக்க விருட்டென்று வெளிவரும் கோழி, தன் முட்டையைத் திரும்பிப் பார்த்து, ‘கொக் – கொக் – கொக்–’ என்று கூச்சலிடும். முட்டையிட்ட எரிச்சல் இன்னொருத்தர் வீட்டிலோ குப்பை மேட்டிலோ கூட சமயத்தில் முட்டையிட்டுக் கோழி இப்படிக் கூச்சலிடுவதும் உண்டு. சத்தத்தை வைத்து சிலம்பாயி கண்டுபிடித்து விடுவாள். ஒருநாள் மாட்டுக்கு வைக்கோல் பிடுங்கும்போது வரிசையாய் முட்டைகள் விழுந்தபோதுதான் அவளுக்கே தெரியாத இடத்திலும் கோழி முட்டையிடுவது தெரிய வந்தது.

நாளைக்கும் சைக்கிள் தாத்தா ‘முட்டையிருக்கா முட்டை’ என்று வருவார்.

சிலம்பாயிக்கு அழுகை அழுகையாக வந்தது.

“பாவியளா; நல்லா இருப்பியளா ?”

திருட்டுத்தனமாக் கோளியைப் புடிச்சிக் களுத்தைத் திருகுன ஓங்களுக்குப் புள்ளைக்குட்டி ஒட்டுமா?

என் கோளியைத் திருடுன ஓங்களக் காளியாயி சும்மா விடமாட்டா. மாரியம்மா வருவா... நான் கருப்புக் கோளின்னு பேச்சியாயிக்கு வேண்டி உட்ருந்த கோளி. புடிச்சி வச்சிருந்தா உட்ருங்க. அப்புறம் சாமிக்கொறை சும்மா வுடாது. நான் பட்டாணியன் கோவிலுக்குப் போயி சூடனைக் கொளுத்தி மண்ணைவாரி எறைக்கப் போறேன்... சொல்லிப்புட்டேன்.

தெருவின் அமைதி கிழிந்தது. சிலம்பாயிக்குத் தொண்டை கட்டியது. வீட்டிற்குள் போய்த் தண்ணீர் மொண்டு குடித்தாள். சிலம்பாயி விடமாட்டாள் காணாமல் போன கோளி வேண்டும். வேறு ஆறுதல் இல்லை. வானத்தில் நிலா எட்டிப் பார்த்தது. தூரத்தில் ஆந்தை திக்கியது. சிலம்பாயி முடிவுக்கு வந்தாள்.

“ஒன்னைத்தான் – தூங்கிட்டியா ?”

அரைத் தூக்கத்திலிருந்த குருநாதனைத் தட்டி எழுப்பினாள். குருநாதன் எழுந்து வேட்டியை உதறித்

கட்டிக் கொண்டு சிலம்பாயி பின்னே நடந்தான். சிலம்பாயி பேசிக்கொண்டே நடந்தாள். சின்னமக்கா வீடு வந்தது. "எக்கா சின்னமக்கா... எங்க போச்சின்னே தெரியலியே என்னாக்கா பண்ணலாம். எனக்கு ஒரு ரோசனையும் வராமப் புத்தியப் பேதலிக்க வச்சிட்டாளுவளே."

வாசலில் படுத்திருந்த சின்னமக்கா வாரி சுருட்டி எழுந்தது. சிலம்பாயி ஏதோ தீர்மானமாய் வந்திருந்தாள். அதைச் சின்னமக்கா வாயிலிருந்து வரவழைக்கப் பார்க்கிறாள்.

"என்னா பண்றது சிலம்பாயி. பொளுது விடியட்டும். இப்போ என்னா பண்ண முடியும் ?"

"இல்லக்கா... இப்போ விட்டுட்டா கோளியை அடிச்சிக் கொளம்பு வச்சிடுவாளுவ. பொளுது விடிஞ்சா ஏப்பம் விட்டுடுவாளுவ. இப்பவே ஏதுனாச்சும் பண்ணனும்க்கா."

"ஒம்புருசன் என்னா சொல்லுது ?"

சின்னமக்கா குருநாதனைப் பார்த்துக் கேட்டாள்.

"அது வீட்ட மொறத்தை எடுத்துப் பட்டாணியன் கோயில்ல போடுவோம்னு சொல்லுதுக்கா. நானும் சரின்னு சொல்லிட்டேன்க்கா."

சிலம்பாயி சின்னம்மக்காவின் கருத்துக்கே விடவில்லை.

"அப்படியா"

"ஆமாக்கா – இப்பவே மொறம் எடுத்துட்டா – ஒரு பயம் வந்திடுமில்லே."

"அது சரி"

சின்னமக்கா, வீட்டுக்குள் போய் முறத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். சிலம்பாயி ஒவ்வொரு வீடாகத் தெரு முழுவதையும் எழுப்பினாள். சாணி மெழுகியமுறம், புதுமுறம், சிறியது, பெரியது என்று முறங்களைச் சுமந்துகொண்டு குருநாதனும் சிலம்பாயியும் பட்டாணியன் கோயிலுக்கு நடந்தார்கள்.

"நான் இஞ்சயே நிக்கிறேன். நீ போயிப் போட்டுட்டு வா".

பட்டாணியன் காவல் தெய்வம். குதிரையும், யானைகளும் பொம்மைகளாய் நின்றன. கையில் வீச்சரிவாளுடன் பார்ப்பவர்களை மிரட்டும் சாமி அது. பெண்கள் அந்தப் பக்கம் போகமாட்டார்கள்.

குருநாதன் முறங்களைக் கொண்டு போய்க் கோயிலுக்கு முன்னே போட்டான். பனை மட்டைகள் சலசலத்தன. குருநாதனுக்குப் பயம் வந்தது. வேகமாகத் திரும்பி நடந்தான்.

"நாளைக்குத் தெரிஞ்சிடும்".

பேசிக்கொண்டே சிலம்பாயி நடந்தாள். இதெல்லாம் ரொம்ப என்பது போல் குருநாதன் அவளைப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

அந்த ஊரில் இப்படி ஒரு கட்டுப்பாடு. காலம் காலமாய் சின்னத் திருட்டு என்றால் தெரிவிலுள்ள வீட்டின் முறங்களை எடுப்பார்கள். பெரிய திருட்டு என்றால் ஊர் முறங்களே பட்டாணியன் கோயிலுக்கு வரும். வீடென்றால் முறம் இருக்கும். நெல், அரிசி, உளுந்து புடைக்க, சமைக்க தினசரி வாழ்க்கைக்கு முறம் தேவை. முறத்தை எடுத்துப் போய்க் கோயிலில் போட்டுவிட்டால் வீட்டிற்கு ஒருவர் போய்க் குளத்தில் குளித்துவிட்டு, கோயில் முன் நின்று 'நாங்க திருடலை' என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டு முறத்தை எடுத்துக் கொண்டு வருவார்கள். பட்டாணியின் கோயில் முன் பொய் சொல்லும் துணிச்சல் யாருக்கும் கிடையாது. திருடியவர்கள் முறம் எடுக்கமாட்டார்கள். யார் வீட்டு முறம் கோயிலிலேயே கிடக்கிறதோ அவர்கள்தான் திருடர்கள் என்று ஊரறிந்து தண்டம் விதிக்கும். ஆனாலும் இதுவரை யாரும் கோழித் திருட்டுக்கு முறம் எடுத்ததில்லை.



சிலம்பாயியும் குருநாதனும் பேசிக் கொள்ளாமலே வீடு வந்து படுத்தனர். "நாளைக்குத் தெரிஞ்சிடும்" சிலம்பாயிக்குத் தூக்கம் வரவில்லை. நேரம் நள்ளிரவை நெருங்கியது. நிலா வெளிச்சத்தில் ஊரே தூங்கியது. சிலம்பாயி வாசலில் வந்து உட்கார்ந்தாள். சிறிது நேரத்தில் நிலாவை மறைத்துக் கொண்டு கருமேகம் சூழ்ந்தது. அரிக்கேன் விளக்கை எடுத்துக் கொண்டு மாடுகளைத் தொழுவத்தில் கட்ட குருநாதனை எழுப்பினாள். குருநாதனுக்கு அசதியாக இருந்தது. எழுந்துபோய் மாடுகளைக் கட்டிவிட்டு வந்தான். வானம் இருட்டிக் கொண்டு வந்தது.



"மொறமெல்லாம் நனையப் போவுது"

குருநாதன் தனக்குத்தானே பேசிக் கொண்டான் சிலம்பாயிக்கு மனசு கஷ்டமாகியது.

"ஒரு கோளிதானே, போவுதுன்னு உட்ருக்கலாம். எல்லார் வீட்டு மொறமும் நனைஞ்சு போச்சுன்னா... என்ன பண்ணுவாங்க... காளியா மாரியாத்தா மளை பெய்யப்புடாது– இந்த ஒரு தபா எனக்கு மாப்பு குடு தாயே"

சிலம்பாயின் வேண்டுதல்களை எல்லாம் மீறி மழை தூறத் தொடங்கியது. விளக்கு வெளிச்சம் தேடி பூச்சிகள் பறந்து வந்தன. விளக்கைச் சிறிதாக்கினாள். இருந்தாலும் பூச்சிகள் விடவில்லை. சிலம்பாயி இப்போது முறங்களைப் பற்றி கவலை கொண்டாள். குருநாதன் வேட்டியைப் போத்திக்கொண்டு சிலம்பாயி பக்கத்தில் உட்கார்ந்தான். காற்றடித்தது. கூடவே சடபட சத்தம். சிலம்பாயி மடியில் தொப்பென்று விழுந்தது. சிலம்பாயி பயந்து குதித்துப் புடவையை உதறினாள். அதற்கு முன்பே அது கீழே விழுந்திருந்தது. காணாமல் போன கருப்புக்கோழி. அதிர்ச்சியிலிருந்து விடுபடாமலே அதைப் பிடித்துப் பார்த்தாள். அவளுடைய கோழியே, வீட்டு முன் நின்ற வேப்ப மரத்திலிருந்து கோழி மழைத் தூறல் பட்டுக் கீழிறங்கியிருக்கிறது.

'நாளைக்கு ஊருக்கே தெரிஞ்சிடும். முறம் எடுத்த வீட்டுக்கு எல்லாம் பதில் என்ன சொல்றது.'

குருநாதன் குழம்பிக் கிடந்தான். சிலம்பாயி அவசரம் அவசரமாக அடுப்பை மூட்டி வெந்நீர் சுடவைத்து கருப்புக் கோழியைத் தலையழுத்தினான். சத்தமில்லாமல் கோழித்துடிப்பு அடங்கியது. பிடுங்கிய இறக்கையை நாய் தோண்டிக் காட்டிக் கொடுத்துவிடாதபடி ஆழமாய்க் குழிவெட்டி குருநாதன் புதைத்தான். உரித்த கோழியில் மஞ்சள் தடவி மசாலா அரைத்து அவசரம் அவசரமாகக் குழம்பு கொதித்தது. குருநாதனுக்குத் தூக்கம் வரவில்லை. மழைத் தூறல் வலுக்கவும் இல்லை. நிற்கவும் இல்லை.

திண்ணையில் கிடந்த கோணியை எடுத்துத் தலையில் கொங்காணி போட்டுக் கொண்டு பட்டாணியின் கோயில் நோக்கி விரைந்தான். பொழுது விடிந்து கொண்டிருந்தது. தூறல் நிற்கவில்லை.

(சாகித்ய அக்காதெமி வெளியிட்ட
"நவீன தமிழ்ச் சிறுகதைகள்"
என்ற நூலிருந்து...)

★ ★ ★

# சமூகநீதி காத்த சான்றோர் – 1

மனித நாகரீகம் தோன்றிய காலத்திலேயே தோன்றியது வேத மதம். வேதங்களும், உபநிடதங்களும், கீதையும், இதிகாசப் புராணங்களும், மானுடத்தை நல்வழிப்படுத்தத் தோன்றலாயின. இவைகளுடன் இணைந்தே பிறந்தன வர்ணாசரமமும், சாதிவெறியும். மானுடத்தை நல்வழிப்படுத்த படைக்கப்பட்ட நூல்களின் மகத்துவத்தை மழுங்கச் செய்த சாதிவெறி என்னும் விஷ விருட்சம் விஸ்வரூபமெடுத்தது. ஆண்டான் – அடிமை, மேலோர் – கீழோர், பிறப்பால் உயர்ந்தவன் – தாழ்ந்தவன், சாதி சமய வேறுபாடுகள் ஆயிரம் ஆயிரமாண்டுகளாக வளர்ந்தோங்கி வேத மதம் முழுமைக்கும் வியாபித்திருந்தது. இந்தக் கொடிய நோயை முற்றிலும் ஒழித்திட, இந்து மதம் என அழைக்கப்படும் வேத மதத்தில் சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள, சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட, புரட்சி சிந்தனையாளர்கள் – சமூகநீதிக் காவலர்கள், அவ்வப்போது தோன்றத்தான் செய்தார்கள். அத்தகைய வரலாற்று மகான்களின் சரிதைகளை இந்த இதழிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும் காண்போம்.

சமூகநீதி காத்த சான்றோர் வரிசையில் முதலாவதாக இடம் பெறுபவர் புத்தபிரான்.

# புத்தர் (கி.மு.563 – 483)

கி.மு. ஆறாம் நூற்றாண்டை, இந்து மதமே மறைக்கப்பட்ட ஒரு இருண்ட காலம் எனலாம். வேதங்களின் உன்னத போதனைகள் உதாசீனப்படுத்தப்பட்ட காலம். கடவுள்கள் குடிகொண்ட கோவில்கள், கொடியவர்களின் கூடாரமாக மாறிவிட்ட காலம் – பிரம்மாண்டமாக வளர்ந்துவிட்ட இந்து மதத்தினை, சுயநலவாதிகள் திட்டமிட்டு சுரண்டிய காலம் – சமுதாயத்தில் தீண்டத்தகாதவர்களுக்கென தனிப்பிரிவு உருவாகிவிட்ட காலம். கோயில்களில் ஆடுகள் பலிகடாவாக ஆகிய காலம். நோய்வாய்ப்பட்ட இந்து மதம் அறுவை சிகிச்சைக்காக ஏங்கியக் காலக்கட்டம். அப்போது இந்து மதத்தைப் பிடித்திருந்த நோய் அகல – இந்துக்களின் பிணி மறைய அவதரித்தார் புத்த மகான்.

சாக்கிய அரசன் சுத்தோதனுக்கும் மாயாவிற்கும் மகனாக கி.மு.563இல் நேபாளத்தில் லும்பினி கிராமத்தில் (கபிலவஸ்து நகர் அருகில்) பிறந்தவர்தான் சித்தார்த்தர். "கௌதம்" என்பது

அவரது குடும்பப் பெயர். அவர் பிறந்த ஏழு நாட்களில் தாயார் மாயா மறைந்தார். மாயாவின் தமக்கை மகாபிராஜாபதியால் வளர்க்கப்பட்டார். சித்தார்த்தர், இல்வாழ்க்கையைத் துறந்து, துறவறம் பூண்டு, மனித குலம் மேன்மையடைய – உலகத்தை உய்விக்க வந்த மாமுனியாகத் திகழ்வான் என சோதிடர்கள் கூறியதைக் கேட்டு வருத்தமுற்ற மன்னர், சித்தார்த்தனுக்கு சந்நியாசம் மேற்கொள்ளும் எண்ணம் துளியும் வந்துவிடக் கூடாது என்பதற்காக மகனுக்கு சகல சௌகரியங்களையும் வழங்கி செல்வத்தில் திளைக்கச் செய்தார். ஏழ்மை என்றால் என்ன என்று கூட சித்தார்த்தர் அறியக்கூடாதென மன்னர் கருதினார். அரச வாழ்வை சித்தார்த்தர் துறந்துவிடக் கூடாதெனக் கருதி சித்தார்த்தரின் 16ஆவது வயதில் அவருக்கு யாசோதாவை மணமுடித்து வைத்தார். புத்தருக்கு ராகுலன் என்ற அழகிய மகன் பிறந்தான்.



ஒருநாள் சித்தார்த்தர், தனது பணியாள் சின்னா என்பவருடன் நகருக்குள் சென்றபோது, ஒரு வயதானவர், ஒரு நோயாளி, ஒரு பிணம், ஒரு முனிவர் ஆகியோரைக் கண்டார். அவர்களுடைய துயரம் அவருக்கு விநோதமாகப்பட்டது மட்டுமின்றி அவருடைய வாழ்வின் போக்கையே மாற்றிவிட்டது.

ஆம்! மனித குலத்தின் இந்த அவலக் காட்சிகளைக் கண்டு திடுக்கிட்டார் சித்தார்த்தர். முனிவரின் புனிதமும், வசீகரமும் அவரை பெரிதும் கவர்ந்திழுந்தன. மனித அவலங்களைக் களைய தனது ஆடம்பர அரச குல இல்வாழ்க்கையைத் துறந்து சந்நியாசமேற்கத் தீர்மானித்தார்.

சித்தார்த்தர் தமது 29ஆம் வயதில் (கி.மு. 534இல்) வீட்டைவிட்டு வெளியேறினார். துறவற கோலம்பூண்டு மகத நாட்டுத் தலைநகரான ராஜ்கிரஹா சென்று, அங்கு ஆளாரகாலாம என்ற முனிவரைச் சந்தித்து அவரிடம் சீடராகச் சேர்ந்தார். ஆனால் அவருடைய போதனைகளில் திருப்தியடையாத சித்தார்த்தர், உத்தரராமபுத்திரரைச் சந்தித்தார். அவருடைய போதனையிலும் திருப்தி அடையாத சித்தார்த்தர் தானே போதகயாவுக்கு அருகில் தொடர்ந்து ஆறாண்டுகள் தவத்தில் ஈடுபட்டார். சித்தார்த்தர் மிகவும் பலவீனமடைந்தபோதும் அவருக்கு தவத்தில் முழு திருப்தி ஏற்படவில்லை. அப்போது அவ்வழியாகச் சென்ற சில நடனமங்கைகள் பாடிய குதூகலமான பாட்டு அவரை மிகவும் ஈர்த்தது. அன்று முதல் பட்டினியால் உடலை வருத்திக் கொள்வதில் பலனில்லை என்று தீர்மானித்து, மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்காமலும், சோகத்தில் துவண்டு விழாமலும் ஒரு நடுநிலைக் கொள்கையை பின்பற்றுவதென முடிவெடுத்தார். பலவீனமான உடலால் தியான சுகம் காண்பது கடினம், என உணர்ந்து திட உணவு உட்கொள்ள

ஆரம்பித்தார். அவருடன் இருந்த 5 சந்நியாசிகள் இவர் திட உணவு அருந்துவது கண்டு இவரை விட்டு ஓடிவிட்டனர். இறுதியில் ஒரு போதி மரத்தடியில் சித்தார்த்தர் தவமிருக்கத் தொடங்கினார். "நான் இறக்க நேரிட்டாலும், என் உடல் அழிய நேரிட்டாலும், என் உடல் முழுதும் உதிர்ந்து போனாலும், முழு ஞானம் பெறும்வரை இந்த மரத்தடியிலிருந்து எழுந்திருக்கமாட்டேன்" எனச் சபதமேற்று, தவமிருக்கத் தொடங்கினார். அன்றிரவு முழு ஞானம் பெற்று ஒளி வெள்ளம் சூழ தோற்றமளித்தார். ஆம். அவர் அன்று நிர்வாண (முக்தி) நிலையை எய்தினார். "இணையில்லா நிர்வாணத்தை (முக்தியை) அடைந்தேன். என் ஞானக்கண் திறந்து கொண்டுவிட்டது. என் மனம் முக்தி நிலைப்பெற்று விட்டது. இதுவே என் கடைசிப் பிறவி. இனி பிறவியில்லை" என ஆனந்தத்தில் மிதக்கலானார். அவர் உடல் முழுவதிலுமிருந்து தெய்வீக ஒளி வீசியது. தன் 36ஆவது வயதில் (கி.மு.528) ஞானம் பெற்றார். சித்தார்த்தர் புத்தர் ஆனார். அந்த போதி மரத்தடியில் தொடர்ந்து ஏழு பகல் – இரவு மகிழ்ச்சி வெள்ளத்தில் நடனமாடினார். பிறகு தன்னுடயை தெய்வீக அனுபவத்தை பிற மனிதர்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்பினார். அதற்கென புத்த மதத்தைத் தோற்றுவித்தார். இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டார்.

**ஆசையே அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம். எனவே, ஆசைகளைத் துறக்க வேண்டும் என்று கூறிய புத்தர், துன்பங்களைத் தவிர்க்க 8 வழிகளை போதித்தார். அவை சரியான பார்வை, சரியான சங்கற்பம், சரியான சொல், சரியான செயல், சரியான வாழ்க்கை முறை, சரியான முயற்சி, சரியான நினைவு மற்றும் சரியான மோனநிலை ஆகும். சடங்குகளையும், பக்தியையும் விட ஞானத்தையும், பகுத்தறிவையுமே முக்கியமாகக் கருதினார். புத்தர் சாதியை அங்கீகரிக்கவில்லை. சாதியை விட்டு ஒதுக்கப்பட்டவர் களையும், ஏழைகளையும், தீண்டத்தகாதவர்களையும் தன்னுடைய சீடர்களாக ஏற்றுக்கொண்டார். இந்து மதத்தில் சொல்லொண்ணா சாதிக் கொடுமைகளுக் காளான ஆயிரக்கணக்கானோர் இந்து மதத்தைத் துறந்து, புத்த மதத்தைத் தழுவினர். அவமானப்பட்டு, சித்ரவதைப்பட்ட சமுதாயத்தில் அடித்தட்டு மக்களுக்கு விடுதலை வழங்கிய புரட்சி சிந்தனையாளர்தான் புத்தர். இந்து மதத்தைப் பீடித்திருந்த சாதி வெறி என்னும் பேயை வெளிச்சம் போட்டுக் காட்டியவர் புத்தர். அவர் புத்த மதத்தைத் தோற்றுவித்ததன் மூலம் இந்து மதம் உடைந்துபோவதிலிருந்து காப்பாற்றினார். புத்தர் தன் வாழ்நாள் முழுவதும் அகிம்சையைக் கடைபிடித்தார். பல மன்னர்கள் அகிம்சையைக் கடைபிடிக்கக் காரணமாகத் திகழ்ந்தார். மனித நேயத்தின் சின்னமாக விளங்கினார்.**

தன்னை ஆராதித்த 60 சீடர்களை தன் கொள்கைகளைப் பரப்புவதற்கென நாடு முழுவதும் அனுப்பி வைத்தார். இந்து மதத்தின் அனைத்துத் தரப்பினரும் இவரது சீடர்களானார்கள். உருவில்லா காட்டில் வசித்த மூன்று முனிவர்கள் புத்த மதத்தைத் தழுவியது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மகத நாட்டுத் தலைநகரான ராஜகிரஹாவில் புத்தருடைய பிரசங்கத்தைக் கேட்ட மகத நாட்டு மன்னான பிம்பிசாரா, தன்னுடன் இருந்த 1,20,000 பிராமணர்கள் மற்றும் 10,000 பணியாளர்களுடன் புத்த மதத்தைத் தழுவினார். புத்த மதம் இலங்கை, சீனம், திபெத் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் வேகமாகப் பரவி இன்று வரை தழைத்தோங்கி விளங்குகிறது.

பின்னர் புத்தர் தன் தந்தையையும், மகனையும், மனைவியையும் சந்தித்தார். அவருடைய மனைவி யசோதா முதல் பெண் புத்த மதத் துறவி ஆனார். மகன் ராகுலனும் புத்த மதத் துறவியானார். புத்தர் 45 ஆண்டுகள் இந்தியா முழுவதும் சென்று தீவிரப் பிராச்சாரத்தில் ஈடுபட்டார். இறுதியில் ஒருநாள் ஆரோக்கியமற்ற உணவைச் சாப்பிட்டதால் உடல் நலம் குன்றி தனது 80ஆவது வயதில் (கி.மு.483) குஷி நகரில் இயற்கை எய்தினார்.

**– ந. இளங்கோ**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தமிழரசு

# கல்லடி

ராஜா ஒருவர் வேட்டையாடி வந்த களைப்பால் மாமரத்தடியில் களைப்பு நீங்கப் படுத்தார்.

சிறிது நேரம் சென்றது.

ஒரு மரத்தின் மீது யாரோ கல்லெறிய அது மன்னர் தலையில் விழுந்து ரத்தம் சிந்த வைத்தது.

அரசர் அரண்மனைக்கு வந்தார். வைத்தியர் வந்து வைத்தியம் செய்தார்.

அரண்மனைச் சேவர்களுக்கு கல்லானது அரசர் தலையில் விழுந்த சேதி தெரிய வந்தது. அவர்கள் கல்லெறிந்தவனை தேடினார்கள்.

யாரோ ஒரு கிராமத்தான் காட்டிலே மாடு மேய்த்துக் கொண்டிருந்தவன், தான் கல்லெறிந்து இரண்டு மாங்கனிகள் தின்றதாக ஒப்புக் கொண்டான்.



மாலை நேரத்தில் அரசன் முன் அந்த கிராமத்தானை, அரண்மனைச் சேவகர்கள் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

"இவனை எதற்காக, இங்கு கொண்டு வந்தீர்கள்!"

"தங்கள் தலையில் கல்வீசி, காயப்படுத்தியவன் இவன்; இவன் தண்டனைக்கு உரியவன்" என்றார்கள்.

ராஜா, "பெரியவரே! கல்வீசிய உமக்கு என்ன கிடைத்தது!" என்று கேட்டார்.

"அரச தண்டனை கிடைத்தது" என்றார்.

"மரம் தங்களுக்கு என்ன தந்தது!"

"இரண்டு கனிகள் தந்தன; எனக்குப் பசி நேரம்; என் பசியைத் தணித்தது, அது எவருக்கும் சொந்தம் இலாதமரம், மன்னர் பிரானே!" என்றார்.

ராஜா சிந்தனையில் ஆழ்ந்தார்.

"இந்தக் கிராமவாசியை விடுதலை செய்யுங்கள். இவருக்குப் பசி ஏற்படாத வண்ணம் மாதா மாதம் பணமும் அனுப்பிவையுங்கள்" என்றார்.

கிராமவாசி அழுதார்! "அரசே தங்கள் தலையில் கல் விழ காரணமாகியது என் பெருங்குற்றம்" என்று சொல்லி அழுதார்.

"அன்பனே! அறிவே இல்லாத மரம் உன் கல்லடிப்பட்டு அப்போதுள்ள உன் பசியைப் போக்கக் கனிகள் தந்தன; கல்லடிப்பட்ட அறிவுள்ள அரசனாகிய நான், உனக்குள்ள பசி எப்போதும் போவதற்கு வழி செய்ய வேண்டும்; அறிவே இல்லாதமரம் எனக்கு அறிவுறுத்திய பாடம் இது" என்றார் அரசர்.

தனக்கு ஆயுள் தண்டனை கிடைக்குமென்று பயந்தவனுக்கு ஆயுள் முழுவதும் உண்பதற்கு வழி கிடைத்ததை எண்ணி அரசனை வணங்கிப்போனான்!

– **"அறிவுக் கதைகள்"** என்ற நூலிருந்து....

# பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சேர நுழைவுத் தேர்வு இனி இல்லை

**பொ**றியியல், மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர் சேர்க்கைக்கு நடத்தப்படும் பொது நுழைவுத் தேர்வை நீக்க வேண்டும் என்று மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரிடம் இருந்து அரசுக்கு கோரிக்கைகள் வந்தன.

அதன் அடிப்படையில், 2006 ஜூலை 7ஆம் தேதி அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் அனந்தகிருஷ்ணன் தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு தனது அறிக்கையை நவம்பர் 13ஆம் தேதி தமிழக அரசிடம் தாக்கல் செய்தது. இந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று, தமிழக சட்டப் பேரவையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி அவர்கள் 6.12.2006 அன்று 'தமிழ்நாடு தொழிற் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டம் 2006' என்ற சட்ட முன்வடிவைத் தாக்கல் செய்தார்.

தொழிற்கல்வி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை, மாணவர்கள் தகுதி தேர்வில் உரிய பாடங்களில் பெற்றுள்ள மதிப்பெண்கள் அடிப்படையில் இருக்க வேண்டும். அரசு உதவி பெறாத தொழில் கல்வி நிறுவனங்களில், மாணவர் சேர்க்கையில் அரசு ஒதுக்கீடு இடங்கள் தவிர மற்ற இடங்களுக்கான மாணவர் சேர்க்கை, அரசால் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட, அதிகார அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்ட, அரசு உதவி பெறாத தொழில்கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பால் மேற் கொள்ளப்பட வேண்டும். மாணவர் சேர்க்கை அவர்களின் தகுதித் தேர்வில் பாடங்களில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு வெவ்வேறு பாடத்திட்டங்களில் படித்த மாணவர்களின் மதிப்பெண்களை சராசரிக்கு கொண்டு வந்த பின்பு, பொதுத் தரப்பட்டியல் தயாரிக்க வேண்டும். பொதுத் தரப்பட்டியலில் ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரே மதிப்பெண்களை பெற்றிருந்தால், அம்மாணவர் களுக்கான தர வரிசை, அதற்காக வரையறுக்கப்பட்ட முறையில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதன் பிறகு ஒருமுகமான கலந்தாய்வு மூலம் மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

இவ்வாறு இந்த சட்டமுன்வடிவில் கூறப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் விவாதங்களுக்குப் பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் சட்டம் நிறைவேறியது.

# 2007 ஜனவரி 1ஆம் தேதி முதல் அமலாகிறது மதிப்புக் கூட்டு வரி

1999ஆம் ஆண்டு நவம்பரில் நடந்த மாநில முதல்வர்கள் மாநாட்டில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் மதிப்புக் கூட்டு வரியை செயல்பாட்டுக்கு கொண்டு வரலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மேற்சொன்ன முடிவை செயல்படுத்தவும் கண்காணிக்கவும் மாநில நிதியமைச்சர்களை கொண்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு ஒன்று, மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. அக்குழுவானது, மதிப்புக் கூட்டு வரி சட்டத்தின் பரந்த அமைப்பையும், முக்கியப் பண்புகளையும் ஏற்றுக் கொண்டுள்ளது. 2004 ஜூன் 18ஆம் தேதி நடந்த இந்தக் குழுவின் கூட்டத்தில், 2005 ஏப்ரல் முதல் தேதியில் இருந்து செயல்வடிவம் கொள்ளும் வகையில், அனைத்து மாநிலங்களிலும் யூனியன் பிரதேசங்களிலும் மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்த வேண்டும் என்று ஒருமனதாக முடிவு செய்துள்ளது.

2006 – 2007 ஆண்டுக்கான தமிழக வரவு – செலவு திட்ட உரையில், 2007 ஜனவரி முதல் தேதியில் இருந்து இம்மாநிலத்தில் மதிப்பு கூட்டுவரி அறிமுகப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தை நீக்கம் செய்வதெனவும், இம்மாநிலத்தில் மதிப்புக் கூட்டு வரியை விதிப்பதற்காக உரிய சட்டம் ஒன்றை இயற்றவும் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான சட்ட முன்வடிவை மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. எஸ்.என்.எம்.உபயதுல்லா அவர்கள் 5.12.2006 அன்று சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தினார். குரல் வாக்கெடுப்பு மூலம் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

## அம்பேத்கர் திரைப்படத்திற்கு வரிவிலக்கு

ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட "டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்" திரைப்படம் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு திரையரங்குகளில் வெளியிடப்படும் நாளன்று அப்படத்தைத் தயாரித்த தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்திற்கு பத்து இலட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்கப்படுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1997ஆம் ஆண்டு அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து இப்படம் அகில இந்திய அளவில் அனைத்து மொழிகளிலும் டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட விருப்பதால் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட "டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்" திரைப்படத்திற்கு பத்து இலட்ச ரூபாய் நிதி உதவியுடன் கால வரம்பின்றி கேளிக்கை வரி விலக்களித்திட அனுமதித்து தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களை 1.12.2006 அன்று மலேசிய நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்கள் சந்தித்துப்பேசினார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களை 3.12.2006 அன்று, உலக ஊனமுற்றோர் தினத்தையொட்டி காதுகேளாதோர், கண் பார்வையற்றோர், உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநிலை குன்றியோருக்கான அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் சந்தித்து கோரிக்கை மனுவினை அளித்தனர்.



மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 128ஆவது பிறந்தநாளையொட்டி 10.12.2006 அன்று, சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பேரன் திரு. சி. ஆர். கேசவன் உள்ளார்.



மகாகவி பாரதியார் அவர்களின் 125ஆவது பிறந்தநாளையொட்டி, 11.12.2006 அன்று சென்னையில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கோ.சி.மணி அவர்கள் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் பனைத் தொழிலாளர் வாரியத் தலைவர் திரு. குமரி அனந்தன் ஆகியோர் மாலையணிவித்துமரியாதை செலுத்தினார்கள்.

# இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.616 கோடி அனுமதி

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பல ஆண்டுகளாக நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை இந்த ஆண்டிலேயே செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார்.

அதற்கிணங்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களுக்குட்பட்ட ஐந்து நகராட்சிகள் (இராமநாதபுரம், கீழக்கரை, பரமக்குடி, இராமேஸ்வரம் மற்றும் சிவகங்கை), 11 பேரூராட்சிகள் (இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர், மண்டபம், சாயல்குடி, கமுதி, அபிராமம், தொண்டி, ஆர்.எஸ்.மங்கலம் ஆகிய 7 பேரூராட்சிகள், சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர், இளையான்குடி, நெற்குப்பை ஆகிய 3 பேரூராட்சிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதி பேரூராட்சி) மற்றும் 3,163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வடிவமைக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியிருந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 30.11.2006இல் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ரூபாய் 616 கோடி அமைப்புச் செலவிலும், ரூபாய் 18.37 கோடி ஆண்டு பராமரிப்புச் செலவிலும் அமல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்து தொடங்கி வைத்துள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தில், பெரம்பலூர் மாவட்டத்தில் 8,234 நபர்கள் உதவித்தொகை பெற்று பயனடைந்து உள்ளனர். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து பதிவு செய்துள்ளவர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். இத்திட்டத்தின்படி 10ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் ரூ.150ம், +2 முடித்தவர்களுக்கு ரூ.200ம், பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு ரூ.300ம் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் இதுவரை 8,234 இளைஞர்கள் வேலைவாய்ப்பற்றோர்கான உதவித்தொகை வழங்க கோரி விண்ணப்பித்துள்ளனர். இதில் 4,685 ஆண்களும், 3,549 பெண்களும் அடங்குவர். இதுவரை மாவட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி. முடித்தவர்களில் 1,399 ஆதிதிராவிட இனத்தை

## பெரம்பலூர் மாவட்டத்தில் 8,234 இளைஞர்களுக்கு உதவித்தொகை

சேர்ந்தவர்களுக்கும், 1,514 இதர இனத்தவர்களுக்கும், +2 முடித்தவர்களில் 1398 ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவர்களுக்கும், 1,844 இதர இனத்தவர்களுக்கும் பட்டப்படிப்பு முடித்தவர்களில் 643 ஆதிதிராவிட இனத்தவர்களுக்கும், 750 இதர இனத்தவர்களுக்கும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் மாதாந்திர உதவித்தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் அனைவருக்கும் மாதாந்திர உதவித் தொகை வழங்கிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் அரசின் மாதாந்திர உதவித்தொகை மூலம் எதிர்காலத்தில் நிரந்திர வேலைவாய்ப்பினைப் பெற்றிட தங்களுக்கான ஊக்கத் தொகையாக தமிழக அரசின் உதவித் தொகை திட்டம் பயன் உள்ளதாக உள்ளது என தெரிவித்துள்ளனர்.

பெரம்பலூரில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. ஆ. இராசா அவர்கள், வேலைவாய்ப் பற்றோர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அனில் மேஷராம், இ.ஆ.ப., தலைமை வகித்தார்.

**த. மருதபிள்ளை**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்*

## திருநெல்வேலி மாவட்டத்தில்

# வாழ்ந்துகாட்டுவோம் திட்டம்

தமிழகத்தில் உலக வங்கி நிதி உதவியுடன் 15 மாவட்டங்களில் 2 ஆயிரத்து 432 பஞ்சாயத்துக்கள் பயன்பெறும் வகையில் ரூ.717 கோடி செலவில் "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு ஆற்றளிப்பு மற்றும் வறுமைக் குறைப்பு திட்டம் (வாழ்ந்து காட்டுவோம் திட்டம்) உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. ஆந்திரா, ராஜஸ்தான், சட்டீஸ்கர் போன்ற மாநிலங்களில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. தமிழகத்தில் இத்திட்டம் குறித்து உலக வங்கியுடன் கடந்த ஆண்டு மே மாதம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. உலக வங்கி வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இத்திட்டம் துவங்கப்பட்டு அடிப்படை பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏழை—எளிய மக்களுக்கு பயன்தரும் மக்கள் அமைப்புகள், குழுக்கள் உருவாக்குதல், ஏழைகளின் திறன்களை பல்வேறு பயிற்சிகள் மூலம் மேம்படுத்துதல், ஏழை மக்களை தொழிலின் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள நிதி உதவி அளித்தல் ஆகியவற்றை குறிக்கோள்களாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் ஏழை பெண்கள் மட்டுமின்றி இளைஞர்கள், நலிந்தோர் மற்றும் பழங்குடியினர், ஊனமுற்றோரை கொண்ட சுயஉதவி குழுக்கள் அமைக்கப்படும். தொழில் திறன்களை வளர்த்து வியாபார தொடர்பை ஏற்படுத்தி ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார வளத்தினை மேம்படுத்தலாம். மக்களே தங்களுக்குத் தேவையான திட்டங்களை முடிவு செய்து திட்டங்களை பணியாளர்களின் உதவியுடன் செயல் படுத்துவது மற்றும் கண்காணிக்கவும் செய்யலாம். கிராம பஞ்சாயத்துக்களுடன் இணைந்து செயல்பட்டு திட்டத்தை திறமையாக செயல்படுத்தும் பஞ்சாயத் துக்களுக்கு ஊக்க நிதி வழங்கப்படும். சுயஉதவி குழுக்கள் தொழில் தொடங்குவதற்கு 50 சதவிகிதம் மானியமாக சுயஉதவி குழுக்கள் தொழில் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. பெருவாரியான திட்ட நிதியை நேரடியாக கிராம மக்களே கையாளும் நிலை இத்திட்டத்தில் ஏற்படுகிறது. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை மக்களின் வரிசை அடிப்படையில் 15 மாவட்டங்களில் உள்ள 70 பஞ்சாயத்து யூனியன்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதி உதவி 541 கோடி ரூபாயாகும். இதில் தமிழ்நாடு அரசின் பங்கு 122 கோடியும், மக்கள் பங்கு 54 கோடியும் செலவிடப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி 717 கோடியாகும். திட்ட காலம் வரும் 2011ஆம் ஆண்டு வரையாகும். வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் நிருவாக அமைப்பானது மாநிலம், மாவட்டம், பகுதி மற்றும் கிராம அளவில் என்ற நான்கு நிலைகளை கொண்டு செயல்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட மாவட்ட வாழ்ந்து காட்டுவோம் சங்கம் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகவும், 12 பொதுக்குழு உறுப்பினர்களோடும் செயல்படும். இச்சங்கத்தின் உறுப்பினர் செயலாளராக மாவட்ட திட்ட மேலாளர் செயல்படுவார். மாவட்ட அளவிலான திட்ட செயலாக்கத்திற்கு உதவித் திட்ட மேலாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏழு நபர்கள் வீதம் நியமிக்கப்பட்டு செயல்படுவார்கள்.

கிராம அளவில் இத்திட்டத்தை செயல்படுத்த கிராம வறுமை ஒழிப்பு சங்கம் என்ற அமைப்பு அமைக்கப்படும். பஞ்சாயத்து தலைவரை, தலைவராக கொண்டு ஒவ்வொரு குக்கிராமத்தின் சார்பில் இலக்கு மக்களைக் கொண்ட சுயஉதவி குழுக்களில் இருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சங்கத்தின் உறுப்பினர்களாக



செயல்படுவர். இவர்களை தவிர ஒரு ஊனமுற்றோர் பிரதிநிதி, சுயஉதவி குழுக்களின் கூட்டமைப்பு செயலாளர், கிராம அளவில் உள்ள கமிட்டிகளில் இருந்து 2 உறுப்பினர்களை கொண்டு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் செயல்படும்.

இத்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மானூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பணி கரிசல்குளத்தில் 14.11.2006 அன்று நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு தெரிவித்ததாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் முதற்கட்டமாக மானூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பணிக்கரிசல் குளத்தில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் ஊராட்சி தலைவி திருமதி. ச. பொற்கொடி, வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர் திரு. தங்கராஜ் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் வாழ்ந்துகாட்டுவோம் திட்ட ஒப்பந்த கையெழுத்திட்டனர். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் ஒப்பந்த பத்திரத்தை ஊராட்சித் தலைவியிடம் ஒப்படைத்தார். இதனால் மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 41 கிராமங்களில் 90,199 நபர்கள் பயன்பெறுவார்கள். மேலும், பாளையங்கோட்டை, கடையம், கடையநல்லூர், குருவிகுளம், சங்கரன்கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 4,57,295 பேர் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் பயனடைய உள்ளார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

**உல. ரவீந்திரன்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருநெல்வேலி.*

### சிவகங்கை மாவட்ட

# மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மகளிர் நல மேம்பாட்டுக்கு நல்ல பல திட்டங்களை வழங்கியுள்ளார். மகளிர் இடையே சமூக கல்வி பொருளாதார மேம்பாடு அடையும் நோக்குடனும் அவர்களுக்கு அதிகார பகிர்வு வழங்கிடவும் மகளிர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதில் வெற்றியும் பெற்று வருகிறது.

மாவட்டத்தில் புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மகளிர் முன்னேற்றத்திற்கு குழுக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களில் மொத்தம் உள்ள உறுப்பினர்களில் 70 சதவிகிதத்திற்கும் அதிகமாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பவர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவி எஸ்.ஜி.எஸ்.ஒய்.திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. மகளிர் குழுக்களுக்கு விடுவிக்கப்பட்ட மானியத் தொகை மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினை சேர்ந்தவர் அல்லது பழங்குடியினர் வகுப்பினை சேர்ந்தவராக இருப்பவர்களுக்கு தாட்கோ திட்டத்தின் மூலம் மானியக்கடன் வழங்கப்படுகிறது. தாட்கோ திட்டத்தின் கீழ் மகளிர் குழுக்களுக்கு பொருளாதார கடன் வழங்கப்படுகிறது. சுழற்சி நிதி மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர நேரடி வங்கி கடன் உதவி வழங்கப்பட்டு வருகின்றது. மகளிர் சுயஉதவிக் குழுவில் அனைத்து உறுப்பினர்களும் பயிற்சிப் பெற்று சிறப்பாக செயல்படுகின்றனர். தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி மகளிர் குழுக்களுக்கு வங்கிகள் மூலமாக வழங்கப்படும் கடனை, நல்லவிதத்தில் பயன்படுத்தி அவர்கள் சிறந்த தொழில் முனைவோராக உருவாக வேண்டும் என்ற நோக்குடன் இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

வாழ்க்கை தொழில் கல்வி மகளிர் சுயஉதவிக் குழுவினர் தாங்களாக ஏதாவது ஒரு தொழிலை செய்து குடும்ப வருமானத்தை பெருக்கும் நோக்குடன் பயிற்சி அளிக்கப் படுகிறது. இதன் மூலம் பனை ஓலை, தையல், கயிறு திரித்தல், பூஜைப் பொருட்கள் தயாரித்தல், மெழுகுவர்த்தி, உணவு வகைகள், வீட்டு அழகு சாதனப் பொருட்கள் தயார் செய்தல் போன்ற பலவகையான பயிற்சியைப் பெற்று பயன் அடைகின்றனர். இலவச எரிவாயு இணைப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் சிவகங்கை மாவட்டத்தில் மகளிர் குழுக்கள் கல்வி, சமூக பொருளாதார மேம்பாடு அமையும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறப்பான திட்டங்களையும் நிதி உதவிகளையும் வழங்கியுள்ளார். மகளிர் குழுக்கள் அனைவரும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

**எஸ். நடராஜன்**
*செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,*
*சிவகங்கை*


குடும்பத்தில்
அனைவருக்கும்
கோ-ஆப்டெக்ஸின் ஜாலமே
சிறப்புத் தள்ளுபடி
30%
• பட்டு மற்றும் பருத்திப் புடவைகள் • வேட்டிகள் • லுங்கிகள்
• பருத்தி சுடிதார்கள் • படுக்கை விரிப்புகள் • துண்டுகள்
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் – கோ-ஆப்டெக்ஸ்




# தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08





